Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 22 ரூபா 14/00

දිනමුරසු වාරමලර් மே 18-24, 2003

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 511

## சமாதானத்துக்கான நிதியுதவியா?

## நிதியுதவிக்காக சமாதானமா?



## சண்டியருக்குப் போட்டியாக மூத்ரா!



## புதுவகை அலங்காரம்

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு


## மதங்களும் மனிதர்களும்

எல்லா மதங்களும் "வறுமைதான் ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்டது ஆகும்" என்று சொல்கிறது. இந்த உலகத்தில் ஏழைகள் மிக அதிகமாக இருப்பதற்கு மதங்களும் ஒரு முக்கிய காரணமாகும். மதவாதிகள் இந்த உலகம் முழுவதும் வறுமை, வியாதி, அறியாமை நிறைந்து இருக்க வேண்டும் என்று மன ஆழத்தில் ஆசைப்படுகிறார்கள். உங்கள் மதத்தின் உண்மையை நீங்களே தேடிக் கண்டு பிடிப்பதன் மூலம்தான் நீங்கள் உண்மையான இந்துவாக முடியும். கோயில்களின் அர்த்தம் புரியாமல் கோயிலுக்குச் சென்றால் வெறும் (கடவுளை) கல்லை வணங்கிவிட்டு வரும் நிலை தான் ஏற்படும். மனிதன் எப்படியோ அப்படியே அவனது மதமும் ஆகிவிடுகிறது. மனிதனின் குணங்கள் அவனது மதத்துக்கும் வந்துவிடுகின்றன.

ஒஸோவின் பொன் மொழிகளிலிருந்து

# ஆன்மீகம்

## கிறிஸ்தவ வாழ்வுக்குப் பரிந்துரை



சகோதர சகோதரிகளே! இறுதியாக எங்களுக்காக இறைவனிடம் வேண்டுங்கள். ஆண்டவருடைய வார்த்தை உங்களிடையே விரைந்து பரவிப் புகழ் பெற்றது. அது போல அது எங்கும் பரவிப் புகழ் பெறவும் தீயோர், பொல்லாதவர் கையினின்று நாங்கள் விடுவிக்கப்படவும் வேண்டுங்கள்; ஏனெனில் நம்பிக்கை எல்லாரிடமும் இல்லை.

ஆனால் ஆண்டவர் நம்பிக்கைக்குரியவர். அவர் உங்களை உறுதிப்படுத்தி, தீயோனிடமிருந்து காத்தருள்வார். நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்டதை நீங்கள் செய்கிறீர்கள்! இனியும் செய்வீர்கள் என்னும் உறுதியான நம்பிக்கை, ஆண்டவர் எங்களுக்குத் தருகிறார், கடவுளின் அன்பையும், கிறிஸ்துவின் மன உறுதியையும் அடைய ஆண்டவர் உங்கள் உள்ளங்களைத் தூண்டுவாராக!

ஆர். முகுந்தன்.

## இம்மை, மறுமை – ஈடேற்றம்

நாம் நமது குழந்தைகளுக்கு அச்சமூட்டுவதற்காகப் பேய், பூதங்கள் கதைகளைக் கூறி அவர்களுடைய அறிவை சிறு பருவத்தில் இருந்தே கெடுத்துவிடுகின்றோம்.

இதற்கு மாறாக நாம் பெரியோர்களின் வரலாறுகளையும் நாளை மறுமையில் அல்லாஹ்வுடைய தண்டனை, நரகவேதனை ஆகியவைகளையும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

இவைகளைக் கொண்டு அல்லாஹ்வுடைய அச்சம் அவர்கள் உள்ளத்தில் ஏற்பட ஆரம்பிக்கும். அவ்வச்சமானது இம்மையிலும், மறுமையிலும் இவர்களுக்கு ஈடேற்றம் தரும்.

குழந்தைகளுக்கு ஞாபக சக்தி அதிகம். சிறு பருவத்தில் பாடமிட்டது அவர்களுக்கு மறந்து போவதில்லை. அப்படிப்பட்ட பருவத்தில் நமது சிறுவர்களுக்கு அல்குர் ஆனை பாடஞ் சொல்லி வைக்கலாம். அதில் சகல துறை வழிகாட்டலும் உண்டு.

இந்த முறைகளை நாம் பின்பற்றாத காரணத்தினாலேயே நமது பிள்ளைகள் ஒழுக்கமும், மதப்பற்றும் அற்றவர்களாகி மனம் போன போக்கில் வாழ முற்படுகின்றனர்.

எம். சி. கலீல்–கல்முனை–05.

## கவிதைப் போட்டி இல. 508

பரிசுக்குரிய கவிதை

### எங்கே போதை?

வாங்கும்போது
கொடுக்கவில்லை!
திறக்கும் போதும்
இருக்கவில்லை!
இறங்கியதில் காணவில்லை!
ஊறியதில் உணரவில்லை!
உள்ளிருப்பதும் எஞ்சவில்லை!
வழிந்ததில் விழுந்ததோ?

ஆர். நிர்ஷன், இறக்குவானை.

### இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்



???

தண்ணி அடித்தால்
மனிதன் குரங்காவான்-இங்கு
குரங்கே தண்ணி அடித்தால்???

த. சங்கீதா–திருகோணமலை.

### விலை ஏறிய துன்பம்

"குபேரர்கள் இல்லத்தில்
குரங்கு கையில் பால் புட்டி!
ஏழைகள் இல்லங்களில்
'அங்கர்' வாங்கிட பணமில்லை!
அங்கே அலை அலையாய் இன்பம்!
இங்கே விலை ஏறிய துன்பம்!"

நா. ஜெயபாலன், பிபிலை.

### மதுவருந்திய மந்தி

மதிகெட்டு ஜீவன்களை
மதிப்பின்றி மாய்த்து நின்று
மமதை கொண்ட மந்தியொன்று
மதுவருந்தி மகிழ்கிறது.

செல்வி கௌசிகா
மகேந்திரன்–உடுவில்.

### சந்தோசம்..!

நான் மனிதனாக பிறக்கவில்லை...
அதனால்...
மனக் கவலை எனக்கில்லை..
அடிவயிறு பசித்ததில்லை....
அகதியாய் அலைந்ததில்லை...
மண் மீதும் பொன் மீதும்..
ஆசை எனக்கில்லை...
மற்றவரை...
ஆளும் எண்ணமும்...
அடிமைப்படுத்தும் ஆசையும் எனக்கில்லை..
அந்த சந்தோசத்தை...
சற்றுவித்தியாசமாக கொண்டாடுகின்றேன்...!!!

எஸ். ஜெகதீஸ்வரன்–நானாட்டான்.

### ஆசை

அமெரிக்க புஷ்ஷோ அரசியல்வாதி
அடுத்தவருடன் போருக்கோ தீவிரவாதி
மாறு வேடத்தில் குரங்காகி
மது குடிக்கிறான் அறிவாளி
அருகில் கிண்ணமிருந்தும்
அவசரமாய் அருந்திட
ஆசையுடன் போத்தலை
அப்படியே சுவைக்கின்றான்,

எஸ். எம். ரமீஸ்–அப்புத்தளையூர்.

### இது போல இங்கேயும்...

மங்கியின் செயலோ
மண் மீதில் கேடு.
மதுக்கிண்ணம் அது நாடின்
மன்னுக்கே கேடு.
இதுபோல இங்கேயும்
இருக்கின்றார் மனிதர்
இருப்பதால் தானின்னும்
இல்லையே மகிழ்வு...!

சி. மதியழகன்–திக்கம்.




### குணமாற்றம்

மரத்திற்கு மரம் தாவும்
மந்திக் குணம் உங்களுக்கும்
தாய்ப்பால் மறுத்துவிட்ட
தாழ்ந்த குணம் எங்களுக்கும்
இரண்டும் ஒழிந்தால் தான்
இவ்வுலகு முன்னேறும்.

வீ. அபிநயன்–பாண்டிருப்பு.

## கவிதைப் போட்டி இல.511



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 18.05.2003

கவிதைப் போட்டி இல.511
தினமுரசு வாரமலர், த.பெ. இல–1772, கொழும்பு.

### தாகம் தீர்க்குமா போதை?

விரக்தியின் வெளிப்பாட்டை
போதையில் காட்டிடும்
முற்கால மனிதா!
உன்-குணத்தினைக்
கொண்டிடும் தற்கால மனிதனின்
இரத்த தாகம் தீர்த்திடுமா
நீ அருந்திடும் பானமிது?

ப்ரியநேசி–களுத்துறை (தெற்கு)

### இதுதாண்டா உலகம்

பசித்த வயிற்றுக்கு!
புசிக்க உணவின்றி!
பாரில் இங்கு!
பலபேர் தவித்திருக்க...
கிண்ணத்தில் மது ஊற்றி...
எண்ணத்தை மறந்து..!!
போதையில் கண்சொருகும்!
வானரமே உன் வாழ்க்கை!
வந்திடாதோ எங்களுக்கு!

ஹப்புத்தளையூர்–மனோ
கோபாலன்.

### இன வழக்கம்

உங்களினம் நாங்களெனும்
உண்மை தெரிந்ததனால்
"நான் பால் தருவ தின்று
நாகரிகம் இல்லை" என
என் தாய் நினைத்தனளோ!
என் கையில் புட்டிப் பால்
தந்து ஒதுங்கி விட்ட
விந்தை இது பாரீரோ!

எம். மயூறிகா–பாண்டிருப்பு–01

### புரியவில்லை

காதலின் தோல்வியா..?
கல்யாணமாகி விவாகரத்தா..?
வாலிபத்தில் கோளாறா..?
அல்லது...
வாழ்வின் வறுமையா...?
சொல்-ஜீவனே...
மனவருத்தப்பட-நீ
மனிதப் பிறவி அல்ல...
பிறகென்ன மனக்கவலை...!

தமிழாம்பிகை–எஸ். ஜெகன்,
நானாட்டான்.

# உங்கள் பக்கம்

## ஏன் இந்தப் பாராமுகம்

மன்னார் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து வானிலை அவதான நிலையம், கல்வித் திணைக்களம், விவசாய உதவி ஆணையர் அலுவலகம், கால்நடை வைத்தியர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், மாவட்ட பதிவாளர் அலுவலகம் ஆகிய முக்கிய அலுவலகங்களுக்குச் செல்லும் "எஸ்பிளனேற் வீதி" நீண்ட காலமாகக் குன்றும் குழியுமாக கிடந்து அழிந்துகொண்டு போவது, இந்த வீதியில் சொகுசு வாகனங்களில் செல்லும் அரசாங்க அதிபருக்கும் மற்றைய அதிகாரிகளுக்கும் ஏன் தெரிவதில்லை?

இந்த வீதி, வீதி புனரமைப்பு திணைக்களத்திற்குரியது. நீண்ட காலமாக, மன்னார் மாவட்டத்தில் அரைகுறை றோட்டுப் போட்ட முன்னாள் பொறியியலாளர் மதியாபரணம், எதையுமே கண்டுகொள்ளாதவராக இருந்ததுபோல, தற்போதைய பொறியியலாளர் முரளியும் கண்டுகொள்ளாமல் இருக்கிறாரா? இந்த எஸ்பிளனேற் வீதியால் பயணம் செய்யும் மண்ணின் மைந்தர்களான அதிகாரிகளுக்கும் உணர்ச்சி தட்டுப்படவில்லையா? இவ்வீதியில் விழுந்து எழும்பி நடந்து போகும் மன்னார் மக்களுக்கே உணர்ச்சி தட்டுப்படவில்லை என்றால், எப்படி வாகனத்தில் துள்ளிக் குதித்துப் போகும் அதிகாரிகளுக்கு உணர்ச்சி தட்டப்போகிறது.

அடுத்து மன்னார் பஸ்தரிப்பு நிலையத்திற்குள் மதுக்கடை வைத்துக் கும்மாளமடிக்கும் மானங்கெட்ட செயலைத் தட்டிக் கேட்க யாருமில்லையா? பஸ்தரிப்பு நிலைய கடைகள், உள்ள அளவை விட முன் பக்கத்தால் நீண்டு வருவதும், மலசல கூடத்திற்குச் செல்லும் வழி கூட அடைக்கப்பட்டிருப்பதும் சம்பந்தபட்ட அதிகாரிகளுக்குத் தெரிவதில்லையா?

ஒட்டு மொத்தமாக மன்னார் பட்டினத்தைப் பட்டிக்காடாக்கிக் கொண்டிருக்கும் அரசாங்க அதிபர், அவர் வழிகாட்டலில் செயற்படும் உயரதிகாரிகளிடமிருந்து மன்னார் மக்களை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்.

எஸ்.சஞ்சீவ்-வயல் வீதி-மன்னார்.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்– உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:–1772, கொழும்பு.
தொலைபேசி: -074-514282
தொலை நகல் (Fax):–074-513266
ஈ–மெயில்: (E-mail):–
murasu@sltnet.lk


# வாசக[ர்] சாலை

**ஆசிரியர் அவர்களுக்கு,**

507வது முரசின் உங்கள் பக்கத்தில் படுகுழிக் குச் செல்லும் மன்னார் கல்வி வலயம் என்ற தலைப்பில் வெளியான அனைத்தும் உண்மையானது. "எக்ஸ்ரே" எடுத்ததுபோல வெளிக் கொண்டு வந்த முரசிற்குப் பாராட்டுக்கள். இது போன்ற ஊழல்களையும், கழுத்தறுப்புக்களையும் தொடர்ந்து வெளிக் கொணர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எ. பி. குரூஸ்-மன்னார்.

தினமுரசே, உன் உள்ளடக்கங்களைப் பார்த்து என் நெஞ்சினுள் ஆயிரம் பட்டாம்பூச்சிகள் சிறகடிக்கின்றன. எப்படித்தான் நீ இவ்வளவு காலமும் உன் பணியைச் சிறப்பாகச் செய்கிறாயோ என்றென்றும் புதுப் பொலிவுடன் வந்து என் உள்ளத்தையும் கொள்ளை கொள்கிறாய்! என்றும் உன் பணி தொடர என் வாழ்த்துப்பா மாலைகள்.

லரீபா அபூபக்கர்-அனுராதபுரம்.

**தேன் முரசே!**

தேனான அம்சங்களைத் தெவிட்டாத தமிழில் அள்ளித் தரும் தினமுரசே! உன்னில் உதயமாகும் அத்தனை அம்சங்களும் பிரமாதம். அதிலும் சிந்தியாவின் சிலிர்க்க, சிரிக்க வைக்கும் பதில்கள், கவிஞர்களுக்கு ஊக்கமளிக்கும் கவிதைப் போட்டி, சிறுவர்களுக்கு விருந்தளிக்கும் பாப்பா முரசு, சிந்தனைக்கு விருந்தளிக்கும் குறுக்கெழுத்துப் போட்டி அத்தனையும் எனக்குப் பிடித்தவை. முரசே! உனது சேவை எமக்கு எப்போதும் தேவை!

கலைப்பிரியன் வேணு-பெரிய நீலாவணை-01.

**அன்புள்ள முரசே**

நொஸ்ரடாமஸின் ஆருடங்கள் எம்மைப் பிரமிக்க வைக்கிறது. எம்மைப் பிரமிக்க வைக்கும் ராஜகுமாரனுக்கும் முரசு ஆசிரியர் குழாமிற்கும் எமது நன்றிகளும் வாழ்த்துக்களும்.

எஸ். மேவின்-மாவிலங்கேணி.

**அன்புள்ள முரசே,**

"நெஞ்சினில் என்ன காயமோ" என்ற உளவியல் தொடரை எழுதும் இரண்டு டாக்டர்களுக்கும் எனது நன்றிகள். பல நோய்களுக்குக் காரணமாக இருப்பது 'மன அழுத்தம்' என்பதே உண்மை.

வசந்தி, வவுனியா.

**அன்பின் தினமுரசே!**

மனித உரிமைகளின் பாதுகாவலர்களாகத் தம்மை விளம்பரப்படுத்திக்கொண்டு களுத்துறைக் கைதிகளுக்கு வந்த பணத்தைக் கையாடிய கயவர்களின் பெயர்களை அம்பலப்படுத்திய தினமுரசே! தொடரட்டும் உன் தூய பணி

பா. அந்தோனிப்பிள்ளை-யாழ்ப்பாணம்.

**ஆசிரியருக்கு,**

தகவல் பெட்டி, குறுக்கெழுத்துப் போட்டி உட்பட அனைத்து ஆக்கங்களும் என்னைக் கவர்ந்தவை. தினமுரசு மேலும் வளர என் இனிய வாழ்த்துக்கள்.

கிறிஸ்ரி, எழுத்தூர்.

# லொத்தர் சபையுடன் சமாதானத்துக்கு முடிச்சுப்போடுகிறது அரசு!

## சரியான நேரத்தில் பாராளுமன்றத்தைக் கலைப்பார் ஜனாதிபதி-மஹிந்த ராஜபக்ஷ

**அ**பிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையில் அரசாங்கத்தைக் கலைக்கப்போவது தொடர்பாக ஐ.தே.க. அமைச்சர்கள் கூறிவரும் கருத்துக்களை பரிகாசம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தையோ அரசையோ கலைப்பதாயிருந்தால் கூட அதையும் ஜனாதிபதிதான் செய்ய வேண்டும் என்று திட்டவட்டமாகக் கூறினார்.

ஜனாதிபதி பாராளுமன்றத்தையோ அரசாங்கத்தையோ சரியான நேரத்தில் கலைப்பார் என்று தெரிவித்த மகிந்த ராஜபக்ஷ அதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரமே இருப்பதாகத் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜயரட்ண செய்தியாளர் மாநாடொன்றில் உரை நிகழ்த்தியபோது அபிவிருத்தி லொத்தர் சபைக்கும் சமாதான முயற்சிகளுக்கும் இடையில் முடிச்சுப்போட்டு அரசாங்கம் மக்களைத் தவறான திசையில் இட்டுச் செல்வதாகக் குற்றஞ் சாட்டினார்.

### தலைநகரில் சுவரொட்டிகள்

சமாதானத்திற்கும் லொத்தர் சபைக்கும் என்ன தொடர்பு இருக்கிறதென்று அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையைப் பொறுப்பேற்க ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை எதிர்த்துத் தலைநகரில் பல இடங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

கொழும்பு மாவட்ட அபிவிருத்தி லொத்தர் சபை விற்பனையாளர் சங்கம் என்ற பெயரில் ஒட்டப்பட்டிருக்கும் இந்தச் சுவரொட்டிகளில் ஜனாதிபதியின் தீர்மானம் கண்டிக்கப்பட்டுள்ளதோடு அவர் மக்கள் ஆணைக்குத் தலை சாய்த்து நடந்துகொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

## சம்பூரில் வெடி விபத்து இரு புலிகள் பலி!

**தி**ருகோணமலை சம்பூர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் திங்களன்று காலை இடம்பெற்ற வெடி விபத்தொன்றின்போது குறைந்தபட்சம் 2 பேர் கொல்லப்பட்டு மேலும் இருவர் காயமடைந்தனர்.

கொல்லப்பட்ட ஒருவரின் சடலம் திருகோணமலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு காயமடைந்த ஒருவர் அதே மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

கொல்லப்பட்டவர் 20 வயது குணாளன் என்றும் காயமடைந்தவர், ரஞ்சித் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மற்றையவரின் சடலம் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு வரப்படவில்லை.

சம்பூர் 5ம் வட்டாரத்தில் உள்ள புலிகளின் ஆயுதக் கிடங்கொன்றில் ஏற்பட்ட வெடிப்பே இந்த அனர்த்தத்துக்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு எம்.பி.க்கள் வன்னியில் புலிகளுடன் சந்திப்பு!

**வெ**ளிநாடு சென்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரி நாடு திரும்பியுள்ள நிலையில் தமிழ் கூட்டமைப்பை உடனடியாக வன்னிக்கு வருமாறு புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நடைபெற ஏற்பாடாகி இருந்த இந்தக் கூட்டத்திலும் ஆனந்தசங்கரி பெரும்பாலும் கலந்துகொள்ள மாட்டாரென்றே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இம்முறை புலிகள் தம்மைச் சந்திக்க வரும் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் பல முக்கிய பிரச்சினைகளுக்கான பதிலைக் கோருவார்கள் என்று வன்னித் தகவல்கள் தெரிவித்திருந்தன.

மே தினத்தன்று யாழ்ப்பாணத்தில் புலிகளும் கூட்டமைப்பினரும் இணைந்து நடத்திய கூட்டத்தில் குறைந்தளவு பொது மக்கள் கலந்துகொண்டமைக்கான காரணங்கள் மற்றும் கூட்டணி தலைமைப் பொறுப்பிலிருந்து ஆனந்தசங்கரியை விலக்கப் புலிகள் விடுத்த உத்தரவைச் செயற்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாமை மற்றும் உயர் மட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் சந்திப்புகளில் தொடர்ந்தும் சங்கரி கலந்துகொள்வது உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து எம்.பி.க்கள் பதில் சொல்ல வேண்டி ஏற்படும் என்று தெரிய வருகிறது.

## புதிய தேர்தலை நடத்துமாறு அமைச்சரவை உறுப்பினர்கள் கோரிக்கை!

**பி**ரதமர் தலைமையிலான அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்குமிடையில் ஏற்பட்டுள்ள முரண்பாடு தீவிரமடையும் போக்குக் காணப்பட்டால் புதிய பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதே உசிதமானது என அமைச்சர்கள் பலரும் ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளதாகத் தெரியவருகிறது.

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் சூழ்நிலைகளை அடுத்து அமைச்சர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்கள்.

எவ்வாறெனினும் பொதுத் தேர்தல் நடைபெற்று ஒன்றரை வருடம் மாத்திரமே ஆகும் நிலையில் மற்றொரு தேர்தலை எதிர்கொள்வது தொடர்பில் பிரதான கட்சிகள் இரண்டினதும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் குழப்பமான நிலையே காணப்படுகிறது.

புதிய தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கத் தரப்பினர் கோரிக்கை விடுப்பது பொ.ஐ.முன்னணியை அச்சுறுத்தும் விதத்திலான ஒரு தந்திரோபாயமே எனத் தெரிவித்திருக்கும் எதிர்க்கட்சி வட்டாரங்கள் பாராளுமன்றத்தில் எண்ணிக்கை மாற்றம் ஒன்றின் மூலம் விரைவில் அதிகாரத்தைக் கைப்பற்றப்போவதாகக் கூறிவருகின்றன.

ஜே.வி.பி.யுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் அடுத்த வாரம் அளவில் கைச்சாத்திடப்படலாம் என்று செய்திகள் வெளியாகியுள்ள நிலையில் அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றமை சட்ட பூர்வமான நடவடிக்கையே என்று ஜே.வி.பி. வர்ணித்திருக்கிறது.

## அரச தலைவர்களுடன் கிரிஸ்ரினா றொக்கா பேச்சுவார்த்தை!

**இ**லங்கைக்கு விஜயம் செய்திருக்கும் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி ராஜாங்க அமைச்சர் கிரிஸ்ரினா றொக்கா ஜனாதிபதி, அரசாங்கத் தலைவர்களுக்கு மேலதிகமாக அஸ்கிரிய பீடத்தின் மாகாநாயக்க தேரரையும் சந்திக்க உள்ளதாகத் தெரியவருகிறது. கிரிஸ்ரினா றொக்கா திருகோணமலைக்கும் விஜயம் செய்ய உள்ளார். இவரைச் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்குவது தொடர்பில் சிக்கல் இருப்பதாக கண்டி அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் சார்பில் முன்னதாகக் கூறப்பட்டபோதிலும் பெரும்பாலும் இந்த சிரேஷ்ட அமெரிக்க இராஜதந்திரியை தேரர் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## துப்பாக்கிச் சூட்டில் காயம்

**ஈ**.பி.ஆர்.எல்.எப்.கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவரும் அவரது மனைவியும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்கானதில் படுகாயமடைந்து மட்டக்களப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அன்டனி தவராஜா (40) அவரது மனைவி பிரன்சிஸ் கதரினா ஆகிய இருவருமே காயமடைந்துள்ளனர்.

1995ம் ஆண்டு காலப்பகுதியில் இயக்கத்தை விட்டு விலகிச் சென்ற இவர் மத்திய கிழக்கில் தொழில் செய்துவிட்டு நாடு திரும்பி விவசாயம் செய்துகொண்டு வாழ்ந்தவர்.

இவரது வீட்டுக்கு முன்பாக வைத்தே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

## 'நம்பியாரின் அறிக்கை நடுநிலையானது' பீ.பீ.சி. பேட்டியில் டக்ளஸ், மாவை வரவேற்பு

**உ**யர் பாதுகபாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக ஓய்வுபெற்ற இந்திய இராணுவ ஜெனரல் சதீஷ் நம்பியார் தயாரித்துள்ள அறிக்கை நடுநிலையானது, ஏற்றுக்கொள்ளக்கூடியது என தமிழ்க் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டணியின் சிரேஷ்ட உப தலைவர்களுள் ஒருவருமான மாவை சேனாதிராஜா கூறியிருக்கின்றார்.

இது தொடர்பாக பீ.பீ.சி. தமிழோசைக்குக் கருத்துத் தெரிவித்த மாவை முன்னதாக சதீஷ் நம்பியாரின் ஆலோசனைகள் என்று கசிந்த விடயங்கள் தமிழ் மக்களுக்குப் பாதகமாக இருந்தது என்றும், பின்னர் தங்களையும் பொது அமைப்புகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய பிறகு அவர் தயாரித்து தற்போது வெளியிட்டிருக்கும் அறிக்கை நடுநிலையான, ஏற்றுக் கொள்ளக்கூடிய அம்சங்களைக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றார்.

இதே வேளை சதீஷ் நம்பியாரின் அறிக்கை குறித்து பீ.பீ.சிக்குக் கருத்து வெளியிட்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் இந்த அறிக்கையை வரவேற்றிருக்கிறார். இது மக்களின் மீள் குடியேற்றத்திற்கு வழி செய்யும் அதே வேளை புலிகள் தெரிவித்து வந்த குற்றச்சாட்டுகளுக்கான தீர்வையும் இராணுவத்தின் சந்தேகங்களுக்கான தீர்வையும் ஒருங்கே கொண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டுள்ளார்.

## தற்கொலை செய்துகொள்வதாக அச்சுறுத்தித் தப்பிச் செல்ல அனுமதிக்க முடியாது -ஒஸ்ரின் பெர்னான்டோ

**த**ற்கொலை செய்துகொள்வதாக அச்சுறுத்திவிட்டுத் தப்பிச் செல்லும் தந்திரோபாயத்தைப் புலிகள் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதை அனுமதிக்கக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெப்லிஸ்சனுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் கேட்டிருக்கிறார்.

கடந்த வாரம் திருகோணமலைக் கடற்பரப்பில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்ட புலி உறுப்பினர்கள் இருவர் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக அச்சுறுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கண்காணிப்புக் குழு வெளியிட்ட அறிக்கையில் இதனைப் போர்நிறுத்த மீறலாகக் கருதத் தவறியதையிட்டு, ஒஸ்ரின் பெர்னான்டோ தனது கடிதத்தில் விசனம் தெரிவித்துள்ளார். உடனடியாக இதனை சரி செய்யுமாறும் அவர் கண்காணிப்புக் குழுவைக் கேட்டிருக்கிறார்.

தொடர்ந்தும் ஆயுதங்களுடன் பயணிக்கும் புலிகள் தற்கொலை செய்து கொள்வோம் என்று மிரட்டித் தப்பிச் செல்வதை அனுமதிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள அவர், புலிகளின் அனாவசிய கடற் பயணங்களைத் தவிர்க்கவும் இவ்வாறான பிரச்சினைகள் தோன்றாமல் இருக்கவும் மாற்று வழிகள் குறித்து ஆராயுமாறு கேட்டிருக்கிறார்.

## மன்னாரில் தமிழ் இளைஞர் கடத்தல்

**ம**ன்னார், புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்து இளைஞர் ஒருவர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். சில காலம் புலிகள் இயக்கத்தில் இருந்துவிட்டுத் தப்பி வந்த இவர் அப்துல் ரகுமான் என்று தன்னை முஸ்லிம் இளைஞர் போல் அடையாளப்படுத்திக்கொண்டு மன்னார் பகுதியில் புலிகளுக்கெதிரான உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர் கடற்றொழிலும் செய்பவர். சம்பவ தினத்தன்று இன்னொரு முஸ்லிம் இளைஞருடன் கடலுக்குச் சென்றபோது புதுக்குடியிருப்புக் கடற்பரப்பில் வைத்து ஆயுதங்களுடன் வந்த ஐந்து புலிகள் இயக்க உறுப்பினர்களால் இந்த இளைஞன் கடத்திச் செல்லப்பட்டதாக அவருடன் கூடச் சென்ற முகமட் ஜசார் என்பவர் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

## நாம் இன்னமும் பிரதமருடனேயே! -முஸ்லிம் காங்கிரஸ்-

**அ**பிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சூழ்நிலை குறித்து ஆராய்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதிஉயர்பீடம் தொடர்ந்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனே இருப்பது என்று தீர்மானித்துள்ளது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் கூடிய அதியுயர்பீடம் சமாதான முயற்சிகளின் வெற்றிக்காக உழைக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு தொடர்ந்தும் பிரதமருக்குப் பக்கபலமாகச் செயற்படுவதெனத் தீர்மானித்திருக்கின்றது. இத் தீமானத்தைப் பிரதமருக்கு தெரிவிக்கும் முகமாக செவ்வாயன்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமைக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் சந்திப்பு ஒன்று நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

11ந் திகதி அவசரமாகக் கூடிய தமது கட்சியின் உயர்பீடம் எடுத்த தீர்மானத்துக்கு அமைய தாங்கள் இன்னமும் பிரதமருக்கு ஆதரவாகவே இருப்பதாக மு.கா.பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

# முரசம்

## அரசியல் குழப்பங்கள் அதிகாரப் பலப் பிரயோகங்கள்

*அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.*

இலங்கையின் அரசியலில் கொந்தளிக்கும் நிலைமைகள் தலைதூக்கி உள்ளன. ஒரு புறம் பேச்சுவார்த்தையில் பலத்த பின்னடைவு ஏற்பட்டுள்ளது. புலிகள் ஜப்பான் மாநாட்டுக்குப் போக மறுத்துள்ளதுடன் பேச்சுவார்த்தையிலிருந்தும் விலகிக்கொண்டுள்ளார்கள். அவர்களைச் சமாதானப்படுத்தும் இலங்கையின் முயற்சிகள் மட்டுமன்றி, சர்வதேச முயற்சிகளும் இதுவரை தோல்வியையே தழுவியுள்ளன. புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையே ஏற்பட்ட பிரதான தகராறுகளில் ஒன்றான உயர் பாதுகாப்பு வலயப் பிணக்கில் தீர்வு ஒன்றைக் காணும் முகமாக அரசாங்கத்தினது வேண்டுகோளின்படி இந்திய இராணுவ நிபுணர் சதீஷ் நம்பியார் முன்வைத்த ஆலோசனைகள், தற்போது அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டு, புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அவற்றையும் புலிகள் நிராகரிக்கும் நிலைமையே காணப்படுகிறது. இந் நிலையில் அரசு -புலிகள் முரண்பாடுகள் இறுகிச் செல்லும் நிலையே தோன்றிவருகிறது.

மறுபுறம் ஜனாதிபதியின் அதிகாரங்கள் பலப்பரீட்சையாகப் பிரயோகிக்கப்பட்டு அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்ட ரீதியாக இதற்கு அவருக்கு அதிகாரம் இருப்பினும் அது அரசாங்கத்தின் செல்வாக்கை குறைப்பதாக அமைந்து அரசாங்கத் தரப்பில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படுவதைத் தடுக்கும் வண்ணம் அரச அச்சகமும் மூடப்பட்டுள்ளது. இந் நிலைமையைக் கையாள ஜனாதிபதி தனது அதிகாரத்தை மேலும் அதிகளவு பயன்படுத்த முனையும் போது அரசியற் குழப்பங்கள் வலுக்கவே செய்யும். அரசாங்கம் இதற்கு ஒத்துப்போகும் நிலையிலும் இல்லை. இப்போது ஏற்பட்டிருக்கும் குழப்பங்கள் ஆட்சி மாற்றத்திற்கோ அல்லது புதிய தேர்தலுக்கோ இட்டுச் செல்லலாம். இந் நிலையில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகள் என்னாகப் போகிறது என்ற அச்சம் சகலரதும் மனதிலும் இப்போது தோன்றியுள்ளது.

ஏற்கனவே சமாதான முயற்சிகளில் குறைபாடுகள் பல உள்ளதாகவும் யுத்த நிறுத்த மீறல்கள் தொடர்வதாகவும் பல்வேறு தரப்பினர்களால் குறை காணப்பட்டு வந்தது. இவற்றைச் சீராக்குவதற்குப் பதில் பாழாக்கும் வகையிலேயே சம்பந்தப்பட்ட தரப்புகள் நடந்துகொள்வது துரதிர்ஷ்டவசமானதாகும்.

■ ■

*மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன், ஆசிரியர்.*

---

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# நம்பியார் கொண்டு வந்தது என்ன?

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிநிற்க முடிவெடுத்துள்ளதால் எழுந்துள்ள அரசியல் ஈடாட்டத்துக்கு மத்தியில், பலத்த தாக்கம் கொண்ட நிகழ்வுகள் இப்போது தொடராக இலங்கை அரசியலில் நிகழ்ந்தேறி வருகின்றன. ஒருபுறம் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு அழைத்து வரும் பெரும் பிரயத்தனத்துடனான சர்வதேசமட்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்துள்ளன. பிரதானமாக, ஜப்பான் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டின் ஏற்பாட்டாளர்களான ஜப்பான், புலிகளிடம் தமது விசேட பிரதிநிதியான யசூசி அகாஷியை அனுப்பிப் புலிகள் தலைவரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியும் கூட புலிகள் தமது பழைய நிலைப்பாட்டிலிருந்து சிறிதும் மாறவில்லை.

பதிலாக, ஏழு நாள் கெடு விதித்து அதற்குள் அரசாங்கம் தாம் கோரிய விடயங்கள் அனைத்துக்கும் சாதகமான நடவடிக்கைகள் எடுப்பதற்கான உறுதியளிக்க வேண்டுமெனத் தெரிவித்துள்ளனர்.

இதனையிட்டு அரசாங்கத் தரப்புப் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவர் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்குமெனச் சம்பிரதாயத்தனமாக நம்பிக்கை தெரிவித்தாலும், நடைமுறையில் புலிகளின் கோரிக்கைகளைச் செயற்படுத்துவது அரசாங்கத்துக்கு உடனடிச் சாத்தியமில்லை என்பதே உண்மை.

அதனால் ஜப்பான் பேச்சுவார்த்தைகளில் புலிகள் பங்குபற்றும் வாய்ப்பு மிகமிக அரிதானதாகவும், அரசாங்கத்துக்குப் பெருத்த இக்கட்டைத் தருவதாகவும் ஆகியுள்ளது.

புலிகளைப் பொறுத்தவரையில் ஜப்பான் பேச்சுவார்த்தையானது, அரசாங்கம் சமாதான நிலைமையையும் புலிகளின் வருகையையும் சாதகமாகப் பயன்படுத்தி, தனது தேவைக்கான நிதியைச் சர்வதேச நாடுகளிலிருந்து ஈட்டிக்கொண்டு தென்னிலங்கைக்குச் செலவு செய்யும் தந்திரமாகவே கருதுகின்றனர்.

புலிகளின் ஆலோசகரும் பேச்சுவார்த்தைக் குழுத் தலைவருமான அன்ரன் பாலசிங்கம் யசூசி அகாஷியுடனான சந்திப்பை அடுத்து நிகழ்த்திய பத்திரிகையாளர் மாநாட்டிலும் இதே கருத்தை நேரயாடியாகவே தெரிவித்திருந்தார்.

புலிகள் வலியுறுத்திவரும் கடல் வலய அங்கீகாரம், தமது கடற்படைகளுக்கான அங்கீகாரம், அவை அக் கடற்பரப்பில் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான அனுமதி ஆகியவற்றையிட்டு சாதகமான பதில் அரசாங்கத் தரப்பிலிருந்து வரப் போவதில்லை என்பதும் உறுதியாகிவிட்டது.

ஒருபுறம் எதிர்க்கட்சிகள் கிளர்ந்தெழுந்து "அந்தோ நாட்டின் இறைமை பறிபோகப்போகிறது" என்று ஆரவாரம் செய்கின்றன.

இந்த ஆரவாரத்திற்கு சிங்கள மக்கள் எடுபட்டு விடுவார்கள் என்ற அச்சம் அரசாங்கத்திற்கும் பற்றிக் கொண்டுவிட்டது.

பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன இது குறித்துக் கூறுகையில், புலிகளின் கடற்படையை மட்டுமல்ல இராணுவத்தைக்கூடத் தாம் அங்கீகரிக்க போவதில்லை என்றும் ஆனால் புலிகளிடம் கடற்படையும் இராணுவமும் இருப்பது என்ற உண்மை யாவருக்கும் தெரிந்தது என்றும் கூறியுள்ளார்.

இதன் மூலம் அரசாங்கம் இத்தகைய அங்கீகாரம் ஒன்றை வழங்கப்போவதில்லை. என்பது வெளிப்படையாகிவிட்டது.

புலிகளின் கோரிக்கைகளில் பிரதானமான ஒரு விடயம், யாழ் உயர் பாதுகாப்பு வலயங்களில் இருந்து படைகளை அகற்றி இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீள் குடியேற்றம் செய்வதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது.

இதில் யாழ். சுபாஸ், ஞானம்ஸ் ஹொட்டேல்களில் இருந்து படைகளை யாழ் கோட்டையை அண்டிய பகுதிகளுக்கு இடம் மாற்றுவது பற்றிய ஒரு திட்டத்தை அரசாங்கம் முன்வைத்திருந்தும், அது மக்கள் குடியிருப்புப் பகுதி எனக் கூறி புலிகளால் முழுமையாக நிராகரிக்கப்பட்டுவிட்டது.


ஆனால் அதுவும் கூட தாம் கோரிய உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்களைக் குடியேற்றும் கோரிக்கைக்கு சம்பந்தப்படாத சிறியதொரு விடயமே எனவும் அதை பெரியதொரு நடவடிக்கையாகக் காட்டி அரசாங்கம் உலக நாடுகள் மத்தியில் நற்பெயரை ஈட்டிக்கொள்ள முனைவதாகவும் புலிகள் நோக்குகின்றனர்.

இந் நிலையில்தான் இப்போது உயர் பாதுகாப்பு வலயம் குறித்த முன்னாள் இந்திய இராணுவத் துணைத்தளபதி லெப்டினட் ஜெனரல் சதீஷ் நம்பியாரின் அறிக்கை வெளிவந்துள்ளது. இந்த அறிக்கையை சதீஷ் நம்பியார் வழங்கியபோது பாராளுமன்றத்தில் அது குறித்து எவ்வித கருத்தையும் தெரிவிக்காமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தவிர்த்துக்கொண்டதுடன் பாதுகாப்புக் காரணங்களுக்காக அதனைத் தாம் வெளியிடவில்லை எனத் தெரிவித்தார். அதைப் பார்வையிட விரும்பும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அலரிமாளிகைக்கு வந்து பார்வையிடலாம் எனக் கூறினார்.

ஆனால் இவ்வளவு பெரிதுபடுத்தி, பரமரகசியமாகக் காட்ட முற்பட்ட அவ்வறிக்கையின் விடயங்கள் சகல பத்திரிகைகளிலும் விலாவாரியாக வெளிவந்துவிட்டன.

இவ்வறிக்கை பிரதமருக்கு மட்டுமன்றி ஜனாதிபதிக்கும் கூடவே வழங்கப்பட்டிருந்தது. அதனால் அதனைப் பாதுகாப்புக் கருதி வெளியிட முடியாது எனப் பிரதமர் கூறியது அர்த்தமற்றதாக அமைந்திருந்தது.

எனினும் அவர் அவ்வாறு ஏன் கூறினார் என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று. ஏற்கனவே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தம்மை புறந்தள்ளுபவையாக இருக்கின்றன என்ற சந்தேகத்துடன் உள்ள புலிகளுக்கு சதீஷ் நம்பியாரின் இவ்வறிக்கை மேலும் கோபத்தைத் தூண்டிவிடலாம் எனவும் அதை எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பத்திரிகைகளும் ஊதிப் பெருப்பித்துப் புலிகளைக் குழப்பி விடலாம்



எனவும் அவர் கருதியிருக்கலாம்.

ஆனாலும் அவர் விரும்பியோ விரும்பாமலோ அது வெளிவருவதும் அதைப்பற்றிப் பலரும் பல கோணத்திலும் ஆராய்வதும் தவிர்க்க முடியாமல் நிகழ்ந்தே ஆகும்.

நம்பியாரின் அறிக்கை புலிகளின் கோரிக்கையான உயர் பாதுகாப்பு வலயத்தைச் சுருக்கி, இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றம் செய்வதையே இலக்காகக் கொண்டு வரையப்பட்டுள்ளது என்பதும் உண்மையே.

அத்தகைய உயர் பாதுகாப்பு வலயத்தைச் சுருக்குவதற்கான வழிவகைகள் பலவற்றை அவர் முன்வைத்துள்ளார். அதனையும் கட்டம் கட்டமாக மேற்கொள்வதற்கான படிநிலைகளையும் அதில் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் பார்க்கப்போனால் புலிகள் கூறிய விடயத்தோடு நம்பியாரும் ஒத்துப்போயிருக்கிறார் என்றே கூறலாம்.

புலிகள் உண்மையில் மக்களின் மீள் குடியேற்றத்தை மட்டுமே மனதில் கொண்டு, இதை அவர்கள் கூறுவது போலவே ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாகப் பார்ப்பதானால் இந்த ஆலோசனைகளுக்கு அவர்கள் உடன்படாது இருக்க நியாயமில்லையென்றே தோன்றும்.

ஆனால் அது அவ்வாறாக அமையுமா என்பதில் பெருத்த சந்தெகம் உள்ளது.

ஏனெனில் நம்பியாரின் அறிக்கையில் உயர் பாதுகாப்பு வலயமானது இத்தனை பெரிய பரப்பைக் கொண்டிருக்க வேண்டியதற்கான இராணுவ தரப்பின் நியாயம், புலிகளின் நீண்ட தூர ஆயுதங்களின் வீச்செல்லைக்கு அப்பால் இருக்க வேண்டிய பாதுகாப்ப நோக்கமே என அடையாளங் காணப்பட்டு, இவ் ஆபத்தைக் களைவதற்கான மார்க்கமாகப் பிரதானமாகப் புலிகளின் நீண்ட தூர ஆயுதங்கள் உயர் பாதுகாப்பு வலயத்தை எட்டாத வகையில் வரையறை செய்யப்பட்ட ஒரு பிரதேசத்தில் சர்வதேச கண்காணிப்பாளர்கள் அல்லது சர்வதேச பொலிஸாரின் கண்காணிப்பில் வைக்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதே வகையான ஆலோசனைகள் முன்னரும் நம்பியாரின் அறிக்கையில் உள்ளதாகக் கசிந்தபோது அன்ரன் பாலசிங்கம் மிகக் கடுமையான தொனியில் அதனை நிராகரித்திருந்தார்.

இதில் புலிகளின் நீண்ட தூர ஆயுதங்கள் பற்றிய விபரங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய இராணுவ இரகசியம் தொடர்பான பிரச்சினை புலிகளுக்கு உள்ளது. அத்துடன் தமது ஆயுதங்களைப் பிறர் கண்காணிப்பில் வைப்பது என்பதைப் புலிகள் ஏற்க மறுப்பர். இதனால் சதீஷ் நம்பியாரின் ஆலோசனைகளின் மையமான இவ்விடயம் புலிகள் தரப்பால் நிராகரிக்கப்படக்கூடிய நிலைமை கண்கூடாகத் தெரிகிறது.

அத்தோடு புலிகளின் திடீர் தாக்குதல்கள் குறித்தும் இராணுவத்துக்கு இருக்கக் கூடிய அச்சத்தைப் போக்கும் வகையில் உயர் பாதுகாப்பு வலய எல்லைப் பகுதியில் கண்காணிப்பாளர்கள் அலுவலகங்களை நிறுவ வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் கண்காணிப்புக் குழுவினரின் அதிகாரங்களை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்களின் ஆளணிகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்கள் கடல் மார்க்கமாகவும் வான் மார்க்கமாகவும் கண்காணிப்பில் ஈடுபட வழிவகைகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்து உள்ளார்.

மேலும் புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் சிபார்சு செய்துள்ளார்.

இவற்றைப் பார்க்கும்போது ஒரு வகையில், அதாவது கொள்கை அடிப்படையில் புலிகளின் கோரிக்கையான உயர் இராணுவ வலயப் பாதுகாப்பைக் குறைத்து, மீள் குடியேற்றத்தை மேற்கொள்ளும் நோக்குடன் இவ்வாலோசனைகள் கூறப்பட்டிருந்தாலும் புலிகளைப் பொறுத்த வரையில் மக்கள் குடியேற்றத்திற்கு இது வழிவகுக்கிறதோ இல்லையோ தம்மைப் பெருமளவு கட்டுப்படுத்திவிடும் மந்திரக் கயிறாக இது அமைந்துவிடும் என்றே நிச்சயமாக நோக்கப்படும்.

இவ்வாலோசனைகளைப் புலிகள் நிராகரிப்பது ஏறத்தாழ உறுதி என்பது தெரிகின்றது.

கடந்த தடவை சதீஷ் நம்பியாரின் ஆலோசனைகள் எனக் கசிந்தவற்றை அன்ரன் பாலசிங்கம் நிராகரித்தபோது, மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையைப் புலிகளின் இராணுவ சமபல நிலையோடு பொருத்திப் பார்க்க வேண்டாம் எனக் கூறியிருந்தார்.

அதையே இப்போது திரும்பவும் அவர்கள் கூறலாம். அத்துடன் அண்மையில் ஜப்பானிய விஷேட பிரதிநிதி யசூசி அகாஷியை புலிகள் தலைவர் பிரபாகரன் சந்தித்ததை அடுத்த பத்திரிகையாளர் மாநாட்டின்போதும் அன்ரன் பாலசிங்கம் எமது நாட்டின் சிக்கல்களைத் தீர்க்க கையாலாகாதவர்களாக, வெளி நாட்டவர்களை நாடுகின்ற நிலைக்குச் சென்றிருப்பது அரசாங்கத்தின் பலவீனத்தையே காட்டுகின்றது எனத் தெரிவித்திருந்தார்.

எனவே புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து பின்னடித்துவிட்ட இந் நிலைமையில், சீராக்குவதற்கு உகந்த வகையில் ஏதாவது நிகழுமா என எதிர்பார்ப்பதற்கு மாறாக அவர்கள் மேலும் மேலும் பின்நோக்கிச் செல்வதற்கே நிகழ்ந்துவரும் விடயங்கள் யாவும் வழிகோலுவதாக உள்ளது.

இந் நிலையில்தான் அரசாங்கம் புதியதொரு குழப்பத்துக்குள்ளாகி, புலிகளின் மீள் வருகையைக் குறித்து எதையும் செய்ய முடியாதவர்களாக ஆகியுள்ளனர்.

ஜனாதிபதி திடீரென அரசாங்கத்தின் பொறுப்பிலிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை தான் பொறுப்பேற்றுள்ளமை அரசாங்கத்துக்கு பெருத்த தலையிடியைக் கொடுத்துள்ளது.

இது ஒரு ஜனாதிபதியின் அதிகாரத்தின் அடையாளகரமான சம்பவம் மட்டுமே என்றாலும் அரசாங்கத்தின் உயிர்நாடியே கேள்விக் குறியாக்கிவிடும் தாற்பரியம் மிக்க ராஜதந்திர நகர்வாகும். அடுத்து ஏற்படக்கூடிய பாரிய அரசியல் நகர்வுகளை இட்டு முழுக் கவனத்தையும் ஒன்றுகுவிக்க வேண்டிய நிலையில் உள்ள அரசாங்கம் இதற்கு மத்தியில் புலிகளின் மீள் வரவை உறுதிசெய்வது அசாத்தியமானதாகியுள்ளது.

ஜப்பான் மநாட்டில் அரசாங்கம் கனவுகண்டபடி வெற்றிகளை ஈட்டிக்கொள்ள முடியுமா என்பது மட்டுமன்றி, அதுவரை அரசாங்கம் தன்னை நிலைநிறுத்திக்கொள்ள முடியுமா என்ற குழப்ப நிலைமைகள் தோன்றியுள்ள இக் கட்டத்தில் பேச்சுவார்த்தை என்பது எவ்வளவோ தூரத்துக்கு பின்தள்ளப்பட்டுவிட்டது என்பதே துர்ப்பாக்கியகரமான இப்போதைய உண்மையாகும். ◻

# வெளிநாட்டு இராஜதந்திரிகளின் படையெடுப்பு!



யசூஷி அகாஷி



அப்துல் கையூம்

சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட தினத்திலிருந்து இன்று வரையில் பத்துக்கும் மேற்பட்ட வெளிநாட்டு இராஜதந்திரிகள் சமாதானப் பேச்சுக்களுடன் தொடர்புடைய விடயங்களுக்காக இலங்கை வந்து சென்றுள்ளார்கள். இன்னும் பலர் வரவிருக்கின்றார்கள்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசியப் பிராந்திய விவகாரங்களுக்குப் பொறுப்பான பிரதி இராஜாங்க அமைச்சர் கிரிஸ்ரினா றொக்கா ஞாயிறன்று கொழும்பு வந்தார்.

**வைஸ் அட்மிரல் ஜேக்கப் இந்திய கடற்படையின் தென் பிராந்தியத்துக்குப் பொறுப்பான தளபதியாகச் செயற்பட்டவர். கிட்டு பயணித்த கப்பலை இந்திய கடற்படை வழிமறித்தபோது பிராந்தியத்தின் கடல் வலயத்துக்குப் பொறுப்பாக இருந்தவர் இவரே.**

இதிலுள்ள மற்றொரு கவனிக்கத் தக்க விடயம் யாதெனில், புலிகளை எதிரிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் நோக்கும் இடங்களில் இருந்துதான் அரசு அதிக அளவிலான உதவிகளையும் ஆலோசனைகளையும் கோரி நிற்கின்றது.

உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆலோசனை பெறுவதற்காக சதீஷ் நம்பியாரின் உதவி நாடப்பட்டபோது புலிகள் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இப்போது நம்பியார் அறிக்கை தயாரித்து வெளியிட்டிருக்கிறார். தமிழ்க் கட்சிகளும், புலிகள் சார்பு ஊடகங்களும் தெரிவித்துவரும் கருத்துக்களை நோக்குமிடத்து நம்பியாரது அறிக்கையின் ஆலோசனைகள் பெரும்பாலும் புலிகளால் நிராகரிக்கப்படும் என்றே தெரிகிறது. உண்மையில் அந்த அறிக்கையைப் புலிகள் நிராகரிப்பதில் கூட பிரசார ரீதியிலான இலாபம் அரசாங்கத்துக்குத்தான்.

மறுபுறம் கடலில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்க ஆலோசனை வழங்கும்படி ஓய்வுபெற்ற இந்திய உதவி கடற்படைத்தளபதியான பி.ஜே.ஜேக்கப்பை அரசு கோரியிருந்தது.

வைஸ் அட்மிரல் ஜேக்கப் இந்திய கடற்படையின் தென் பிராந்தியத்துக்குப் பொறுப்பான தளபதியாகச் செயற்பட்டவர். கிட்டு பயணித்த கப்பலை இந்திய கடற்படை வழிமறித்தபோது பிராந்தியத்தின் கடல் வலயத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்.

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கீசன், எரிக் சொல்ஹெய்ம். ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி, சதீஷ் நம்பியார், வைஸ் அட்மிரல் பி.ஜே. ஜேக்கப், அமெரிக்க பிரதி இராஜாங்க அமைச்சர் கிரிஸ்ரினா றொக்கா, ஐ.நா.செயலாளர் நாயகம் கொபி அனானின் விசேட தூதுவர் ஜெ.ஃப்ரி செவிஸ், ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி குஷ்னஹெரன் என்று பட்டியல் நீண்டு செல்கிறது.

மாலைதீவு ஜனாதிபதி மஃமூம் அப்துல் கையூம் வந்து போனார். அவரது விஜயம் சமாதான முயற்சிகளோடு நேரடியாகத் தொடர்புபடாவிட்டாலும் இங்கு தங்கியிருந்த காலப்பகுதியில் அவர் சமாதான முயற்சிகள் தொடர்பாகத்தான் இந்நாட்டுத் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் சினவத்ரா அடுத்த வாரம் இலங்கை வரவிருக்கின்றார். பௌத்த மத வைபவம் ஒன்றில் கலந்துகொள்வதற்காக அவர் இங்கு வருகின்ற போதிலும் "தாய்லாந்து" எனும் சமாதான முயற்சி பற்றிக் கதைக்காமல் இருப்பாரா?

இதற்கு மேலதிகமாக நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீட்டர்சன் 15ம் திகதி இலங்கை வருகிறார். அவர் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திப்பார் எனக் கூறப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பிரதிநிதிகள் என பலரும் புலிகளைச் சந்தித்து வருகின்றனர்.



ஹெல்கீஸன்



சொல்ஹெய்ம்




சின்வத்ரா



கிரிஸ்ரினா றொக்கா



சதீஷ் நம்பியார்



பீட்டர்சன்



குஷ்னஹெரன்



பீ.ஜே. ஜேக்கப்

பேச்சுக்களில் இருந்து புலிகள் தற்காலிகமாக விலகுவதென அறிவித்ததன் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைவரங்கள் தொடர்பாக விளக்கி பிரதமர் பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தியபோது நாம் ஏற்படுத்திய சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பு எமக்கு மிகவும் பயன்படுகிறது. என குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச பாதுகாப்பு வலயமைப்பு என்று பிரதமர் குறிப்பிட்டது இந்த வெளிநாட்டு இராஜதந்திரிகள் அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவு பற்றிய விடயமாகத்தான் இருக்க வேண்டும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலோ அவ்வாறில்லாமலோ இங்கு வருகை தந்து சமாதான முயற்சிகளின் தேக்க நிலை குறித்துக் கலந்துரையாடும் ஒவ்வொருவர் மூலமாகவும் புலிகளுக்கு ஒரு உறுதியான செய்தியைக் கூற அரசு முயற்சித்ததாகத் தெரிகிறது.

வன்னி சென்று தமிழ்ச்செல்வனையோ அன்ரன் பாலசிங்கத்தையோ சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் வெளிநாட்டவர்கள், அன்பான அடக்கமான தொனியில் மீண்டும் பேச்சுக்களில் கலந்துகொள்ளுமாறு புலிகளுக்கு அழைப்பு விடுக்கின்றனர். இவற்றால் உள்ளூர மகிழ்ச்சி கொண்டிருக்கும் அரசாங்கம் மேலும் மேலும் வெளிநாட்டுத் தொடர்புகளை அதிகரிப்பதில் அக்கறை காட்டி வருகின்றது.

புலிகள் மீண்டும் போரை ஆரம்பித்தால் தங்களுக்கு உதவக் காத்திருக்கும் நாடுகளின் பட்டியல் ஒன்றை அமைச்சர் பீரிஸ் சமீபத்தில் கூறினார்.

பாதுகாப்பு ஏற்பாடுகளில் தளர்வுகளைச் செய்ததும், தெற்கில் புலிகளின் நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்காமல் விட்டதும் சர்வதேச சமூகத்தின் மீது வைத்த நம்பிக்கையில்தான்!

**பாதுகாப்பு ஏற்பாடுகளில் தளர்வுகளைச் செய்ததும், தெற்கில் புலிகளின் நடமாட்டங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்காமல் விட்டதும் சர்வதேச சமூகத்தின் மீது வைத்த நம்பிக்கையில்தான்!**


யாரையும் சந்திக்காமல் எவருக்கும் பதில் சொல்லும் கடப்பாடில்லாமல் இருந்த புலிகளுக்கு இந்த வெளிநாட்டுப் படையெடுப்புகள் நிச்சயம் தலைவலியாகத்தான் இருக்கும் என்று கருத இடமுண்டு.

கிரிஸ்ரினா றொக்கா, ஜான் பீட்டர்சன் போன்றோரின் விஜயத்துக்கு மத்தியில் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திடீரென லண்டன் சென்றுள்ளார். சுகயீனம் காரணமாக அவர் அவசர அவசரமாகத் திரும்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சிறுநீரகப் பிரச்சினைகளுக்குச் சிகிச்சையளிக்கும் வசதி கொழும்பில் உண்டு என்பதும் கவனிக்கத் தக்கது.

எவ்வாறாயினும் புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகுவதாக அறிவித்து 15 நாட்கள் ஆகின்றன. போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கையில் இருந்து ஒரு தரப்பு விலகுவதாக இருந்தால் இரு வாரங்களுக்கு முன்னர் அறிவிக்க வேண்டும்.

இந் நிலையில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த சில இடங்களில் இருந்து புலிகள் வாபஸ் பெறுவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## அதிரடி அய்யாத்துரை



**நம்பியாற்ர** அறிக்கை நடுநிலையானதெண்டு மாவையார் முந்திவிழுந்து பீ.பி.சியில முழங்கித் தள்ளினாரெல்லே. நாங்களே சும்மாயிருக்கிறம், அவற்ர அறிக்கையில உவருக்கென்ன அவ்வளவு அக்கறையெண்டு ரெண்டெழுத்தார் கடுப்பாயிட்டினமாம். வட் டு டு? அக்கரையில பெமிலியெண்டால் அக்கறைப்பட்டுத்தானே ஆகவேணும்? இப்ப அடுத்த வன்னிக் கூட்டத்துக்கு அழைப்பும் வந்திட்டுது. முழுசாட்டமாக் கிடக்காம் ஆளுக்கு.

**லொத்தரில** இத்தின விஷயமெண்டு இப்பதான் விளங்கிச்சுது எனக்கு. நாலெண்டால் இங்க ஒவ்வொரு லொத்தரா எடுத்தெடுத்து, அதிஷ்டம் இந்தா விழும் அந்தா விழுமெண்டு வாய்பாத்துக் கொண்டிருக்க, ஜனாதிபதி ஒரேயடியா லொத்தர் சபையையே கைக்குள்ள எடுத்திட்டாவே பாருங்கோ! ம், அதிஷ்டம் எந்தப் பக்கம் விழப்போகுதோ, .... பொறுத்திருந்துதான் பாக்க வேணும்!

**யார் ஆளுறது,** யார் கட்டளையிடுறது, யாருக்கு யார் கட்டுப்படுறதெண்டே தெரியாதபடி எல்லாந் தலை கால் மாறி நடக்குது. ஜனாதிபதி லொத்தர் தனக்குத்தானெண்டு உத்தரவு போட, ஊடக அமைச்சர் அதை அச்சடிக்க விடாமல் தங்கட அச்சகத்தத் தாங்களே பூட்டிச் சீல் வைக்கிறார். இதுக்கு நீதிக்குப் பொறுப்பான அமைச்சர் மேதினக் கொந்தளிப்பில சனம் செய்த ஆர்ப்பாட்டத்தாலதான் அச்சகத்தப் பூட்ட நேர்ந்ததா, மேதினம் முடிஞ்சு எட்டுநாள் கழிஞ்சதும் தெரியாதவர் கணக்காச் சனத்துக்குப் பூச் சுத்துறார். எங்க போய் முட்டுறது தலையை?

**சீரியஸாப்** போய்க்கொண்டிருக்கிற லொத்தர் பிணக்குக்கு நடுவிலயும் ஒரு எங்கட புரட்சிக் கம்யூனிஸ்ட் தலைவர் விக்கிரமபாகு சொன்ன ஜோக்கக் கேட்டுச் சிரிக்க ஏலுமோ பாருங்கோ. லொத்தர் பிரச்சினையால வெளிநாட்டு நிதியுதவி கிடைக்கத் தடை ஏற்படுத்திட்டினமாம் எண்டெல்லோ இப்ப ரீவியில வந்து சொல்லுறார். சரிதான்! அப்ப ஏன்பாருங்கோ, இதே திருவாயால, முதலாளித்துவ நாடுகளிட்ட ரெண்டெழுத்தாரும் சேர்ந்து பிச்சை பாத்திரம் ஏந்திறதா நக்கலடிச்சவராம் முந்தி? என்ன பொலிசியோ! கண்டிக்கிறதே பொலிசியெண்டால், கை நீட்டினால் பிரம்பு, கைவிட்டுப் போனால் கரும்பு!

**ஜப்பான்** மாநாட்டுக்கு ரெண்டெழுத்தார் வருவினமா இல்லையாவெண்டு மே 15க்குள்ள சொல்லச் சொல்லி ஜப்பான் கெடுவிதிக்க, உலகத்துப் பெரும் பெரும் ராஜதந்திரிகளெல்லாம் ஒட்டுமொத்தமா இலங்கைக்குப் படையெடுக்க, ரெண்டெழுத்தாற்ற பேச்சுவார்த்தையாளர் பாலசிங்கம் உடல் சுக வீனமெண்டு லண்டனுக்குப் பிளேனெடுத்தால் என்னாகப் போகுதாம் கதை...? எண்டு கேட்டதுக்கு ஒருத்தர் சொன்னார் இப்பிடி. மரம் சரிய முன்னம் நிலஞ் சரிஞ்ச கணக்கா, இங்க அரசாங்கமே கவிழ்ந்திட்டெண்டாலாவது புண்ணியம். ஏதோ, பொல்லாப்பில்லாமல் போகும் பழி!

# NAVEEN CERAMIC

தரமான

☛ Wall Tiles, ☛ Floor Tiles

மற்றும் **குளியலறை உபகரணங்களை**

*Spain, Italy, Thailand, Malaysia, India, Indonesia போன்ற நாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்து விநியோகிப்பவர்கள்*




**Naveen Ceramic** No.307, George R.De Silva Mawatta, Kotahena, Colombo-13. Sri Lanka. Tel : 345197-8

**எமது புதிய காட்சியறை**
184-A, Havelock Road, Colombo-05.
Tel :01-507334

500ற்கும் மேற்பட்ட அழகிய, பல வர்ண, வடிவங்கள் உங்கள் தெரிவுக்காக எம்மிடம் உண்டு.

# 50ம் ஆண்டு திருமண நிறைவுப் பொன்விழா



**திரு-திருமதி சின்னத்துரை-ஜெர்மாவதி (ஜெயமணி)**

மணநாள்:– 23.05.1953 இடம்:– பிரான்ஸ்

காலம்:– 23.05.2003

## நல்வாழ்த்து

இறையன்பின் வழிவந்த - எங்கள்
இனிய தாய் தந்தையராகிய
உங்கள் இருவரினதும்
உளமகிழ்வான இந்த
ஐம்பதாவது திருமண வாண்டு - இனிய
நிறைவு நன்னாளான இன்று...-

எங்கள் அன்பிற்கும் அபிமானத்திற்கும்
மதிப்பு மரியாதைக்கும் உரிய - இனிய
பெற்றவர்களாகிய, அப்பா 'துரை' அம்மா 'வதி'
இருவரினதும் இம்மகிழ்வான நன்னாளில் -
எங்கள்
இதயங்கள் முழுதும் இன்சுவை மகிழ்ச்சி...

ஐம்பது வருடம் முன்னே
அழகிய இளங் கிளிகள் நீங்கள் - இன்று
ஐம்பதைத் தாண்டினாலும் - அஃதே
அழகொடும் அன்போடும் இளமையாக..-
இனி வருங் காலங்களிலும் - நீங்கள்
இருவரும் இனிதுற நூறு வாழ
எங்களின் இனிய வாழ்த்தை - நீங்கள்
இன்புறத் தந்தோம்.

**வாழ்க! வாழ்க வாழ்கவென வாஞ்சையுடன் வாழ்த்துவோர்கள்.**

பிள்ளைகள், திரு-திருமதி ஜெயராஜா-ஜெயந்தி குடும்பம் (யாழ்ப்பாணம்), திருமதி வசந்தி குடும்பம் (லண்டன்), திரு-திருமதி. கந்தசாமி-செவ்வந்தி குடும்பம் (பிரான்ஸ்), திரு-திருமதி. புவனேஸ்வரன்-சாந்தி குடும்பம் (பிரான்ஸ்), திரு-திருமதி. ஆனந்தன்-ஆனந்தி குடும்பம் (லண்டன்), திருமதி றுபேந்தி குடும்பம் (கனடா), திரு-திருமதி ரட்ணசிங்கம்-பவானி குடும்பம் (பிரான்ஸ்), திரு-திருமதி ரவீந்திரன்-சூரியலதா குடும்பம் (பிரான்ஸ்), திரு-திருமதி யூட்-சுமதி குடும்பம் (யாழ்ப்பாணம்), திரு-திருமதி. குலேந்திரன்-நொசிற்றா குடும்பம் (பிரான்ஸ்), பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள், பேரன்புமிக்க உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

**தகவல் :-**
குலேந்திரன் (குலேன்), (மகன்), பிரான்ஸ்
T.P. 0623414336

# காண்டம்

உங்கள் வாழ்க்கையை சந்தோஷமாக்குங்கள். காண்டம் என்னும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலாபலனை தெளிவாக அறிந்து எல்லாப் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு வழிகண்டு கடவுள் அருளால் நன்மை பெறுங்கள். நேரில் வரவும். வெளி நாட்டில் உள்ளவர்களும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S.Mani**
142-2/4, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு-06.
சந்தைக்கு எதிர்ப்பக்கமாக

**Tel: 074-519754**

# விளம்பரப் பகுதி

## தினமுரசு சந்தா விபரம்

**சந்தாக் கட்டண அதிகரிப்பு விபரம்**

இலங்கையில் தபால் கட்டண அதிகரிப்பு காரணமாக சந்தாக் கட்டணமும் உயர்த்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமான விபரம் பின்வருமாறு:

| நாடுகள் | ஒரு வருடம் | 6 மாதம் | 3 மாதம் |
|---|---|---|---|
| ஐரோப்பிய நாடுகள் | ரூ. 3000 | ரூ.1500 | ரூ.750 |
| அமெரிக்கா, கனடா | ரூ. 3650 | ரூ.1800 | ரூ.900 |
| மத்திய கிழக்கு நாடுகள் | ரூ. 2600 | ரூ.1300 | ரூ.650 |
| உள்ளூர் | ரூ. 850 | ரூ.450 | ரூ.250 |

சந்தா செலுத்தி தபாலில் தினமுரசு வாரமலரை பெற விரும்புவோர் D.D. Enterprises எனும் பெயரில் எழுதப்பட்ட காசோலைகள் அல்லது வங்கிக் கட்டளை களை முகாமையாளர் தினமுரசு 16A, Nelson Place, Wellawatta, Colombo-06. Srilanka என்ற முகவரிக்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். இந்த முகவரிக்கு வந்து நேரில் பணம் செலுத்தவும் முடியும்.
ஈ–மெயில்: (E-mail):– murasu@sltnet.lk

# இலங்கையில் அற்புத மலையாள மாந்திரீக சக்தி



**மலையாள மாந்திரீக சித்தர் பேராசிரியர். டாக்டர் P.K சாமி (J.D.G.AN) JP அவர்களைச் சந்தியுங்கள்.**

1. பிரிந்தவர் ஒன்று சேர.
2. காதல் கைகூட.
3. கணவன் மனைவி ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருக்க.
4. காதலன் காதலி தேடிவர.
5. எதிரியின் தொல்லை இன்றி நிம்மதி பெற.
6. குபேர வாழ்வு பெற.
7. குழந்தைப் பாக்கியம் பெற.
8. திருமணம் தோஷ நிவர்த்தி பெற. 9. வலம்புரி மகாலட்சுமி கடாட்சம் பெற.
10. ஓடிப்போனவர் தேடிவர. 11. வெளிநாட்டுப் பிரயாணம் தடை நீங்க.
12. தீராத நோய் தீர. 13. தெய்வீக சக்தியால் ஔடதம் மூலம் கூந்தல் வளர.
14. கடன் தொல்லை சிறுக சிறுக குறைய. 15. கையில் பணம் சேர.
16. அதிஷ்ட வீடு கட்ட.



## ★ லண்டன் அன்பரின் மடல், என் இனியவள் என்னிடமே வந்தாள்

மதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து, என்னைப் பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை மீண்டும் என்னிடத்தில் வந்து சேர வைத்தமைக்கு ஆயிரம் நன்றிகள்.

## ★ ஜேர்மனி அன்பரின் மடல், தெய்வீக சக்தியில் பேசும் மழலை

மனித தெய்வமே! உங்களின் தெய்வீக சக்தியினால் பேசாத எம் 03 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்தத்தில் மூழ்க வைத்த உங்களுக்குக் கோடானு கோடி நமஸ்காரங்கள்.



## ★ மட்டக்களப்பு அன்பரின் மடல், துரித கதியில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தங்களின் அருள் சக்தியின் மூலம் நீண்ட காலமாகத் தடைப்பட்டு வந்த எனது வெளிநாட்டுப் பிரயாணம் தங்களோடு தொடர்பு ஏற்படுத்திய பின் உங்கள் சக்தியினால் துரித கதியில் எனக்கு வாய்ப்புக் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

## ★ மாத்தளை அன்பரின் மடல், கை கூடிய திருமணம்.

ஐயா அவர்களுக்கு, திருமணம் செய்ய இஷ்டமில்லாமல் இருந்த எனது மகளுக்கு திருமணத்தில் விருப்பம் தெரிவித்து, ஒரு வெளிநாட்டு வரனைத் தங்கள் கிருபையால் தந்து நல்லபடியாகத் திருமணத்தை முடித்துத் தந்தீர்கள். எங்களது மனமார்ந்த நன்றிகள்.

## ★ கொழும்பு அன்பரின் மடல், தீய பழக்கத்தில் இருந்து மீட்பு.

மதிப்புக்குரிய ஐயா அவர்களுக்கு, தீய பழக்கம் உள்ள எனது தம்பியை மீட்டு, அவருக்கு புது வாழ்வும், அவருடைய மகளுக்குத் திக்கு வாய் குணமடையவும், எனது மைத்துனிக்கு கிடைக்க வேண்டிய காசு கிடைக்கவும், எனது மைத்துனனின் மகன் வெளிநாடு செல்லவும் தங்கள் அருள் சக்தியின் மூலம் நிறைவேற்றிய உங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

## ★ லெபனான் அன்பர் வரைந்த மடல், மனநோயில் இருந்து மீட்பு.

கனம் மதிப்புக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு. நீண்ட காலமாக இருந்து வந்த எனது நோய் பூரணமாகச் சுகம் பெற்று இவ்வுலகில் என்னையும் ஒரு சாதாரண பெண்ணாக வாழ வழியமைத்துக் கொடுத்து நீண்ட நாள் நரக வேதனையில் இருந்து மீட்டுத் தந்தமைக்கு நன்றிகள்.

## ★ யாழ்ப்பாணம் அன்பரின் மடல், அச்சொட்டான ஜாதக பலன்.

ஐயா அவர்களுக்கு என்னுடைய ஜாதக பலனை விரிவாக அறியத் தந்தீர்கள். தாங்கள் கூறியது போல் அனைத்தும் நிகழ்வதையிட்டு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். என்றென்றும் உங்களுக்கு நன்றி.

## ★ சுவிற்ஸர்லாந்து சுரேஷின் மடல்.

அன்புள்ளம் கொண்ட ஐயாவுக்கு, சுரேஷர் எழுதிக் கொள்வது. ஆச்சரியமும் ஆனந்தமுமாய் இருக்கிறது உங்கள் சேவை. நான் பணம் அனுப்பி. என் பிரச்சனையை தொலைபேசி வாயிலாக "என் காதலியை அழைத்துத் தாருங்கள். அவள் இல்லாமல் என்னால் வாழ முடியாது." என்ற எனது அழுகைக் குரலுக்கு மனமிரங்கி, தொலைபேசி வாயிலாகவே ஒரு மணி நேரத்திற்குள் 7000 மைலுக்கு அப்பால் இருந்து நீங்கள் செய்த அருள் சக்தி மாந்திரீகத்தின் சக்தியால் என் காதலி என்னை வந்து அடைந்து விட்டாள். தங்கள் சேவை மீண்டும் மீண்டும் மக்களுக்குக் கிடைக்கத் துர்க்கையின் ஆசீர்வாதங்கள்.

## ★ சுவிஸ் அன்பரின் மடல். நீண்டு வளர்ந்த கூந்தல்

ஐயா அவர்களுக்கு, நீண்ட காலமாக முடி உதிர்ந்து முடி கட்டையாகி வெளியில் செல்ல முடியாது வெட்கப்பட்டுக் கொண்டிருந்த எனக்கு உங்கள் அருள் சக்தியின் மூலம் கூந்தல் நீண்டு கறுப்பாய் இருக்க அருள்புரிந்தீர்கள். ஐயா! உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

## ★ ஒப்டன் அன்பரின் மடல். சுகமாகிய புற்றுநோய்.

ஐயா அவர்களுக்கு, நீண்டகாலமாக புற்று நோயால் அவதிப்பட்ட என் மனைவிக்கு தங்களின்அருள் சக்தியின் மூலம் பூரணமாக சுகம் கிடைத்தது. எங்கள் வாழ்வில் ஒளி வீசிய உங்களுக்கு கோடான கோடி நமஸ்காரங்கள்.

## உங்கள் விதியைத் தெரிந்து கொள்ள

உங்கள் குறைகளை திட்டவட்டமாக, தெளிவாக மாந்திரீகத் துறையில் 41 வருடங்களாகத் தனக்கென ஒரு பாணியை அமைத்துத் தன்னடக்கத்துடன் சேவை புரியும். P.K. சாமி ஐயா அவர்களைக் கண்டு உங்கள் குறைகளை நீக்கி வாழ்வில் வெற்றி பெறுங்கள். அது மட்டுமா வாழ்வில் தோல்வியில் துவண்டு ஐயாவின் ஆசீர்வாதம் பெற்றபின் வெற்றி பெற்றவர்களின் திட்டவட்டமான, தெளிவான, நூற்றுக்கு நூறு உண்மையென உங்களால் உறுதி செய்யப்பட்ட ஜாதக விவரணம்.

சாஸ்திரம். இது தர்மத்திற்கு இணையானது. தர்மத்தை மிஞ்சிய விதி இல்லை. விதியின் விவரணம் சாஸ்திரம். சாஸ்திரத்தின் சாம்ராஜ்யம் மலையாளம் கொச்சியம். மலையாளத்தின் மகத்துவம் மாந்திரீகம். மாந்திரீகத்தின் அரசர், பேராசிரியர் டாக்டர் P.K. சாமி ஐயா அவர்கள் இது ஒரு மயங்க வைக்கும் மாத்திரை அல்ல. மாயா ஜால வித்தையும் அல்ல. பரிபூரண மலையாள துர்க்கையின் தெய்வீக அற்புத அருள் கடாட்சமே.

அருள் ஞானத்துடன் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. உங்களுக்கு நடந்தது. நடக்கப்போவது நடக்க இருப்பது, உங்கள் விதியின் விவரணம் என்ன? அன்றைய வருடம் எப்படி? அன்றைய மாதம் எப்படி? அன்றைய நாள் எப்படி? என்பதை அறியவும்.

குறிப்பாகச் "செய்யும் தொழிலை செய்யாதவன் கெட்டான். செய்யத் தெரியாத தொழிலை செய்தவனும் கெட்டான்" என்ற வாக்கியத்திற்கு ஏற்ப உங்களின் தொழில் எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்ளவும். உங்களின் குழந்தையால் உங்களுக்கு யோகமா? உங்கள் திருமணம் எப்பொழுது? எங்கு நடைபெறும். எத்தனையாம் திகதி? என்ற விபரங்களை அறிந்து கொள்ள வேண்டுமா? உங்களின் இல்லம் வாஸ்து சாஸ்திர முறையில் அமைய வேண்டுமா? உங்கள் பிறப்பின் இரகசியம் அறிந்து கொள்ள காண்ட அடிப்படையில் ஜாதகம் எழுதிக் கொள்ளவும்.

## ★ஜேர்மனி அன்பர் அனாவின் மடல், பிரிந்த குடும்பம் ஒன்று கூடியது.

கருணை மிகுந்த கண்ணியத்துக்குரிய ஐயா அவர்களுக்கு, என்றென்றும் உங்கள் நல்லாசிகள் எனக்குத் தேவை. ஐயா ஒரு வருடமாக எனது கணவர் வேற்று மத பெண்ணோடு தொடர்பு ஏற்பட்டதால் தினமும் என் கணவனால் நொந்து, வெந்து கொண்டிருந்தேன். என் மன வேதனையை என் தோழியிடம் கூறி ஆறுதல் தேடும்போது அவர் மூலமாக உங்களின் சக்தியை அறிந்து கொண்டு, தங்களோடு தொடர்பை ஏற்படுத்தி என் நிலைமைகளை விளக்கினேன். உங்கள் சக்தியால் ஸ்ரீ துர்க்கையின் பூரண அருள் கிடைக்கப் பெற்று, ஐயா இப்பொழுது என் கணவர் மனம் திருந்தி என்னிடமே வந்து விட்டார். என்னோடு மிகவும் பிரியமாகவும் அன்பாகவும் நடந்து கொள்கின்றார். எனது வாழ்வில் நான் நிம்மதியாகவும், சந்தோசமாகவும் இருக்கின்றேன். எல்லாம் உங்கள் அருள் சக்தியின் மகிமையால் நடந்தது. எனது வாழ்க்கையில் ஒளி ஏற்படுத்திய உங்களுக்கு எனது ஆயிரமாயிரம் நன்றிகள்.

## ★ கனடா அன்பரின் மடல், புத்தி பேதலித்தவர் பூரண நலம்

பெருமைக்குரிய டாக்டர் ஐயா அவர்களுக்கு, எனது மகளுக்கு 07 வருட காலமாக இருந்த மனப்பிரச்சனை, மனப் பயம், பைத்தியம் அனைத்தும் உங்கள் தெய்வ அருளால் பூரண சுகம் கிட்டியது. உங்களுக்கு எனது நன்றிகள்.

## ★ டென் மார்க் அன்பரின் மடல், அதிசயிக்கத் தக்க முடி வளர்ச்சி

அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் தலைமுடி உதிர்வதைத் தடுத்து, நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழி காட்டியமைக்கு என்றென்றும், தங்களுக்கும் துர்க்கை அம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**உலக மாந்திரீக சக்கரவர்த்தி.**

**Prot. Dr. P.K Samy ( J.D.G.AN) J.P.**
Sri. Durgadevi. mantharika Utchada Peedam,
162. Kotahena Street. Colombo-13.
T.P. 342464, 344832, 342463, 470615, 431137. Fax: 0094-1-344831.
E.mail: drpk samy . @ sttnet.lk.

பார்வை நேரம் கொழும்பில் காலை 8.00-6.00 மணிவரை
வெளிநாட்டவர் தொ.பே. தொடர்பு காலை 6.00 இரவு 9.00 மணிவரை மட்டுமே. (இலங்கை நேரப்படி)
நுவரெலியாவில் காலை 8.00-6.00 மணிவரை

நுவரெலிய கிளை.

33, Daily Fair Complex, Kandy Road, Nuwara - Eliya.
(நுவரெலியாவில் மட்டுமே கிளை உண்டு.)
T.P. 052 -22508, 35097, 23093, Fax: 009452-22508
w.w.w. imexpo lanka . com. drpk samy.

# ஜனாதிபதியின் அதிகாரப் பிரயோகம்! அதிரவைத்துள்ள அரசியல் களம்!

ஜனாதிபதி சென்ற வெள்ளிக்கிழமை திடீரென அபிவிருத்தி லொத்தர் சபையை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சிலிருந்து தனது பொறுப்புக்குக் கைமாற்றுவதாகத் தீர்மானித்து வர்த்தமானி அறிவித்தலொன்றை விடுத்தது அறிந்த விடயம். அந்த வர்த்தமானி அறிவித்தல் அச்சிடப்படாதவாறு, அரச அச்சகம் அரசாங்கத் தரப்பினரால் மூடிச் "சீல்" வைக்கப்பட்ட விடயம் தொடர்ந்த விடயம். ஜனாதிபதியின் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக அரசாங்கத் தரப்பில் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருவதும், அவ் அறிவிப்பு அரசியல் யாப்புக்கு முரணானதெனவும், அதைத் திரும்பப் பெறும்படியும் பிரதமர் ரணில் ஜனாதிபதியைக் கோரியிருப்பதும் வெளிப்படையான விடயங்கள்.

ஜனாதிபதி இந் நடவடிக்கையை எடுத்த தருணமானது, இலங்கை அரசியல் இக்கட்டுக்குள் சிக்கியிருந்த தருணமாகும். பிரதானமாக, புலிகளின் பின்வாங்கலையடுத்துப் பேச்சு



வார்த்தை என்னாகப் போகிறதென்ற கேள்வி எழுந்திருந்த தருணம். புலிகளை வழிக்குக் கொண்டுவரும் அரசாங்கத்தின் முயற்சிகள் தோல்வியடைந்து, சர்வதேச முயற்சிகளும் தோல்வியடைந்து, புலிகளின் இறுதி முடிவை மே 15ம் திகதிக்குள் அறிவிக்க வேண்டுமென உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்த ஜப்பான் காலக்கெடு விதித்திருந்த நேரமாகும். அதேவேளை புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து பின்வாங்கிய 14ம் நாள் இம்மாதம் 14ம் திகதியுடன் முடிவடைகிறது. யுத்த நிறுத்தத்திலிருந்து ஏதாவது ஒரு தரப்பு விலகுவதாயின் 14 நாள் முன்னறிவித்தல் கொடுக்கப்பட வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. புலிகள் யுத்த நிறுத்தத்திலிருந்து விலகப்போவதாக எவ்வித அறிவித்தலும் வழங்காவிட்டாலும், அரசாங்கத்தின் பக்கத்தில் எதற்கும் ஒரு எச்சரிக்கை உணர்வுடன் இந் நாட்களை எதிர்நோக்குவது அவசியமாகியுள்ளது.

இதேவேளை, அரசாங்கம் மிகப் பிரயத்தனத்தின் மத்தியில் உலக நாடுகளைத் திருப்திப்படுத்தி அதன் உச்சப் பெறுபேறாக எதிர்பார்த்திருந்த ஜப்பான் உச்சி மாநாடு ஜூனில் நிகழ ஏற்பாடாகியுள்ளது. அதில் புலிகள் கலந்துகொள்ள மறுப்பது அரசாங்கத்துக்கு எதிர்பார்த்த நிதியுதவியைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது. இந் நிலையில் ஜனாதிபதியின் இந் நடவடிக்கை ஏற்படுத்தியுள்ள சர்ச்சை இலங்கையின் ஸ்திரத்தன்மை பற்றிய பலத்த கேள்விகளை உருவாக்கி, உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் தயக்கத்தை ஏற்படுத்திவிடக்கூடிய நிலைமையும் தலைதூக்கியுள்ளது.

அதே வேளை மற்றொரு லொத்தர் சபையான தேசிய லொத்தர் சபையை, கேள்விப் பத்திரங்கள் எதுவும் கோராமலே நோர்வேயிடம் கையளிக்க உத்தேசிக்கப்பட்டு வந்ததாகவும் பலத்த வதந்தி நிலவியதுடன், இது குறித்து அரசாங்கத் தரப்பினரிடையேயே பெரும் வாக்குவாதங்களும் பிணக்குகளும் நிலவி வந்தன. வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க, நிதியமைச்சர் சொக்ஸி போன்றோர் இது விடயமாக அமைச்சர் மிலிந்த மொறகொடவுடன் பலத்த சர்ச்சையிலீடுபட்டிருந்தனர். இதற்கு மத்தியில் அமைச்சர் மிலிந்த மொறகொடவின் பொறுப்பிலுள்ள விடயங்கள் சில அமைச்சரவை மறுசீரமைப்பின்போது மாற்றியமைக்கப்படவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வந்தன.


இந் நிலைமையில்தான் ஜனாதிபதி அமைச்சர் மிலிந்த மொறகொடவின்கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனது பொறுப்பில் எடுத்துள்ளார். அவரைப் பொறுத்தவரையில், இரண்டு காரணங்களை முன்வைக்கிறார். ஒன்று, இந்த லொத்தர் சபை ஏற்கெனவே தன்னிடம் இருந்த ஒன்றெனவும், அது அமைச்சரவைக்கான பொறுப்புகள் பகிரப்படும்போது தவறுதலாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்குப் பகிரப்பட்டுவிட்டதெனவும், அத் தவறைத் திருத்தி அதைத்தான் இப்போது தனது பொறுப்பில் எடுத்துக்கொள்வதாகவும் கூறுகிறார். இரண்டாவதாக, தனது ஜனாதிபதி நிதியின் கீழ் கல்வித்துறை சார்ந்த புலமைப் பரிசில்கள், சுகாதாரத் துறை சார்ந்த மருத்துவ நிதியுதவிகள், கலாசாரத் துறை சார்ந்த விழாக்கள், பட்டமளிப்புகள், பரிசளிப்புகள் மற்றும்



தேசிய வீரர்கள், சாதனையாளர்கள், விஞ்ஞானிகள் ஆகியவர்களுக்கான கௌரவிப்புகள், ஊக்குவிப்புகள் போன்ற விடயங்கள் வருவதாகவும், அவற்றுக்கான நிதி வளங்கள் இந்த லொத்தர் சபை மூலமே உத்தரவாதப்பட்டிருந்ததாகவும், அதனால் அதனைத் தான் பொறுப்பேற்க வேண்டியுள்ளதாகவும் கூறுகிறார். இந்த லொத்தர் சபை மூலமான நிதி வளங்கள் தடுக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தரப்பில் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன.

இந்த லொத்தர் சபையைத் தான் பொறுப்பேற்பது, அமைச்சர் மிலிந்த மொறகொடவின் நிர்வாகத்தில் குறை காண்பதற்கல்ல எனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஆனால் இது அரசாங்கத்துக்கு ஒரு பலத்த அடியாக அமைந்ததென்பது மட்டும் மறுப்பதற்கில்லை. இவ்வாறு ஜனாதிபதி தனது அதிகாரத்தின் சக்தியைத் திடீரென வெளிப்படுத்தியதானது, தான் அடுத்துச் எடுக்கவுள்ள அதிரடி நடவடிக்கைகளுக்கான ஒரு சோதனை முயற்சியேயென அரசியல்



அவதானிகள் கருதுகிறார்கள்.

ஜனாதிபதியின் இந் நடவடிக்கைக்கு அரசாங்கம் எதுவும் செய்ய முடியாதிருக்குமானால், அமைச்சர்களின் அதிகாரங்கள் பற்றி ஓர் ஏளனமான பார்வையே வெளித்தோன்றும். பாதுகாப்பு அமைச்சு, உட்துறை அமைச்சு போன்றவற்றில் படையினர் மத்தியில் அமைச்சர்கள் மீதான விசுவாசத்தில் தளர்வு ஏற்படுவதுடன், எந் நடவடிக்கைக்கும் ஜனாதிபதியின் அங்கீகாரமுள்ளதாவெனச் சிந்திக்க வைக்கும்.

இதே போல் ஊடகத்துறையிலும் அரச சார்புச் செய்திகளைக் கேள்வியின்றி ஒலிபரப்புதல், ஒளிபரப்புதல், பிரசுரித்தல் என்பனவும் தடுமாற்றத்துக்கு உள்ளாகும். நிலையான நிர்வாகம் கேள்விக்குரியதென உணரும் ஊடகத்தினர் அரசாங்கத்தைப் பலமாக முண்டுகொடுக்கத் தயங்குவர்.

அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை பற்றிய அச்சங்களால் பங்குச் சந்தை நிலைவரங்களும் பாதிக்கப்படாலாம். இவற்றைவிட வெளிநாட்டு நிதியுதவிகள் பற்றிய எதிர்பார்ப்புகளும் பொய்த்துப் போகலாம்.

இப்போது இங்கு ஒரு அரசியல் பலப்பரீட்சை மட்டுமல்ல, சமாதானப் பேச்சுக்கள், யுத்தநிறுத்தம் பற்றிய அச்சங்களும் தலைதூக்கியுள்ளன.

இவ் விடயத்தில், ஜனாதிபதியின் உரிமைகள், அதிகாரங்கள், அரசியல் யாப்பு விதிகள், சட்டம், நடைமுறை, உணர்ச்சிகள், அச்சங்கள், அரசியல் நோக்கங்கள், பிரசார உத்திகள் என்று பலதும் சேர்ந்த ஒரு குழப்ப நிலை தோற்றுவிக்கப்பட்டு, சரியெது பிழையெது என்பதைத் தீர்மானிக்க முடியாது செய்யப்பட்டுள்ளது.

நாம் இதனை ஆராய்வதானால், இதே குழப்பத்தோடு விடயங்களை அணுக முடியாது. அதனால் விடயத்தை, அதிலுள்ள சிக்கல்களை விடுவிக்கும் முகமாக அவற்றை கேள்விகள் வடிவில் பகுத்து ஆராய வேண்டும்.

அப்படிப் பார்க்கையில் எமக்கு இங்கு தோன்றும் அடிப்படைக் கேள்விகள் இவைதான்.

ஜனாதிபதிக்கு இவ்வாறு எந்த அரசாங்க சபையையும் தனது பொறுப்பின் கீழ் எடுக்கக்கூடிய அதிகாரம் உள்ளதா?

ஜனாதிபதி ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி என்ற இரண்டும் வெவ்வேறாகச் செயற்படும்போது ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பிரதமருடன் கலந்தாலோசித்துத்தான் பயன்படுத்த வேண்டுமென்று யாப்பு விதிமுறை சொல்கிறதா?

வர்த்தமானி அறிவித்தல் அச்சடிக்கப்படாத பட்சத்தில் ஜனாதிபதியின் உத்தரவு செல்லுபடியற்றதா?

இந்த அறிவுப்புக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கும், யுத்தநிறுத்தத்துக்கும் என்ன சம்பந்தம்?

### சமாதானம் குழம்புமா?

ஜனாதிபதிக்கு அரசாங்கத்தின் எந்தச் சபையையும், அமைச்சையும் கூடப் பொறுப்பேற்கலாம், இதில் கேள்விக்கே இடமில்லை என்ற வகையில்தான் ஜே.ஆர். ஜெயவர்த்தனவால் உருவாக்கப்பட்ட இன்றைய அரசியல் யாப்பு அமைந்துள்ளது. ஜே.ஆர். இந்த அரசியல் யாப்பை நிறைவேற்றிய பின்னர் சொன்ன ஒரு வாசகத்தைக் கொண்டே அதற்குள்ள சக்தியை யாரும் மதிப்பிட்டுக் கொள்ளலாம். ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர தன்னால் இப்போது விரும்பிய எல்லாம் செய்யலாம் என அவர் கூறியிருந்தார். அத்தகைய அரசியலமைப்பு, பிரதமர் கூறுவதைப் போல் தன்னைக் கலந்தாலோசிக்காமல் ஜனாதிபதி எடுத்த முடிவு அரசியல் யாப்புக்கு முரணான தெனக் கூறுமளவு பலயீனமான ஒன்றல்ல.

அரசியல் யாப்பில் பிரதமருடன் ஆலோசிக்கலாம் என்று கூறப்பட்டுள்ள விடயங்கள், பிரதமருடன் ஆலோசிக்காமல் செல்லுபடியாக மாட்டாதென்ற அர்த்தத்திலானதல்ல. அப்படி அர்த்தப்படுமாகவிருந்தால் அங்கு ஜனாதிபதியைவிட பிரதமரே முடிவெடுப்பவராகிவிடுவார். அப்படி தன்னால் நியமிக்கப்படும், தனக்குக் கீழுள்ள ஒருவருக்குத் தானே கட்டுப்படும் நிலைக்கு ஜனாதிபதி ஆளாகும் விதமாக ஜே.ஆரின் யாப்பில் அதிகாரப் படிநிலை தலைகீழாகும் ஒரு தவறு ஏற்பட வழியில்லை.

அடுத்து, ஜனாதிபதியின் உத்தரவென்பது, அவர் கையொப்பம் இட்ட தருணத்திலேயே சட்டவலுப் பெற்றுவிடுகிறது. வர்த்தமானி அறிவித்தல் செய்யப்படுவது பிறப்பிக்கப்பட்ட சட்டவலுக்கொண்ட உத்தரவொன்றை மக்களுக்கு அறிவிக்கும் ஒரு செயன்முறையேயன்றி வர்த்தமானியில் அறிவித்த பின்னர்தான் சட்டமாக முடியும் என்றில்லை.

உண்மையில் இவற்றில் சந்தேகமெழுந்தால் அதை உச்ச நீதிமன்றமே தீர்க்க வேண்டும். ஆனால் இதனை நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்ல அரசாங்கம் முயற்சிக்காததே, இதில் சட்ட ரீதியில் அவர்களுக்குள்ள பலயீனத்தைக் காட்டுகிறது.

இந்த நடவடிக்கை சமாதானப் பேச்சுவார்த்தையுடனும், யுத்த நிறுத்தத்துடனும் சம்பந்தப்பட்டதா, இதனால் இவை குழம்பும் ஆபத்துண்டா என்று பார்த்தால், உண்மையில் இதற்கு இரண்டு பக்கத்திலும் விடைகள் உண்டு.

நேரடியாகப் பார்க்கும்போது, ஜனா



திபதிக்கு உரிய அதிகாரத்தைத்தான் அவர் பிரயோகித்துள்ளார். அத்துடன் சமாதானத்துக்கோ, யுத்த நிறுத்தத்துக்கோ இதில் எதுவித சம்பந்தமுமில்லை.

ஆனால் இதனால் விளைந்துள்ள அரசியல் குழப்பத்தை எடுத்துப் பார்த்தால் அந்த ஆபத்துக்கு இடமுள்ளதென்பதை மறுக்க முடியாது. அதாவது, இந் நடவடிக்கைக்கு எதிராக அரசாங்கம் எடுக்கவுள்ள பதில் நடவடிக்கைகள், அவற்றை முறியடிக்க ஜனாதிபதி மேலும் மேலும் பிரயோகிக்க முற்படக்கூடிய அதிகாரங்கள் என்பன இந்த அரசாங்கத்தை நீடிக்க வைக்குமா என்ற சந்தேகத்தைக் கிளப்புகின்றன.


உதாரணத்திற்கு, வர்த்தமானி அச்சிடப்படுவதை அரசாங்கம் தொடர்ந்து தடைசெய்தால், ஊடகத் துறை, உட்துறை அமைச்சு ஆகியவற்றிலிருந்து, அரசாங்க அச்சகம், பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றை ஜனாதிபதி தனக்குக் கீழ் கொண்டுவரலாம். அது இன்னும் பெரிய குழப்பத்துக்கு வழிகோலி, அமைச்சரவையைக் கலைக்க, அல்லது மாற்றுவதற்கு இட்டுச் செல்லலாம். இறுதியில் அது ஒரு பொதுத் தேர்தலுக்கும் இட்டுச் செல்லலாம்.

அத்துடன் தன்னை உறுதிப்படுத்தாத நிலையிலுள்ள இவ் அரசாங்கத்துடன் பேசுவதிலும், தீர்மானங்களை நிறைவேற்றுவதிலும், அது தரும் வாக்குறுதிகளையும், உத்தரவாதங்களையும் நம்புவதிலும் அர்த்தமுண்டா என்ற உதாசீன மனப்பான்மையைப் புலிகள் தரப்பிலும் இது ஏற்படுத்திவிடலாம்.

இவை யாவும் தற்போதைய சமாதான முன்னெடுப்புகளில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். ஜனாதிபதி, புதிய ஆட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் சமாதான முன்னெடுப்புகள் தொடருமெனக் கூறினாலும், புலிகளிடமிருந்து சாதகமான ஒத்துழைப்புக் கிடைக்குமா என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை.



தேவியர் மானம் என்றும்
தெய்வத்தின் பக்தி என்றும்
நாவினாற் சொல்வ தல்லால்-கிளியே
நம்புத லற்றா ரடீ!
சுப்பிரமணிய பாரதியார்-



# என்னைத் தெரியுமா?

பாப்பா முரசு சிறுகதை



நாடு முழுவதும் பிரபலமான செல்வந்தன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் அயோகா. ஒரு காலத்தில் பெரிய அரசியல்வாதியாகக் கூட இருந்திருக்கிறான். அதனால் அவனுக்குக் கர்வம் அதிகம். பணமும், செல்வாக்கும், பெயரும், புகழும் இருந்தால் யாருக்குத்தான் கர்வம் வராது. அதனால் அயோகா கர்வப்பட்டிருந்ததில் வியப்பே சொல்ல முடியாது.

அயோகா, தன்னைப் பற்றி அனைவரும் தெரிந்து வைத்திருக்க வேண்டுமென்று விரும்பினான். புகழ் போதை அவனை அப்படி ஆட்டி வைத்தது. யாரைக் கண்டாலும் என்னைத் தெரியுமா? என்று கேட்பான்.

அவனது சுய புராணத்தைக் கேட்பது தானா மக்கள் வேலை? ஆகவே அவர்கள் அவன் கண்ணில் படும் போதெல்லாம் விலகி ஒதுங்கி வேகமாகச் சென்றுவிடுவார்கள்.

ஒரு நாள் அவனது ஊருக்கு ஞானி ஒருவர் வந்தார். மிகப் பெரிய மகான் அவர். மக்களுக்கு நல் உபதேசங்கள் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்தும் வேலையைச் செய்துகொண்டிருப்பவர். தன்னால் இயன்ற வரை மக்களது குறைகளைப் போக்குவதற்குப் பாடுபடுபவர்.

ஊர் மக்கள் அந்த ஞானியைப் பற்றியே வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டான் அயோகா.

உலகில் தன்னை விடப் பெயரும் புகழும் பெற்றவர் இருக்கிறாரா? என்று நினைத்த அயோகா தான் எந்த விதத்திலும் குறைந்து போய் விடக் கூடாது என்றெண்ணி ஒரு நாள் அந்த ஞானியைச் சென்று சந்தித்துவிடுவது என்று முடிவு செய்து கொண்டான்.

ஒரு நாள்- தன்னை டாம்பீகமாக அலங்காரம் செய்துகொண்டு அந்த ஞானியைச் சென்று சந்தித்தான் அயோகா.

"ஞானியே! என்னைத் தெரிகிறதா?" என்று கர்வம் பொங்கக் கேட்டான்?

அவனையும் அவனது விலை மதிப்பற்ற அலங்காரத்தையும் கர்வமான பேச்சையும் கண்ட ஞானி அவனை ஏற இறங்க ஒரு முறை பார்த்துவிட்டு மெல்லப் புன்னகைத்தார்.

அதோடு அவனது கர்வத்துக்குச் சரியான பாடம் கற்பிக்கவும் எண்ணினார்.

"அன்பரே! நீர் யாரென்று நான் தெரிந்துகொள்வதால் எனக்கோ நான் யாரென்று தெரிந்துகொள்வதால் உமக்கோ என்ன பயன்? நாம் இருவருமே ஒரு நாள் இறக்கப் போகிறோம். அதன் பிறகு கடவுளை அடையப் போகிறோம். அதனால் அந்தக் கடவுளைப் பற்றித் தெரிந்துகொண்டால் என்ன? அதில் பயன் உள்ளதே!" என்றார் ஞானி.

அயோகாவுக்கு ஞானியின் உபதேசம் நெற்றியில் அடித்தது போலிருந்தது. அந்த இடத்திலேயே அவனது கர்வம் அழிய, தன்னை மனிதனாகப் புனிதப்படுத்திய ஞானிக்குப் பல நூறு நன்றிகள் கூறிவிட்டுப் புறப்பட்டான். ▲

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.05.2003.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 496
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 493

பரிசுக்குரியவர்:
செல்வி சாய்மா
கிங்ஸ்டன் சர்வதேசப் பாடசாலை, வெள்ளவத்தை.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| சி. ஜதுஷன்<br>ஏ1எஃப்24 புளூமெண்டால் தொ.மா., கொட்டாஞ்சேனை. | எம்.எஸ். அன்சூர்,<br>அல் அக்ஸா வீதி, கிண்ணியா-02. |
| பி. பிரகாசினி,<br>வைரவப் புளியங்குளம், வவுனியா. | எம். எ.ஃப். பாத்திமா ரிப்னா,<br>மஹ்மூத் மகளிர் கல்லூரி, கல்முனை. |
| அபிநயா வாலசிங்கம்,<br>20/08 பெயிலி குறுக்கு வீதி, மட்டக்களப்பு. | கா. சிலம்பரசன்,<br>நீதவான் நலன்புரி நிலையம், மல்லாகம். |
| செல்வி சுவஸ்திகா ரெங்கராஜ்<br>44, பிரதான வீதி, கலஹா. | செ. கார்த்தீபன்,<br>ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13. |
| எம்.எஸ். துசியந்தன்,<br>தர்மதூத கல்லூரி, பதுளை. | எம்.எஸ்.எம். ஸப்ரான்,<br>ஸம்ஸதீன் மாவத்தை, தர்கா நகர். |

## விடுகதைகளும் விடைகளும்

1) எட்டாத ராணி இரவில் வருவாள் பகலில் மறைவாள் அவள் யார்?

2) காடு பெருங்காடு அடர்ந்த காடு அந்தக் காட்டில் அடக்க ஆளின்றி விருப்பம் போல் விளையாடுவது வீராயி பெத்த பிள்ளை அது என்ன?

3) வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை அது என்ன?

4) சலசலவென்று சத்தம் போடுவான் சமயத்தில் தாகம் தீர்ப்பான் அவன் யார்?

5) இருட்டிலும் மின்னுவான் எங்க தங்க ராசா அவன் யார்?

6) அடாபுடா என்பாள் ஆனால் வீட்டை விட்டு வெளியே வர மாட்டாள் அவள் யார்?

7) வெளுத்த ஆளுக்கு சிவப்பு தலைப்பாகை அவன் யார்?

8) வால் நீண்ட குருவிக்கு வாயுண்டு வயிறில்லை? அது என்ன?

9) வரி வரி வண்ணக்கொம்பு வாடாத முத்துக்கொம்பு அது என்ன?

10) கல்லும் கசியும் அது என்ன?

### விடைகள்

1. நிலா 2. தலை முடி பேன்
3. செருப்பு 4. அருவி
5. மின்மினிப்பூச்சி 6. நாக்கு
7. தீக்குச்சி 8. அகப்பை
9. சோளம் 10 பனிக்கட்டி

## அதிசய உலகம்!



தேனீக்கள் இல்லையென்றால் நமக்கு பழங்களோ, காய்கறிகளோ அதிக அளவில் கிடைக்காது. ஏனெனில் பூக்களில் மகரந்தச் சேர்க்கை தேனீக்களால் ஏற்படுகின்றன.

பல பக்டீரியாக்கள் மனிதனுக்கு நோய்கள் ஏற்படக் காரணமாக அமைகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் சிலவகை பக்டீரியாக்கள் மனிதனுக்கு உதவவும் செய்கின்றன. பூமிக்குள் அடியில் உள்ள பக்டீரியாக்கள் மண்ணை வளப்படுத்துவதுடன் இறந்து போன உடல்களையும் மக்கிப் போகச் செய்துவிடுகின்றன. பக்டீரியாக்கள் இந்த வேலையைச் செய்யாவிட்டால் மனிதன் வசிப்பதற்கு இடமே இருக்காது.

### நிறம் மாறும் மீன்

பச்சோந்திகள் மட்டுமே எதிரியின் கண்ணில் படாமல் தப்பிக்க தன் நிறத்தை மாற்றிக் கொள்வதில்லை. சில வகை மீன்களும் தங்களுக்கு ஆபத்து என்று வரும்போது நிறத்தை "சூப்பர் பாஸ்ட்" வேகத்தில் மாற்றிக் கொள்கின்றன.

கடலின் ஆழமான பகுதியில் பவளப் பாறைகளில் கிளி மீன் என்றொரு அபூர்வ மீனினம் காணப்படுகிறது. இந்த இன மீன்கள் பகல் நேரத்தில் மிகச் சுறுசுறுப்பாக செயற்படுகின்றன. இரவில் நன்கு தூங்கி ஓய்வெடுக்கின்றன.

தூங்கும்போது இவை முன்னெச்சரிக்கையாக பவளப் பாறையின் நிறத்துக்கு ஏற்ப தங்களது உடல் நிறத்தையும் மாற்றிக் கொள்கின்றன.

தூங்கும்போது கிளி மீனை வேறு பெரிய மீன்கள் வேட்டையாடிவிடக் கூடாது அல்லவா?


சரி பகல் நேரத்தில் எதிரி துரத்தினால்...? அப்போதும் மின்னல் வேகத்தில் தன் நிறத்தை மாற்றித் தப்பித்துவிடுகிறது கிளி மீன்.

## உங்கள் பொது அறிவு எப்படி?


1. அட்லாண்டிக் பெருங்கடலில் கலக்கும் கொங்கோ நதியின் நீளம் எவ்வளவு தெரியுமா? **-4371 கிலோ மீட்டர்கள்**
2. மேனாம் என்ற நதிக்கரையில் அமைந்துள்ள ஒரு நாட்டின் தலைநகரம்? **-பாங்காக்**
3. இமயமலை எந்த வகை மலையைச் சார்ந்தது.? **-மடிப்பு மலைகள்**
4. மிகவும் குளிர்ச்சியான கிரகம் எது? **-புளூட்டோ**
5. சிலி நாட்டின் பிரபல எரிமலையான லஸ்கார் கடைசியாக எப்போது வெடித்தது? **-1951-ம் ஆண்டு**
6. பறக்கும் ஆபரணம் என்று வர்ணிக்கப்படும் பறவை? **ரீங்காரப் பறவை**
7. ரோம் நகரம் உருவாக அடிக்கல் நாட்டியவர் யார்? **-ரோமுலஸ்**
8. அமெரிக்க சுதந்திரப் போராட்டத்தின் கதாநாயகன் யார்? **-ஜார்ஜ் வாஷிங்டன்**
9. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பின் பிரான்ஸை ஆண்ட மன்னன்? **-நெப்போலியன் பானாபர்ட்**
10. பிரமா படைத்த முதல் பெண் என்று இந்து புராணங்கள் கூறுவது. **-அகல்யா**

### அறிவுத் தேடல்

சென்ற வாரப் புதிரின் விடை:



### இந்த வாரப் புதிர்



வட்டத்துக்குள் இருக்கும் டிசைன் ஒரே கோட்டால் வரையப்பட்டது. ஆனால், கோடு குறுக்கே குறுக்கே வெட்டிச் சென்றுள்ளது. இதே டிசைனை ஒரே கோட்டால் குறுக்கே குறுக்கே வெட்டிச் செல்லாமல் வரைய வேண்டும். முடிகிறதா பாருங்கள்.



## எப்படி...

மணமக்களுக்கு நேர்ந்த சோகம்?! இது முகத்தை மறைத்துக்கொண்டு முத்தமிட முடியாமல், மோதிரம் மாற்றிக் கொண்டு திருமணம் செய்து கொண்டவர்கள் அதே பாதுகாப்புக் கவசத்துடன் வீதியைக் கடந்து செல்கிறார்கள். சீனாவில் திருமணங்கள் எல்லாம் ரொம்பவும் டல்லாகத்தான் நடக்கிறது. யாருக்கு சார்ஸ் தொற்றியிருக்குமோ என்ற பயத்தில் மக்கள் அதிகமாக ஒன்றுகூடத் தயங்குகிறார்கள். திருமணத்தை முகத்தை மறைத்துக் கொண்டு முடித்தாகிவிட்டது. முதலிரவிலும் இதே மாதிரித்தானா...!



## மர்மம்...

**118** வீரர்களுடன் மூழ்கிப்போன கேர்ஸ்க்' ரஷ்ய நீர்மூழ்கிக் கப்பல் குறித்த 'நினைவுகள்' மறைவதற்குள்ளேயே மற்றொரு மோசமான நீர் மூழ்கிக் கப்பல் அனர்த்தம் சீனாவில் நடந்துள்ளது.

70 கடற்படை உறுப்பினர்களுடன் மூழ்கிப்போன இந்தக் கப்பலில் இருந்த எவரும் உயிர் தப்பவில்லை. இந்த விபத்துக்கான காரணம் இன்னமும் மர்மமாகவே இருக்கிறது. இந்த நீர்மூழ்கியில் ஏன் 70 வீரர்கள் பயணித்தார்கள் என்பது முதல், இதிலிருந்த ஆயுதங்கள் என்ன, எப்படி விபத்து நிகழ்ந்தது என்று எல்லாமே மர்மம்தான். "தொழில்நுட்பக் கோளாறு" காரணமாக விபத்து நிகழ்ந்ததென சீன அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் அதை எந்தளவுக்கு நம்புவதென ஆய்வாளர்கள் சிந்திக்கின்றனர்.

சீனா தனது இராணுவ செயற்பாடுகளை மிகவும் இரகசியமாக வைத்திருக்கும் ஒரு நாடு என்ற வகையில் இந்த மர்மங்களுக்கு ஒருபோதும் விடை கிடைக்கப் போவதில்லை என்றுதான் பொதுவாகக் கருதப்படுகிறது. உயிரியல் ஆயுதங்கள் சிலவற்றைப் பரிசோதிக்க சீனா எடுத்த இரகசிய முயற்சி ஒன்றின் சறுக்கல்தான் சார்ஸ் தொற்று என்ற குற்றச் சாட்டுக்கு மத்தியில் இந்த நீர்மூழ்கி மர்மம்...



## தொற்றிக் கொண்டது...

இது உண்மையான சார்ஸ் சோகம்! சீனாவில் வேகமாகப் பரவ ஆரம்பித்ததும் தாய்வானில் சார்ஸ்ஸைக் கட்டுப்படுத்தப் பலத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சார்ஸ் சிகிச்சை என்பது மருத்துவர்களுக்கும் ஒரு சோதனைதான்! மரணத்தை அருகில் வைத்துக்கொண்டு மருத்துவம் பார்க்க வேண்டும்.

இந்த சார்ஸ் நோயாளிகளைப் பராமரித்த டாக்டர்களும் மருத்துவமனைப் பணியாளர்களுமாகப் பலர் ஏற்கனவே பலியாகிவிட்டனர். கடந்த வாரம் தாய்வானில் பெண் தாதி ஒருவர் 'சார்ஸ்'ஸுக்குப் பலியானார். அந்த நாட்டில் சார்ஸ் தொற்றி உயிரிழந்த முதல் மருத்துவ ஊழியர் இவர்தான். இந்தத் தாதியின் கணவருக்குத் தாய்வான் ஜனாதிபதி டேங்ஸு ஹூ தனது அனுதாபத்தைத் தெரிவிக்கிறார்.

## வித்தியாசமான அலங்காரம்



சமயலறைக் கரண்டிகளும், கோப்பையும் அலங்காரமாக மாறியதைப் பாருங்கள்! இத்தாலியில் கோப்பி விற்பனை நிறுவனம் ஒன்று தனது உற்பத்திகளுக்கு விளம்பரம் கொடுக்க வந்த மாடல் அழகியைத்தான் இப்படி அட்டகாசமாய் அழகுபடுத்தியிருக்கிறது.

## சுதந்திரம்



அமெரிக்கா ஈராக் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்த "சுதந்திரத்தின்" சுவையை ஈராக்கிய மக்கள் அநுபவிக்கத் தொடங்கி விட்டார்கள். வெடிக்காத குண்டுகளின் ஆபத்து. உடைக்கப்பட்ட வீடுகள், உயிரை மட்டும் மீதம் வைத்து, துண்டு துண்டாய்ச் சிதைக்கப்பட்ட உடற்பாகங்கள், பாடசாலைகள், தொழில் நிலையங்கள் எல்லாம் தரைமட்டம்... மருத்துவமனைகள் கூட மீதமில்லை. எப்படி வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்துவது என்று புரியாத நிலை. யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் நடந்த அனர்த்தங்களில் கூட நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டார்கள். புறநகர்ப் பகுதி ஒன்றில் ஆயுதக் கிடங்கு வெடித்ததில் காயமடைந்த குழந்தை ஒன்றின் ஜீவ மரணப் போராட்டம்.



ஜீவா-ஸ்ரீதேவி
படம்: தித்திக்குதே

## ரதியின் 'பல்வேறு' அட்வைஸ்

நடிப்பதைத் தவிர பல் பாதுகாப்பு குறித்தும் சக நடிகர், நடிகைகளுக்கு அடிக்கடி அறிவுரை வழங்கி வருகிறார் ரதி.

பெங்களூரைச் சேர்ந்த ரதி நடிக்க வருவதற்கு முன் பல் டாக்டர் படிப்பு படித்துக்கொண்டிருந்தார் என்பது பலருக்குத் தெரியாது.

நடிப்புச் சேவைக்கு நேரம் வந்ததால் அந்தப் படிப்பைப் பாதியிலேயே விட்டுவிட்டுத்தான் அவர் கோடம்பாக்கத்துக்கு வண்டியேறி வந்துவிட்டாராம்.

இருந்தாலும் தான் படித்த படிப்பில் இன்னும் ஆர்வம் கொண்டுள்ளார் ரதி. பற்களைப் பாதுகாப்பது எப்படி என்று படப்பிடிப்பின்போதே நடிகர், நடிகைகள் உள்பட பலருக்கும் டிப்ஸ்களை வாரி வழங்கி வருகிறார்.

பற்கள் பாதிக்கப்பட்டால் என்ன விளைவுகள் ஏற்படும், வாய் துர்நாற்றத்தைத் தவிர்ப்பது எப்படி இதுதான் ரொம்ப ரொம்ப முக்கியம், பற்களைத் தேய்ப்பது எப்படி என சகல விஷயங்களையும் கூறி, பீஸ் வாங்காத டாக்டராக ரதி மாறியுள்ளார்.

## விரைவில் சி...

"எனக்கும், சினேகாவுக்கும் ... அவரைப் பற்றிய கிசுகிசுக்கள் ... என்ன தெரியுமா? இன்னும் ... கொள்ளத் திட்டமிட்டு இரு... விசாரித்தபோது, "உண்மை ... சினேகா தரப்பில், "கிசுகிசு ... பிசுபிசுத்து நசநசத்துப்போன ...

## நகைச்சு...

இசையமைப்பாளர் தேவா ... சம்பத், சிவா. இவர்களும் ... சம்பத் மகன் ஜெய், விஜய் ... முகமானார், சபேஷ் மகன் ... நண்பராக 90 கட்டிங் என்ற ... இருக்கிறார். 'யூத் எக்ஸ்பிரஸ் ... கார்த்திக் காமெடி வேடத்தில் ... ராக தேவா பிரபலமாக இருக்... நடிப்பது ஏன்?" என்று ... இருவரையும் இயக்குநர் ஏ.வெங்கடேஷ் ... பகவதியில் விஜய் தம்பியாக ...

## விஜய்யை பாராட்டும் ரகுவரன்

ஹீரோயிஸத்தை வெளிப்படுத்தும் கதை கொண்ட படங்களில் நடிக்கும் விஜய், மிகத் துணிச்சலாக முடிவெடுத்து நடிக்கும் படம் 'திருமலை'. இதில் கதைதான் ஹீரோ. அந்தக் கதைக்குத் தகுந்தவாறு தன்னை செதுக்கிக்கொள்ளப் போகிறார் விஜய். கண்டிப்பாக இந்தப் படம் அவருக்குப் புதிய பரிமாணத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று சினிமா வட்டாரத்தில் பேசுகின்றனர். படத்தில் கவுசல்யா ஜோடியாக நடிக்கும் ரகுவரன் கூறுகையில், "இந்த படத்தோட கதையை கேட்ட பிறகு விஜய் நடிக்க ஒத்துக்கிட்டார்ன்னா... கண்டிப்பா அவருக்கு துணிச்சல் அதிகம். மத்த ஹீரோக்கள் நடிக்க தயங்கும் சூழ்நிலையில், தன் கேரக்டரோட வேல்யூ தெரிஞ்சு ஒத்துக்கிட்டு நடிக்கிற விஜய்யை நினைச்சு வியப்பா இருக்கு பெருமையா இருக்கு!" என்று பாராட்டினார்.

## 'சண்டியரு'க்கும் 'முத்ரா'வுக்கும் போட்டி?

கமலின் 'சண்டியர்' படப்பிடிப்பு நடந்துவரும் நிலையில் ரஜினியின் 'முத்ரா' பற்றிய தகவல்கள் வெளியாகியதில் இரண்டு ஹீரோக்களினதும் இரசிகப் பெருமக்கள் பலத்த உற்சாகத்தில் இருக்கிறார்கள்.

சண்டியரும், முத்ராவும் மாறுபட்ட கதையம்சங்களைக் கொண்ட திரைப்படங்களாக அமையவுள்ள போதிலும் மசாலாப் படங்கள்தான். ரஜினி, கமல், படங்கள் சில காலமாகவே ஒரே சமயத்தில் வெளிவராத நிலையிலும் "பாபா"வில் வாங்கிய அடியை சீர் செய்ய ரஜினி கடும் முயற்சி எடுக்கும் நிலையிலும் முத்ரா-சண்டியரும் போட்டிப் படங்களாக நோக்கப்படுகின்றன. ரசிகர்கள் அப்படி நினைத்துக் கொள்கிறார்களே தவிர ரஜினியோ கமலோ இது குறித்து வாய் திறக்கவில்லை.

## அலையாக, புயலாகவரும் ஹீரோக்கள்

சூப்பர் குட் சுப்பிரமணி இயக்கத்தில் பிரஷாந்த் நடிக்கும் படத்துக்கு 'சூறாவளி' என்று பெயரிடப்பட்டு இருக்கிறது. இதில் மம்முட்டி ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார். 'அலை' என்ற படத்தில் சிலம்பரசன் நடித்து வருகிறார். இப்படி இளம் கதாநாயகர்கள் மத்தியில் சூறாவளி, அலை என்ற ஆக்ரோஷமான தலைப்புகள் சூட்டப்படும் போட்டி நடைபெற்று வருகிறது.

அந்த வரிசையில் விக்ரம் தனது புதிய படத்துக்கு 'புயல்' என்ற பெயரைச் சூட்ட ஆலோசித்து வருகிறார். இந்தப் படத்தை பிரபல நிறுவனம் தயாரிக்க, முன்னணி இயக்குநர் ஒருவர் இயக்குகிறார்.

## பாலச்சந்தரின் சஹானா

சிந்து பைரவி திரைப்படத்தின் தொடர்ச்சியாக... பெரும்பாலும் அதன் இரண்டாம் பாகம் போல 'சஹானா' என்ற பெயரில் திரைப்படம் ஒன்றை இயக்கி வருகிறார் பாலச்சந்தர்.

சிந்து பைரவியில் சிவகுமாருக்கும் சுஹாசினிக்கும் பிறக்கும் குழந்தையின் கதையாக 'சஹானா' அமையவிருக்கிறது.

இதன் படப்பிடிப்பு இலங்கையிலும் நடைபெற்றது.





ஸ்ரீகாந்த்-சினேகா
படம்: பார்த்திபன் கனவு

## ஆனந்தராஜை விழுங்கிய சவுந்தர்யா

'தாயே புவனேஸ்வரி' படத்தில் இடம்பெறும் கிளைமாக்ஸ் காட்சிக்காகத்தான் மூன்று தலை, ஆறு கைகள், இரண்டு கால்கள் என அவதாரம் எடுத்துள்ளார் ஆனந்தராஜ். பிரசாத் ஸ்டூடியோவிலுள்ள நீல் கிராபிக்ஸ் சென்டரில் இந்தப் பத்து நிமிடக் காட்சிக்காக நவீன தொழில் நுட்ப முறையில் கிராபிக்ஸ் யுக்திகள் கையாளப்பட்டன. ஆறு நாட்கள் மொட்டை போட்டுக்கொண்டு இரவு, பகல் பாராமல் நடித்துக் கொடுத்தார் ஆனந்தராஜ். இந்தக் காட்சிக்கு இருபது லட்ச ரூபாய் செலவானது என்ற இயக்குநர் எஸ்.பாரதிகண்ணன், "படத்தில் அங்காளம்மன் கேரக்டரில் விஸ்வரூபம் எடுக்கும் சவுந்தர்யா, தனது மகன் சத்யபிரகாசையே பலிகொடுத்து, காட்டேரி பூஜை செய்து அசுரபலம் பெற்ற ஆனந்தராஜைப் பல வழிகளில் வீழ்த்த முயற்சிக்கிறார். ஆனால், கத்தியால் வெட்ட வெட்ட ஆனந்தராஜ் உருவம் புதுப்புது அவதாரம் எடுக்கிறது. தீயால் எரித்தாலும், அந்தச் சாம்பலில் இருந்து உருவம் பெற்று எழுகிறார். இறுதியில் தீய சக்தியான ஆனந்தராஜை, தனது விஸ்வரூபத்தால் மிரட்டுகிறார் சவுந்தர்யா. "டேய்... நான் சுடுகாட்டுல இருக்கிற அங்காளம்மன்டா. இப்ப உன்னை என்ன பண்றேன் பார்" என்றபடி, நீநீநீளமான நாக்கை நீட்டிச் சுழற்றி, ஆனந்தராஜை அப்படியே லபக்கென்று வாய்க்குள் போட்டு முழுங்கிவிடுகிறார். இந்தக் காட்சி மெய்சிலிர்க்கும் வகையில் இருக்கும்!" என்று பரவசத்துடன் சொன்னார். பார்த்தால்தான் புரியும் மெய்சிலிர்ப்பு!

## சென்டிமென்ட் படுத்தும் பாடு

சென்டிமென்ட் படுத்தும் பாட்டால் கதாநாயகிகள் அடிக்கடி பெயரை மாற்றிக்கொள்ளுகிறார்கள்!

'முத்தம்' ஜெனிஃபர் பாரதிராஜாவின் 'ஈர நில'த்தில் நந்திதா ஆகிவிட்டார். சாருலதா தன் பெயரை ரக்ஷா என்று மாற்றிக்கொண்டிருக்கிறார். கார்த்திக் நடிக்கும் 'காஷ்மீர்' படத்தின் நாயகி இந்த ரக்ஷா (சாருலதா). சுவாதியோ இப்போது சுவாதிகா. ராஜஸ்ரீயின் தங்கை பாபி இப்போது சோனாவாகியிருக்கிறார்!

## கடவுளோடு ஒப்பிடாதீர்கள் - ரசிகர்களுக்கு வி...

"கடவுளோடு என்னை ஒப்பிடாதீர்கள்" என ரசி... கோள் விடுத்துள்ளார். இது தொடர்பாக விஜ... அறிக்கையில், "என் நெஞ்சில் குடியிருக்கும் ... களே! உங்கள் அனைவருக்கும் என் இ... நான் நடித்த 'புதிய கீதை' திரைப்ப... இந்த நாளை திருவிழாவாக என்ன... டாடிக்கொண்டிரு... அறிந்து நான் மகிழ்... அன்புக்கும் ஊக்கத்... அதே சமயம் சி... வத்தினாலும், கடவு... விளம்பரம் செய்து... வேதனையைத் தருகிற... ளார்.

சினி விசிட்

# சினேகா–ஸ்ரீகாந்த் திருமணம்

[illegible]காதல் இல்லை" என்று பலமுறை சொல்லிவிட்டார் ஸ்ரீகாந்த். இருந்தாலும் [illegible] ஓயவில்லை. கடந்த வாரம் சினிமா வட்டாரம் முழுக்கப் பரவிய வதந்தி [illegible] இரண்டு மாதங்களில் சினேகா-ஸ்ரீகாந்த் இருவரும் திருமணம் செய்து [illegible]கின்றனர் என்பதுதான் அந்த வதந்தி. இதுபற்றி ஸ்ரீகாந்த் தரப்பில் [illegible] இல்லாத செய்தியை ஏன் பெரிதுபடுத்துகிறீர்கள்?" என்று கூறப்பட்டது. [illegible] எழுதுபவர்களுக்கு வேறு வேலையே கிடையாது" என்று சொல்லப்பட்டது. ம்.. [illegible]!

# [illegible]ச்சுவை நடிகனாகிறார்

[illegible] சகோதரர்கள் சபேஷ், முரளி. [illegible] அமைக்கின்றனர். இவர்களில் [illegible] 'பகவதி' படத்தில் அறி[illegible] 'தம்' படத்தில் சிலம்பரசன் [illegible] வேடத்தில் அறிமுகமாகி [illegible] ஜெய் கதாநாயகனாகவும் [illegible]றனர். "இசை அமைப்பாள[illegible] ஆனால், நீங்கள் இருவரும் [illegible] கேட்டபோது, "எங்கள் [illegible]தான் அறிமுகப்படுத்தினார். [illegible] முன், தன்னிடம் பத்து நாட்கள் உடனிருந்து பழகும்படி விஜய் கூறினார். காரணம், அவருடன் நடிக்கும்போது பயம் வராமல் இருக்க வேண்டும் என்பதுதான். எனவே, பத்து நாட்கள் படப்பிடிப்பில் அவருடன் இருந்தேன். அதற்குப் பிறகே நடித்தேன். தற்போது கார்த்திக் நடிக்கும் 'முதலாம் சந்திப்பில்..' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நடிக்கிறேன்" என்றார். சிவாஜி பேரன் துஷ்யந்த் நடிக்கும் 'சக்ஸஸ்', 'பழுன்' ஆகிய படங்களில் சபேஷ் கார்த்திக் நடிக்க ஒப்பந்தமாகி இருக்கிறார். நல்ல காமெடி நடிகனாகப் புகழ் பெற வேண்டும் என்பதே இவருடைய ஆசையாம்!



விக்ரம்–த்ரிஷ்ஷா
படம்: சாமி

## சம்பளத்தைக் கூட்டிய திரிஷா

'சாமி' படத்துக்குப் பின் திரிஷாவின் சம்பளம் குண்டக்க மண்டக்க என உயர்ந்துள்ளது.

கிரண், ரக்ஷிதா, பாவ்னா என 'செக்ஸ் பாம்கள்' தமிழ் சினிமாவை உண்டு இல்லை என்று பண்ணிக் கொண்டிருக்க திரிஷா என்னவோ பக்கத்து வீட்டுப் பெண் மாதிரி ரொம்ப எளிமையாக இருக்கிறார். மிக மிகச் சாதாரண அழகுதான். ஆனாலும் மிக அட்டகாசமாக நடித்து அனைவர் மனதிலும் புகுந்திருக்கிறார்.

சமீபத்தில் வெளியான 'மனசெல்லாம்' படம் இவரது நடிப்புக்கு ஒரு சாட்சியாக அமைந்தது. அருமையான ரோல். அதை அழகாகவே செய்திருந்தார் திரிஷா. அந்தப் படம் சரியாக ஓடாவிட்டாலும் கூட ஆடியன்ஸ் மத்தியில் குறிப்பாக பெண்கள், இளவட்டங்கள் மத்தியில் இவருக்குப் பெரும் வரவேற்புக் கிடைத்துள்ளது.

இதனால் இளம் ஹீரோக்கள் இவர் மீது கண் வைக்க ஆரம்பித்துள்ளனர்.

தன்னை நாடிவரும் தயாரிப்பாளர்களிடம் ரூ. 45 இலட்சம் கேட்க ஆரம்பித்துள்ளார். தமிழில் ஜோதிகாதான் ரூ. 50 லட்சம் வரை வாங்கினார். சிம்ரன் தவிர வேறு யாரும் ரூ.20 லட்சத்தைக் கூடத் தொட்டதில்லை.



சேரீன்

முகப்பில்

சூர்யா-ஜோதிகா
படம்: காக்க காக்க

கமல்
படம்: சண்டியர்

## மினிசினி

✔ [illegible] இயக்கத்தில் உருவாகிக்கொண்டிருக்கும் படம் 'அலை' [illegible] ஜோடியாக த்ரிஷா நடிக்கிறார்.

✔ "என்னைப் பேட்டி எடுக்க வேண்டுமா? நேரில் வராதே! [illegible] பேச" என்று கடுமையான உத்தரவு போடுகிறார் 'ஆசை[illegible]' 'அன்பே அன்பே' ஷர்மிலி! இதனால் அவரை நேரில் சந்தித்[illegible] பலர் அலறுகின்றனர்.

✔ [illegible] சாம்ராஜ்யம்' படத்தை அடுத்து அகத்தியன் கதை, [illegible] வசனம், பாடல்கள் எழுதி இயக்கும் படத்தில் புன்னகை பூவே [illegible] கதாநாயகனாக நடிக்கிறார். 'ராமகிருஷ்ணா' என்று பெயரிடப்[illegible] அந்தப் படத்துக்கு தேவா இசை அமைக்கிறார்.

✔ [illegible] நடித்த 'சாக்லெட்', விஜய் நடித்த 'பகவதி', சிலம்பரசன் [illegible] ஆகிய படங்களின் தொடர் வெற்றியின் காரணமாக ஹாட்ரிக் [illegible] படைத்துள்ள இயக்குநர் ஏ.வெங்கடேஷ், அடுத்து ஆஸ்கார் [illegible] லிமிடெட் நிறுவனம் தயாரிக்கும் ஒரு படத்தை இயக்குகிறார். [illegible] ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்.

✔ இயக்குநர் பாலாவுக்கும், தயாரிப்பாளர் [illegible] இடையே ஏதோ பிரச்சனை. [illegible] 'பிதாமகன்' படப்பிடிப்பு கைவிடப் [illegible] சினிமா வட்டாரத்தில் கிசுகிசு [illegible] முகத்தில் கரியைப் பூசும் [illegible]பட்டுப் பகுதியில் 'பிதாமகன்' [illegible] மின்னல் வேகத்தில் நடைபெறு[illegible] சூர்யா, லைலா சம்பந்தப்பட்ட [illegible] பரபரப்பாகப் படமாக்[illegible] பாலா.

## இது செக்ஸ் படம் அல்ல

'இளசு புதுசு ரவுசு' படத்தின் கிளுகிளுப்பான போட்டோக்களைப் பார்த்துவிட்டு, இது ஏதோ செக்ஸ் கதைகொண்ட படம் என்று தீர்மானித்துவிடாதீர்கள். இது அந்த மாதிரிப் படம் இல்லை; இன்றைய மாணவர்களுக்கும், யுவதிகளுக்கும் நல்லதொரு மெசேஜ் சொல்லக்கூடிய படம் என்று சொல்கிறார் இந்தப் படத்தின் இயக்குநர். இதில் வடிவேலு இரு வேடங்களில் நடிக்கிறார்.

## [illegible] வேண்டுகோள்!

[illegible] விஜய் வேண்டு[illegible] வெளியிட்டுள்ள [illegible] ரசிக நண்பர் [illegible] வணக்கம். [illegible] வெளியாகியுள்ளது. [illegible] கொண் [illegible] என்பதை [illegible]றேன். உங்கள் [illegible] மிக்க நன்றி. [illegible] ஆர் [illegible] என்னை ஒப்பிட்டு [illegible] இது எனக்கு [illegible] தெரிவித்துள் [illegible]

## 'அழகி' வழியில் 'தென்றல்'

'அழகி,' 'சொல்ல மறந்த கதை' ஆகிய படங்களைத் தொடர்ந்து தங்கர்பச்சான் கதை, திரைக் கதை, வசனம் எழுதி ஒளிப்பதிவு செய்து இயக்கும் படத்துக்கு 'தென்றல்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இதில் கார்த்திக், உமா ஜோடி சேர்ந்து நடிக்கின்றனர். வித்யாசாகர் இசை அமைக்க, ஆஸ்கார் பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தயாரிக்கிறது.

## மும்தாஜின் பாணியில் ஷகீலா

மும்தாஜ் பாணியில் முழுக்க முழுக்க கவர்ச்சியை களமாகக் கொண்டு தமிழ்ப் படம் தயாரிக்க முடிவு செய்து ஆரம்பகட்டப் பணிகளில் இறங்கியுள்ளாராம் ஆடைக் குறைப்பில் பெரும் பிரளயத்தையே ஏற்படுத்திய ஷகீலா.

கோலிவுட்டில் அறிமுகமாகி கவுண்டமணிக்கு ஜோடியாக சிற்சில படங்களில் நடித்து எதுவும் தேறாததால் மல்லுவுட்டில் (மலையாளப் படவுலகில்) நுழைந்து மோகன்லால்களையும் மம்முட்டிகளையும் ஓரங்கட்டச் செய்தவர் ஷகீலா.

இப்போது மலையாளப் படவுலகில் இவரை வைத்துப் படம் எடுக்கத் தடை விதிக்கப்பட்டுவிட்டதால் தமிழ்த் திரையுலகை நம்பி மீண்டும் வந்தார்.

தமிழில் பெரிய அளவில் வாய்ப்புகள் கிடைக்கும் என்று நம்பிய அவருக்குப் பெரும் அதிர்ச்சி தான் மிஞ்சியது. சின்னச் சின்ன வேடங்கள் மட்டுமே கிடைத்தன.

பார்த்தார், மும்தாஜ் பாணியில் சொந்தமாக படம் தயாரித்து, அதில் தனது தாராள கவர்ச்சியை அள்ளி வீச முடிவு செய்துள்ளார்.

## அமீஷாவும் 65 இலட்சமும்

விஜய்யுடன் 'புதிய கீதை'யிலும், பிரஷாந்த் ஜோடியாக 'என்ன விலை அழகே...' படத்திலும் நடித்துள்ள பிரபல இந்தி நடிகை அமீஷாபட்டேல், தமிழ்ப் படங்களில் நடிப்பதற்கு அதிக ஆர்வம் காட்டவில்லையாம். காரணம், அவர் கேட்கும் 65 லட்ச ரூபாய் சம்பளம் கிடைக்காததுதான்! எனவே, தெலுங்குப் படங்களில் நடிக்க பிரபல கதாநாயகர்களுக்குத் தூதுவிட்டுக் கொண்டிருக்கிறார்.



அப்சரித்தன்–மோனிகா
படம்: இனிது இனிது காதல் இனிது

## தீக்கிடைப் பூக்கள்

துன்பக்கரம் நீட்டி
அரவணைத்தாய்
தீயே...
இன்பக்கரம்-ஒன்று
தாராயா???
***
விடுதலை
என்பது எங்கே
இனியும்
கருகுவதா?
தினம் இங்கே...
***
விஞ்ஞானமும்
பெரும்-மெஞ்ஞானமும்
பெண்ணை
மூழ்கடித்த
பெரும்-தீக்கடல் தான்...
***
சடங்கென்னும்
விலங்கிட்டுப்-பெண்ணை
வெறும் விலங்குகளாய்...
சிறைக் கைதிகளாய்...
அவள்-உணர்வுக்கு
தீயிட்டுக்,
கொல்வர்.
***
இயற்கையும்
முரணானதிங்கே
இயலாமையும்...
உடல் முடியாமையும்...
இவள் பெற்ற
சாபத்தீ!!! இங்கே.
***
அறியாமையும்,
பெரும்-மடமைகளும்,
தீயாகி தகிப்பதனாலே...
மென்மையாம்
பூக்களை
பொசுக்குதே...
பொசுக்குதே
பெரும் தீயாகி, தீயாகி
இங்கே.
***
தீயது சுட்டதனாலே
மென்மைப்பூம் பெண்ணும்
தீயானதிங்கே...
பெண் பூவும் பட்டிடும்
துன்பம்...
இந்த வையகத்தைச்
சுடும்
தீயாய்!
எழும் இனி...
***
தீயாலே, தீயாலே
சுட்டு,
தீயாலே...
தீயானதிங்கே,
தொட்டால்-சுடும்
பெண்மைத் தீயும்,
சுடர்விட்டு
சுடர்விட்டு
எரியட்டும்
இங்கே...
***
மென்மையாம்
பெண்மையை
பொசுக்கிடும் மடமையை
தீயிட்டு,தீயிட்டு
கொழுத்துவோம்..
இன்றே.

ஜெ.பாலறஞ்சனி,
ஹட்டன்.

## வந்து விழட்டும்

மேகமுலவும்
ஆகாய விருட்சத்தின் கீழ்தான்
நாம் நமைத்
தேடிக் கொண்டிருக்கிறோம்.
நீ...
எனக்குள்தான் என்றாலும்
தொட முடியாத
அருகிலும் தொலைவிலும்...
மூச்செடுக்கும் கணத்திற்கும்,
மூச்சு விடும் கணத்திற்குமிடையே
நீ சிரிக்கிறாய் வதைக்கிறாய்...
***
எப்படிப் படிப்பது?
உயிரின் வியூகங்கள்
களைத்துக் களைத்தே
களைத்துவிட்டன கண்மணி..
***
என் தொலைந்துபோகா
நம்பிக்கையே....
வலிமை மிகு
மின் விழியால் காற்றைத் தாக்கு.
***
உன் வாசத்தின்
சுவடு தேடி
வந்து விழட்டும்
என் உயிர்...

வே.தினகரன், பத்தனை.

## தாப வைரஸ்...!

கொறிக்கும் வேர்க்கடலையாய்
அப்பப்போ கிளர..
உன் ஞாபகங்களைப்
பொத்திவைக்க
இரு மனதில்லையே
என்னிடம்....
***
முந்தைய நாள்களின்
ஈரச் சந்திப்புக்களில்...
மனசில் கவிந்த
காமக்கறையின் தவிப்பு
பனிப்போர்வை கவிழ்ந்த
ராத்திரிகளில்தான்
பந்தி விரித்து,
போர்வை தேடும்...!
***
உனது அண்மையை விடுத்தும்..
தூரப்போகிற இடங்களில்
கூடவே என்னோடு-நின்
தொடுகையின் பிரக்ஞை
விளாத்தி முள்ளாய்...
குத்துது...
***
வேண்டுமென்றே தீமூட்டி,
அதில் நீ குளிர்காயப் பார்க்கிறாய்...
என் விரகத்தின் கொடுமை
உனக்கு.
சுவர்க்கத்தின் சுகிப்பா,
இல்லை...
நரகத்தின் தகிப்பா...

தாராபுரம் நிலாம்-கரம்பை.

## தேன் கிண்ணம்

## இனி எதற்கு மே தினம்!?

முதலாளித்துவம்
முறுக்கேறி நிமிர்ந்து
உழைப்பாளிகளின் மீது
குட்டிக் குட்டி மட்டம்
தட்டியபோது
***
உழைப்பாளிகள் நெஞ்சை
நிமிர்த்திப் போராடிய
நாட்கள் கரைந்துவிட்டது
நம் தேசத்தில்
***
"மே"தினம்
கேளிக்கையானது
***
உழைப்பாளி தினமதை
சாக்கடை அரசியல்வாதிகள்
சாதித்துக் கொண்டனர்
தங்கள் அரசியல் விபச்சாரத்துக்கு
***
உழைப்பாளின் வியர்வையால்
உருவாக்கப்பட்ட ஊர்வலத்தை
கட்சியின் திமிர்களையும்
எதிர்க்கட்சிகளுக்கிடையிலான
ஆள் பலத்தையும்
காட்ட
காட்சிக் கூடமாக்கினர்.
***
சாக்கடை அரசியலுக்கு
அடிமையான
உழைப்பாளியின் தினம்
இனி எதற்கு எம் தேசத்துக்கு

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

## இது உங்களுக்காக!

மன்னியுங்கள்,
சொல்லிக் கொள்ள முடியவில்லை
நமைச்சலுடன் வெளியேறுகின்றேன்
கால்களுக்குப் பின்னால்
காலம் துரத்துகின்றது.
***
ஆசையாய்த்தான் இருக்கின்றது
அசையாமல் ஒரு மையத்தில்
என்னைப் பொருதிக் கொள்ள,
ஆனாலும் பாருங்கள்
துருவங்களுக்கிடையில்
தூக்கித் தூக்கி எறிகிறது
துயர்மிகு வாழ்க்கைப் புயல்
***
சிறுவனாயிருந்தபோது
முடிச்சவிழும் காற்சட்டைகளைத்
தூக்கியோடும் பருவத்தில்
நத்தார் அடை மழையின்பின்
இறுகிப் போன முற்றத்தில்
குச்சிகொண்டு
பூ வரைவேன், காய் வரைவேன்
அதன் பின்
அணில் கோதும் பழம் வரைவேன்
நிஜத்தில்
பருவங்களைக் கடப்பது
அத்தனை இலகுவாய்த் தோன்றவில்லை.
யாரும் விழிகளை நனைத்துக்
கொள்ளாதீர்
நாம் மீண்டும் சந்தித்தல் கூடும்,
வாழ்க்கைப் போரில்
அவ்வப்போது கிடைக்கும்
சின்னச் சின்ன வெற்றிகளுக்காக
சிரித்துக் கொண்டோ
மிகப் பெரிய தோல்விகளுக்காக
அழுதுகொண்டோ
மீண்டும் சந்தித்தல் கூடும்.

யு.நிலாவாசன்-அக்கரைப்பற்று.


## பேனா நண்பர்கள்



பெயர்: ஏ. பத்மா
வயது: 24
முகவரி: இல. 525, காலி வீதி,பம்பலப்பிட்டி, கொழும்பு-04,
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: ஆர். கிரிதரன்
வயது: --
முகவரி: C/O MAINTANCE DEPT Q.P, P.O.BOX-100001 DUKHAN-QATAR.
பொழுது போக்கு: வழமையானவை.



பெயர்: வை.எம். றிபாத்
வயது: 27
முகவரி: P.O.BOX- 1679, PERSONAL DEPARTMENT, BURAYDAH, (K.S.A.)
பொழுது போக்கு: ரி.வி., தினமுரசு.

## என் மனம்...!

மரணம்!
இதற்குத்தான் இப்போது
என்மனம்
மாலைபோட்டுப் பார்க்கிறது.
*
என் ஜனனத்தில்
பெற்றவனின்
மரணச் சந்திப்பு!
*
பத்தாண்டுக்கு முன்
சுட்டுத் தள்ளிய குண்டில்
சுமந்தவளின்
துர்ப்பாக்கிய இழப்பு
*
பட்ட மரமாய்-சிலகாலம்
பாதையோரத்தில்
பட்ட தவிப்பு!
*
அநாதை இல்லத்தாயின் அன்பு...
ஆயாவின் அரவணைப்பு...
உடன்பிறவா சகோதரர்களின் பரிவு...
உடைமையில்லா பாசங்களில்
உழன்ற என் வாழ்வு...!
*
பாவை மீது
பாய்ந்து சென்ற
பாழாய்ப் போன
பருவக் கனவில்..
*
காதல் வோட்டுக் கேட்டு
காலடியில் வீழ்ந்து
கன்னத்தில் வாங்கிய-அவள்
காலணியின் பதிவு!
*
இத்தனை சோதனைகளும்
பிறந்தது முதல்
எனக்கென்றே
ஏணிப்படி அமைத்தபின்
எதற்கு எனக்கொரு
வாழ்க்கை?
எதைச் சொல்லி
என் மனதைத் தேற்றுவேன்
ஒன்றுமில்லை
என்ற போது...!

பி.விஜயமலர்-சம்பூர்

## தேடிப் பெற்றவை

இனிய தமிழ் மொழியில் பேச்சு வழக்கினிடையே சொல் நயத்தோடும் பொருள் நயத்தோடும் சொற்சுவையை ஏந்திவரும் பழமொழிகளும் பாங்கான கருத்துக்களும் இப்பகுதியில் தொடர்ந்து வரும்...

## நாட்டுப்புறப் பழமொழிகள்

**"இருட்டு வீட்டுக்குப் போனாலும்**
**திருட்டு கை கேட்காது"**

மனிதன் தன் செயலை மாற்றிக்கொள்வது கடினம். இயல்பாய் அமைந்துவிட்ட சுபாவம் எளிதில் மாறாது; மறையாது. இது கருதியே 'தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" என்று ஒரு பழமொழியே வந்தது. திருடியே பழக்கப்பட்டவன் திருட்டை மறப்பது கடினம். சட்டம் போட்டாலும் 'திருடனே பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது' என்று கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு திரைப்பாடலில் கூறுவார். பொய் பேசியே பழக்கப்பட்டவன் பொய்யே பேசுவான். இந்த இயல்பை அழகாய்ச் சொல்லும் விமர்சனமே இது.

இப்படிப்பட்ட திருடனை,

**"சாப்பிடும்போதே மோட்டு வளையை**
**எண்ணுகிறவன்"**

என்று நாட்டுப்புறத்தில் விமர்சிப்பார்கள். ஒரு திருடனை அழைத்து வீட்டில் விருந்து கொடுத்துச் சாப்பிட வைத்தால், அவன் சாப்பிடும்போதே மேலே வீட்டின் கூரையை முகட்டு வளையை ஆராய்வான். அதாவது இரவில் எப்படி கூரையைப் பிரித்து உள்ளே இறங்கித் திருடலாம் என யோசிப்பானாம்.

**"அன்னமிட்ட வீட்டுல**
**கன்னக் கோல் வைக்காதே"**

என்பது திருடனுக்கு உரிய நெறிமுறையில் ஒன்று. சாப்பிடும் வீட்டில் திருடக் கூடாது என்பது திருடர்களே கடைப்பிடிக்கும் நியதி. அதையும் மீறித் திருட நினைப்பவனைத்தான் சாப்பிடும் போதே முகட்டு வளையை எண்ணுகிறவன் என்பார்கள். தவறுகள் செய்பவர்கள் கூட சில நெறிகளைக் கடைப்பிடிப்பது வழக்கம். அதில் ஒன்று

**"பாலைக் குடித்துவிட்டு**
**பாதகம் நினைக்கக் கூடாது"**

என்பது. இன்றும் கூட சிலர் மீது நமக்கு கெடுதல் செய்வார்கள் என்ற ஐயம் எழுந்தால், அவர்கள் வீட்டுக்கு வரும்போது பால் கொடுப்பது வழக்கம். காரணம் பாலைக் குடித்துவிட்டால் அவர்கள் பாதகம் நினைக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கையே.

இப்படி மனித இயல்புகள் மாறாது என்ற கருத்தில் வழங்கப்படும் பல பழமொழிகள் இருக்கின்றன.

## சிறப்புக் கவிதை

**கவிதை நெஞ்சங்களுக்கு!**

இவ்வாரச் சிறப்புக் கவிதையாக அவுஸ்திரேலியக் கவிதை ஒன்று. விளக்கம் தேவையில்லை கவிதையைப் படியுங்கள்.

### புலி

காகிதப் புலிகள் நடுப்பகலில் உறுமும்;
சூரியன் மிக உஷ்ணமாயிருக்கிறான்.
சூரியன் உச்சியிலிருக்கிறான்.
அவைகள் ஒருமித்த குரலில்
உறுமும், சுருதியற்று;
சோகம் கொணரும்
கொடூரமான வேட்டைக் கூக்குரல்
ஓ! நீயதைக் கேட்கும்போது
பொத்திக் கொள் காதுகளை
இறுக்கிக் கொள் இமைகளை
நாக்கையும் அடக்கிக் கொள்.
தீங்கற்ற அந்தக் காகிதப் புலி
இளையவர்களை வசீகரிக்கும் சக்தி
கொண்டது.

சந்தடி நிறைந்த வீதி அதன் காடு
குருதியை அது குடிப்பதில்லை.
மாமிசத்தையும் ருசிப்பதில்லை
இதயத்தை தடுமாற வைக்கும்
களங்கப் படுத்தும்
ஆனால் மரம் மரமாய் வாசல் வாசலாய்
அந்தி நகரும் போது
கானகப்புலி உறக்கம் விட்டெழுந்து
தன் அதிகாரபூர்வ உறுமலை வெளிப்படுத்தும்
அது இரவைத் தகர்க்கும் நட்சத்திரங்களை
குலுக்கும்
அதிலொன்று சிதறிப் பிரகாசமாய்
வானிலிருந்து விழும்வரை
பிறகு, அதிர்ந்த உன் இதய அலறலைச்
சந்திக்க
அக்குரல் வானில் உயர எழும்புவதைக் கேள்.
என் குழந்தாய்! அப்போது
உன் பயத்தைத் தூரவை
கதவின் தாழை நீக்கி வெளிப்படு.
நிஜப் புலி உனக்காகக் காத்திருக்குமங்கே.

அதன் பொன்னிற விழிகள் உனக்கு வழிகாட்டியாகும்.
தன் ஆக்ரோஷத்திலிருந்து அது உன்னைத் தப்பவிட்டால்
இந்த உலகமும் எல்லா உலகங்களும் உன்னுடையதே.
கானக வழிக்குத் தாவிக் குதித்து
தன் குருதி தோய்ந்த வாயால்
அது உன்னைத் தழுவவும் கூடும்.
பிறகு சொல், அதன் தெய்வீகத் தழுவல்
உன் நரத்துவப் பகுதிகளை அழித்ததென்று;
நாம் என்ன செய்யப் பிறந்தோமோ அதையே
செய்யுமந்த
உன்னத இனத்தவன் தான் நானும் என்று.

நன்றி: லயம்.

ஏ.டி. ஹோப்
தமிழில்: ஜாதவே[illegible]



# கூந்தல் பராமரிப்பு

இந்தப் பகுதியில், உங்கள் கூந்தல் பராமரிப்புப் பற்றிப் பார்க்கலாம்...

பருவ வயதில் பெண்களுக்குக் கூந்தல் அழகு என்பது மிக முக்கியம். அதுவும் இந்த நாகரிக காலத்தில், கூந்தல் அழகு தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. அந்த வகையில் உங்கள் கூந்தலைப் பராமரிக்க, இதோ சில முக்கிய ஆலோசனைகள்... பின்பற்றிப் பாருங்கள்... அப்புறம் என்ன நீங்களும் ஒரு கூந்தல் அழகியாக மாறிவிடுவீர்கள்...!

முதலில், கூந்தல் அழகிற்கும் ஆரோக்கியத்திற்கும்... நீங்கள் செய்ய வேண்டியது. அதற்கான சரியான பொருட்களைப் பயன்படுத்துவதுதான். எப்படி...?

உங்கள் கூந்தல் பராமரிப்பிற்காக நீங்கள் தேர்வு செய்யும் பொருட்கள், கூந்தலுக்கு ஏற்றதாக இருப்பது மிக அவசியம். அதோடு அது கூந்தலுக்கு மிகுந்த போஷாக்கு அல்லது ஊட்டம் தந்து பாதுகாப்பும் தருவதாக விளங்க வேண்டும்.

ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு வகையான முடி அமைப்புகள் இருக்கலாம். உங்கள் வகையை எப்படி அறிந்து கொள்வது...? கூந்தலை அழகாகவும், ஆரோக்கியமாகவும் வைத்திட முதல்படி உங்கள் முடி எந்த வகை, என்ன தன்மை உடையது என்பதைத் துல்லியமாக அறிந்துகொள்வது முக்கியம். அதன் பிறகுதான் அதற்கு எந்த வகையான பராமரிப்புப் பொருட்கள் சரியாகப் பொருந்தி வரும் எனக் கணித்து, அப்படிப்பட்ட பொருட்களைத் தேர்வு செய்திட வேண்டும்.

பொதுவாகக் கூந்தலை 3 வகைகளாகப் பிரிக்கலாம். அவை...

**சாதாரண கூந்தல்**

எண்ணெய்ப் பிசுபிசுப்பான கூந்தல், உலர்ந்த முடி... சரி, இவற்றைப் பற்றித் தனித் தனியே விரிவாகப் பார்ப்போம்..

**சாதாரண கூந்தல்..**

இது, பிசுபிசுப்பு, அரிப்பு, பொடுகு, பேன் தொல்லை என எந்தப் பிரச்சனையும் இல்லாத வகையைச் சேர்ந்தது.

**எண்ணெய்ப் பிசுபிசுப்பு கூந்தல்...**

இந்த வகைக் கூந்தல் கொண்ட பெண்களுக்குப் பொதுவாக உடலில் உள்ள சுரப்பிகளில் அதிகமாக எண்ணெய் சுரந்துகொண்டே இருக்கும். இது அவர்கள் இயற்கையான உடல் வாகு. அதிலும் குறிப்பாக இந்த நிலை அந்தப் பெண்கள் பருவம் அடையும் சமயத்தில்தான் பெரும்பாலும் நிகழ்வதற்கான வாய்ப்பிருக்கிறது. இப்படிப்பட்ட வகைக் கூந்தல் ஒரு கெட்டியான பிடிமானம் இன்றித் தொங்கிக்கொண்டிருக்கும்.



இதன் இயற்கையான அதிக எண்ணெய்ப் பிசுபிசுப்புத் தன்மையால், இதை அவ்வளவு எளிதாக அழகு செய்ய முடியாது. இவர்களுக்கு போனசாக இன்னொரு பிரச்சனையையும் இயற்கை வழங்கி உள்ளது. அது என்ன தெரியுமா...? மற்ற வகைக் கூந்தல்களை விட இவர்களது கூந்தலில் எளிதாக, விரைவாக அழுக்குச் சேர்ந்து தொல்லைகளை அதிகரிக்கும்.

**உலர்ந்த முடி...**

இந்த வகை முடி நமது கவனக் குறைவால் நாமே உருவாக்கிக்கொள்வது. போதுமான அளவில் தலைக்கு எண்ணெய் சேர்க்கப்படாத நிலையில் இந்தப் பிரச்சனை முளைக்கிறது. சரியான பராமரிப்பில்லாத காரணத்தால், இந்த வகைக் கூந்தல் எப்போதும் ஒரு வித காய்ந்த தன்மையோடும், பலவீனமாகவும் தோன்றும்.

உங்கள் முடியின் தன்மையையும், அதைச் சரி செய்வதற்கான சில ஆலோசனைகளையும் அறிந்துகொள்ளலாம்...

உங்கள் முடி பளபளப்பைப் பொறுத்தமட்டில், அதிகமாகவும், தொடுவதற்குப் பட்டுப் போன்ற மென்மையுடனும், ஸ்டைலில் சாதாரண பிடிப்புடனும், கூந்தலைக் கழுவுவதில் வாரம் 2 முறை எனப் பின்பற்றுபவராக இருந்தால், நீங்கள் செய்ய வேண்டியது... சாதாரண கூந்தலாக இருந்தால் அவற்றைக் கழுவவும். ஊட்டம் அளிக்கும் ஷேம்புகளைப் பயன்படுத்தலாம்.

மந்தமான பளபளப்பு, காய்ந்த நுனி, உடைந்த நுனி கொண்டது, ஸ்டேடிக் அல்லது ப்ரிஸ்சி பிடிமானம், அதோடு வாரம் 1 தடவைதான் கூந்தலைக் கழுவிக்கொள்பவராக இருந்தால், நீங்கள் செய்ய வேண்டியது... இதுதான்... உங்களுக்குக் காய்ந்த முடி, ஒரு ட்ரை, டேமேஜ் ஆன முடிக்கு தகுந்தபடி, ஷேம்பு போட்டுத் தவறாமல் கழுவுங்கள். நல்ல ஊட்டம் நிறைந்த பராமரிப்புப் பொருட்களைப் பயன்படுத்துங்கள். இதற்கேற்ற ரின்ஸ் கண்டிஷனர் போன்றவற்றைப் பயன்படுத்திக் கூந்தலை நல்ல முறையில் பாதுகாத்து வாருங்கள்.

எண்ணெய்ப் பிசுபிசுப்பான கூந்தல், வேரில் எண்ணெய்ப் பிசுபிசுப்பு, சப்பையான அமைப்புக் கொண்டது, அல்லது கனமாக இருப்பது போன்ற அமைப்புகளோடு.. வாரம் 1 அல்லது 2 நாட்களுக்கு ஒரு முறை கூந்தலை அலசுபவராக நீங்கள் இருந்தால்... செய்ய வேண்டியது... இதுதான்...

உங்கள் கூந்தல், ஸ்பைசி, அல்லது க்ரீசி தன்மை கொண்டது. பேலன்ஸ்டு பார்முலா கொண்ட ஷேம்புகள் உங்கள் கூந்தலுக்குத் தேவையான ஊட்டம் அளிக்கும். இப்படிச் செய்வதால், உங்கள் முடி கனமாகாது. மாறாக, நாளுக்கு நாள் மென்மையான கேசத்தைப் பெறுவீர்கள்.. ■

# பிளீச்சிங் செய்யலாமா?

சரும நிறத்தைப் பற்றிக் கவலைப்படாத பெண்கள் வெகு சிலர். அழகை அதிகரித்துக் காட்டுவதில் நிறத்துக்கும் முக்கிய பங்குண்டு. சரும நிறம் என்பது பிறக்கும்போதே தீர்மானிக்கப்படுகிற விஷயம் என்றாலும் அதை ஓரளவு அதிகரித்துக் காட்ட அழகுக் கலையில் சில செயற்கை வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்று பிளீச். அதைப் பற்றிய சில உண்மைகளைப் பார்ப்போமா?



பிளீச் செய்வதால் சரும நிறம் மாறுவதில்லை. சருமத்தின் மேலுள்ள மெல்லிய ரோமங்கள் நிறம் மாறுவதால் நிறம் கூடினாற் போலத் தெரிகிறது.

பிளீச்சில் இரசாயனங்களைக் கொண்டு செய்யப்படும் கெமிக்கல் பிளீச், மூலிகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும்ஹெர்பல் பிளீச், வாசைன எண்ணெய்களைக் கொண்டு தயாரிக்கப்படும் அரோமா பிளீச் எனப் பல வகை உண்டு. இப்போது புதிதாக ஆக்சி பிளீச் என்ற ஒன்று வந்திருக்கின்றது. இதில் ஆக்சிஜன் துகள்கள் இருப்பதால் சருமம் பாதிக்கப்பட வாய்ப்பே இல்லையாம்.

பிளீச்சிங் செய்துகொள்வதற்கு முன்பாக அது சருமத்துக்கு ஒத்துக் கொள்ளுமா எனப் பார்த்துவிட்டே போட வேண்டும். பொதுவாக பதினெட்டு வயதுக்குப் பிறகு பிளீச் செய்துகொள்வது பாதுகாப்பானது. 18 முதல் 25 வயது வரை உள்ளவர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும், 25 வயதைத் தாண்டியவர்கள் மாதம் ஒரு முறையும் பிளீச்சிங் செய்துகொள்ளலாம். பிளீச்சில் முகத்துக்கு, கை, கால்களுக்கு, கழுத்துக்கு எனத் தனித்தனியே இருக்கிறது. அந்தந்தப் பகுதிக்கேற்ற பிளீச்சைதான் செய்துக்கொள்ள வேண்டும். வேறு எந்த அழகு சிகிச்சையையும் வீட்டிலிருந்தபடியே செய்து கொள்ளலாம். ஆனால் பிளீச்சிங்கை மட்டும் அழகு நிலையத்தில் செய்து கொள்வதே பாதுகாப்பானது. இதில் கொஞ்சம் அளவு மாறினாலும் சருமம் கருகிவிடும். பிளீச் செய்ததும் உடனே ஃபேஷியல் செய்வது நல்லது. அப்படி முடியாத பட்சத்தில் பிளீச்சுக்குப் பிறகான கிரீமையாவது தடவிக்கொள்ள வேண்டும். கண்களின் அடியில் பிளீச் செய்யக் கூடாது. சிலர் கண்களுக்கடியில் உள்ள கருவளையத்தை மறைக்க பிளீச் செய்வார்கள். இது மிகவும் ஆபத்தானது. பிளீச் செய்த உடனேயே வெயிலில் போகக் கூடாது. அப்படிப் போனால் பிளீச் செய்து திரும்பப் பெற்ற நிறம் மறுபடியும் கறுத்துவிடும். பிளீச் செய்ததும். குளிர்ந்த தண்ணீரால் முகம் கழுவினால் அரிப்பு, அலர்ஜி போன்றவை வராது. பருக்களோ, கட்டிகளோ இருக்கும் போது பிளீச் செய்யக் கூடாது. ●


செல்வாஸின் 7

சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.



செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப்படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 17- 05-2003

அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
புத்தூர் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

இரஞ்சிதமலர் செல்வநாயகம்,
சிவன் கோவில் வீதி, புத்தூர்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.


# மார்பகமே மார்பகமே!

"நல்லாத்தான் இருந்தா. திடீர்னு உடம்புக்கு முடியாம ஆஸ்பத்திரிக்குப் போனவ, வரும்போது மார்பகத்துல கேன்சர்னு ஒரு பக்க மார்பை எடுத்துட்டு வந்து நிக்கிறா. பார்க்கப் பரிதாபமா இருக்கு" அடிக்கடி நம் காதுகளில் விழுகிறது இந்த வசனம். ஏன் வந்தது. எப்படி வந்தது என வந்த பிற்கால ஆராய்ச்சிக்குப் பதில் வருவதற்கு முன்பான சில எச்சரிக்கைகள் பெண்களுக்குத் தேவை. இதோ அவை உங்களுக்காக... உங்களுக்கு வரலாம். உங்கள் அம்மா, அவரது அம்மா, அக்கா மாதிரி யாருக்காவது மெனோபாஸ் காலத்துக்கு முன்பே மார்பகப் புற்று நோய் தாக்கியிருந்தால், உங்களுக்கும் அது வர வாய்ப்புகள் அதிகம். எங்க வீட்டில நான் தண்ணி குடிச்ச டம்ளரைக் கூட நகர்த்தி வச்சதில்லை என நீங்கள் வேலை செய்யாததைப் பற்றிப் பெருமை பீற்றிக்கொள்ளாதீர்கள். எந்த வேலையும் செய்யாமல், சாப்பிட்டு உடல் பெருத்துப் போனால், அது மார்பகப் புற்றுநோயில் கொண்டு போய் விடும். ஜாக்கிரதை! வேலை செய்யாவிட்டாலும், ஏதேனும் உடற்பயிற்சியாவது செய்து உடலை எடை ஏறாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

மார்பகப் புற்றுநோய்க்குக் காரணமே ஈஸ்ட்ரோஜன் என்கிற பெண் ஹொர்மோன்தான். பெண் வயதுக்கு வருவது முதல் இந்த ஹார்மோன் சுரப்பி அதிகரிக்க ஆரம்பிக்கிறது. எனவே ரொம்பவும் இளம் வயதில் அதாவது பதினொன்று அல்லது அதற்கும் முன்பாகப் பூப்பெய்தும் பெண்களுக்கு இந்த நோய் வர வாய்ப்புகள் உண்டு. குடிக்கிற பழக்கம் இன்று பெண்களிடையே சாதாரணமாகி வருகிறது. ஸ்டேட்டஸ், ஃபேஷன் என அதற்கு நீங்கள் ஆயிரம் காரணம் சொல்லிக்கொண்டாலும் அந்தப் பழக்கம் மார்பகப் புற்று நோய்க்கு விதை போடும் என்பதை மறக்காதீர்கள்.

<u>அறிகுறிகள் :</u> மார்பகக் காம்பு திடீரென உள்நோக்கித் திரும்புதல் மார்பகத்தில் வீக்கம், சிவந்து போதல், சூடாதல் போன்றவை. அவை சீக்கிரம் மறையாமலிருத்தல், மார்பகங்களில் ஏற்படுகிற வலி, மாத விலக்கு சுழற்சி காரணமாக மாறாமலிருத்தல். மார்பகங்களின் வடிவத்திலோ அளவிலோ திடீர் மாறுதல்கள், மார்பகக் காம்புகளைச் சுற்றி அரிப்பு, எரிச்சல், தோல் உரிகிற மாதிரியான உணர்வு, ஒரே ஒரு மார்பகக் காம்பிலிருந்து ஏற்படும் திடீர்க் கசிவு. மேற்சொன்ன அறிகுறிகளில் உங்களுக்கு ஒன்று இருந்தாலும் உஷார். உடனடி மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளுங்கள். என்ன செய்யலாம்? 35 வயதுக்குட்பட்டோருக்கு மார்பகப் புற்றுநோய் வரும் வாய்ப்புகள் குறைவு. அதற்கு மேற்பட்டோர் முறையான மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வது நலம். 30 வயதைத் தொட்டுவிட்டீர்களா? அது உங்கள் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டிய காலகட்டம். நீங்கள் என்னவெல்லாம் செய்ய வேண்டும் தெரியுமா?

உங்கள் குடும்பத்தில் யாருக்காவது மார்பகப் புற்றுநோய் இருந்திருக்கிறதா எனக் கண்டுபிடியுங்கள். வருடத்துக்கொருமுறை மருத்துவரை நேரில் சந்தித்து மார்பகப் பரிசோதனை செய்துகொள்ளுங்கள். மாதம் ஒரு முறை உங்கள் மார்பகங்களை சுய பரிசோதனை செய்துகொள்ளுங்கள். முறையாக பாப் டெஸ்ட் செய்துகொள்ளுங்கள். சரி விகித உணவு உட்கொள்ளுங்கள். உடற்பயிற்சி செய்யத் தவறாதீர்கள். எப்போதும் சுறுசுறுப்பாக இருங்கள். ஆல்கஹோல் கலந்த பானங்களைத் தவிருங்கள். புகைப் பழக்கம் இருந்தாலும் விட்டுவிடுங்கள்.

இளம் பெண்களின் மார்பகங்களில் பால் சுரப்பிகள் இருக்கும் என்பதால் உருண்டை உருண்டையாக இருப்பது சகஜம்தான். அதை மார்பகப் புற்றுநோயுடன் தொடர்புப்படுத்திப் பயப்பட வேண்டாம். அதே மாதிரி மாத விலக்குக்கு முன்பாக ஹார்மோன் அளவுகள் அதிகமாக இருக்கும் என்பதாலும் மார்பகங்கள் உருண்டு, திரண்டு இருக்கலாம். எனவே மாதவிலக்கு முடிந்த ஐந்து முதல் ஏழாம் நாளில் சுய பரிசோதனை மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கு மார்பகப் புற்றுநோய் வந்திருக்குமோ என்ற பயத்தில் மருத்துவப் பரிசோதனைக்குப் போகிறீர்களா? மேமோகிராம் எனகிற சோதனையைச் செய்யச் சொல்லி மருத்துவர்கள் அறிவுறுத்துவார்கள். அதை விட அல்ட்ரா சவுண்ட் சோதனையே துல்லியமான ரிசல்ட்டைக் காட்டும். அதுவும் இளம் பெண்களைப் பொறுத்த வரை நோயின் தாக்குதலை மிகச் சரியாகத் தெரிந்து கொள்ள அல்ட்ரா சவுண்டே சிறந்தது. மார்பகப் புற்றுநோய்க்கு எதிராக தடுப்பூசி போட்டுக்கொண்டு தங்களைக் காத்துக்கொள்ளும் நாள் பெண்களுக்கு வெகு தொலைவில் இல்லை. ஆட்டோவேக் எனப்படுகிற அந்தத் தடுப்பூசி இப்போது ஆராய்ச்சியில் இருக்கிறது. இது மார்பகப் புற்றுக்குக் காரணமான செல்களை தயவு பார்க்காமல் விரட்டியடிக்கும் சக்தி வாய்ந்ததாம். ●

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

### ஜவஹர்லால் நேரு

இந் நூல் ஒரு தலைப்பட்சமானது என்றும், தவிர்க்க முடியாத தற்பெருமையை உள்ளடக்கியது என்றும் வாசகர்களை எச்சரிக்க நான் விரும்புகிறேன். பல முக்கிய நிகழ்ச்சிகள் முற்றிலுமாக இந் நூலில் இடம்பெறவில்லை; நிகழ்ச்சிகளை உருவாக்கிய முக்கியமான பலர் இதில் குறிப்பிடப்படவேயில்லை. ஓர் உண்மையான ஆய்வு நூலில் இத்தகைய தவிர்ப்புகளை மன்னிக்க முடியாது. ஆனால், தனிப்பட்ட ஒருவரின் வரலாற்றில் இது போன்ற தவிர்ப்புகள், இருக்க முடியும். அண்மைக்கால வரலாற்றினைச் சீராய்ப் படிக்க விரும்புபவர்கள், வேறு புத்தகங்களை நாடிச் செல்வது நல்லது. ஆயினும் வரலாற்று உண்மைகளின் பின்னணியைக் கண்டுணரவும், இடைவெளிகளை இட்டு நிரப்பவும் இத்தகைய தனிப்பட்டோர் வாழ்க்கை வரலாறு உதவும்.

நான் பேரன்பும், பெருமதிப்பும் கொண்டு பல்லாண்டுகள் நெருங்கிப் பழகிய பல நண்பர்கள் குறித்து இப் புத்தகத்தில் வெளிப்படையாக விவாதித்திருக்கிறேன். சில தனிப்பட்டோரையும், குழுவினரையும் சாடியிருக்கிறேன்; சில நேரங்களில் கடுமையாகவே விமர்சித்திருக்கிறேன். இதனால் அவர்கள் மீது நான் கொண்டிருக்கும் மதிப்பும் மரியாதையும் போய்விட்டன என்பது பொருளல்ல. ஆனால், பொதுவாழ்வில் தலையிடுவோர் ஒருவருக்கொருவர் வெளிப்படையாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல், தாம் பணியாற்ற விரும்பும் மக்களிடமும் வெளிப்படையாக இருக்க வேண்டும். மேற்பூச்சான மரியாதையாலோ, துன்புறுத்தும் அல்லது தர்மசங்கடத்திலாழ்த்தும் வினாக்களைத் தவிர்ப்பதாலோ ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொண்டுவிட முடியாது; நம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சரிவரப் புரிந்துகொள்ள முடியாது. மாறுபட்ட கருத்துகளையும், ஏற்புடைய நிலைகளையும் ஏற்றுக்கொண்டு, எவ்வளவு அசௌகரியமாக இருந்தாலும் உண்மையைச் சந்தித்து அவற்றின் அடிப்படையிலேயே உண்மையான ஒத்துழைப்பு உருவாக வேண்டும். ஆனால் ஒன்று. இதில் எழுதியிருக்கும் எந்தக் கருத்தும் யாருக்கும் எதிரான தீய எண்ணம் கொண்டதல்ல; எந்தத் தனிநபர் மீதும் பகைமையுணர்ச்சி கொண்டதல்ல.

**ஜவஹர்லால் நேருவின்**
**சுயசரிதையில் இருந்து**

## தேனினுமினிய செவ்விதழ்ப் பேச்சும் கூர் விழிப் பார்வையும் எனைத் துரத்தும்.....

ஜன்னலருகே கம்பியை விரல்களால் பற்றியவாறு வெளியே பார்த்துக் கொண்டிருந்த சம்யுக்தாவைப் பின்புறத்தில் நெருங்கி அவள் அழகிய தோள்களைப் பற்றினான் அச்சுதன்.

தோள்களைப் பற்றிய அவன் கைகள் அத்துடன் நில்லாததால், அவள் சற்றுச் சங்கடத்துடன் நெளிந்தாள். பின்புறத்தில் நின்ற அச்சுதனின் முரட்டு உடல் அவள் மீது பலமாக அழுந்தவில்லையாயினும் ஓரளவு பட்டுக்கொண்டே நின்றதன் விளைவாக, அசைவற்று நின்ற அவளது அழகிய உடலும் வெட்கத்தால் சற்றே நெளிந்தது. அந்த அசைவில் அவள் உடைகளும் சிறிது நெகிழ முற்பட்டன. இடையில் தவழ்ந்து சென்று கொடியைப் போல் அவள் மேல் படர்ந்திருந்த மேலாடை போதிய இடைவெளி கொடுத்தது.

அவள் மூச்சும் சற்றுப் பெரிதாக வந்ததன்றி, இதயமும் சற்றுப் பெரிதாக அடித்துகொண்டது. சங்கடத்துடன் அசைந்த அவளது சிறிய நகர்வுகளில் அவனை வரவேற்கும் அறிகுறிகள் தெரிந்தன. இத்தனை அழைப்புகளுடன் அவள் பேச்சும் கலந்துகொண்டது.

"என்ன செய்யப் போவதாய் உத்தேசம்?"

சம்யுத்தா பேசியபோது உண்டான உடலசைவில் தன்மீது உராய்ந்துவிட்ட அவளது பின்னெழில்களிலொன்று சங்கடமான இன்பலாகிரியைச் சித்தத்தில் ஏற்றிவிட்டதை உணர்ந்த அச்சுதன், "கவிதை எழுதப் போகிறேன்..." என்றான் குழறலாக,

"எங்கே?" என்றாள் முகத்தைச் சற்றே திருப்பி,

"இங்கே" என்று அவள் கன்னத்தில் உதடுகளைப் பதித்தான் அச்சுதன்.

"இதுதானா?" என்று கேட்டபோது அவள் இதழ்களில் இகழ்ச்சி நகை ஒன்று படர்ந்தது. அதேவேளை, சம்யுக்தாவின் இடை அவனைச் சிறிது அதிகமாக நெருங்கியதால் இடையின் பின்புறக் கீழ்ப்பகுதியும் அவன் காலின் பக்கத்தில் மிருதுவாகவும் கடினமாகவும் பருமனாகவும் இழைந்தது. அதனால் ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில், அவளுடலை அணைத்து நசுக்கிக் கழுத்தில் முத்தமிட்டான்.

"இமைகள் அசைந்தால் புயல் அடிக்கிறது; கண் திறந்தால் வெயில் அடிக்கிறது; புன்னகைத்தால் பூப் பூக்கிறது; நினைத்தாலோ மழையடிக்கிறது..." என்று அவள் கழுத்துக்குள் முணுமுணுத்தான்.

"எங்கே?" மான்விழிகள் மேலேறிச் செருக, தாபப் பரவசமாய்க் கேட்டாள்.

"என் மனதுக்குள்" என்றவன், அவளது இன்பப் பெருமூச்சால் விளைந்த அசைவுகளை உடலில் உணர்ந்தவனாக "என் ரத்தினமே" என்று தோளில் சாய்ந்தான்.

அவன் கைக்குள் சிக்கியிருந்த சம்யுக்தாவும் ரத்தினம் போல் தானிருந்தாள். ஆனால் அசல்



ரத்தினம் போல கெட்டியாக இல்லாமல் புஷ்பம் போல மென்மையாக இருந்ததால், அதை ஆசையுடன் அச்சுதன் கைகள் தடவின. அந்த மலர் மென்மையின் சுகம் விரல்கள் வழியாக அவன் மூளையைச் சென்று தொட்டது. கொஞ்ச நஞ்சம் மிச்சமிருந்த அவன் உறுதியெல்லாம் காற்றில் பறந்தது. திடீரென்று அவளை இறுக அணைத்தான். பிறகு இரு கைகளாலும் தோளைப் பிடித்துச் சற்று எட்ட நிற்க வைத்துப் பார்த்தான்.

அடுத்தபடி அவனது வலது கை அவள் முகவாய்க் கட்டையில் பதிந்து கன்னம் இரண்டையும் அழுந்தப் பிடித்தது. கண்களை கண்கள் நீண்ட நேரம் சந்தித்துக் கிடந்தன.

சமகாலத்தில் அச்சுதனின் இடதுகை அவள் இடையிலிறங்கி வளைந்து இறுக்கி அவளைத் தன்னருகே இழுத்தது. அந்த மலருடலின் பூரண சம்மதத்துடன் அவனுலட் இழைந்தது. அந்த முரட்டுத்தனத்தில் அமிழ்ந்தது. அந்த நிலையிலேயே சம்யுக்தாவின் முகத்தில் விழிகளை ஒட்டிய அச்சுதன், வலது கையைத் தூக்கி சுட்டுவிரலினால் சிவந்த அவள் உதடுகளைத் தடவினான்.

"பாலைவனப் பாதைகளில் பொருள் தேடிச் செல்கின்ற எனக்குத் தடையாக வருத்தம் செய்யும் வேறெதுவும் வேண்டியதில்லை" என்று மெல்லச் சொன்னாள்.

புரியாத கேள்விக்குறி விழிகளில் மின்ன,"உம்" என்ற ஒலியை உதடுகளிலிருந்து உதிரவிட்டாள் சம்யுக்தா.

அச்சுதன் கனவுக் கண்களோடு பேசினான். "முருக்கம் பூவின் சிவந்த இதழ்களைப் போல இருக்கும் இந்த அழகிய வாயிதழ்களையும், இதிலிருந்து பிறக்கும் இனிய பேச்சையும், பொருத்தமாய்த் தெரிந்து அணிந்துகொள்ளும் ஆபரணங்களையும், அழகிய இந்தக் காதணிகளோடு சண்டைபோடுவதற்கு நிண்டு வந்திருக்கிற கண்களால் என் செல்லம் என்னைப் பார்க்கிற இந்தப் பார்வை நான் எங்கு போனாலும் என்னைத் துரத்தும்; என்னை வேறெதுவும் செய்யவிடாது தடுத்து நிற்கும். இதைவிடப் பாலைவனங்கள், கொடிய விலங்குகள் உள்ள வனங்கள் என்ன தடைகளைச் செய்துவிடப் போகின்றன?" சொல்லியபடியே அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

சம்யுத்தா அவனது கைகளுக்கிடையில் ஓர் அழகிய விலங்கென தகித்து உருகினாள்.

**கவரிதழ் அன்ன**
**காண்பின் செவ்வாய்,**
**அந்தீங் கிளவி,**
**ஆயிழை மடந்தை**
**கொடுங் குழைக்கு**
**அமர்த்த நோக்கம்**
**நெடுஞ்சேன் ஆரிடை**
**விலங்கும் ஞான்றே?**

*(அகம்:3: 15-18)*

இலக்கிய நயம்

தருவது

## சிந்தியா பதில்கள்

★ இனங்களுக்கிடையே சௌஜன்ய உறவு உருவாகி நாட்டில் அமைதிச் சூழ்நிலை ஏற்படுவதற்குத் தடையாக இருக்கும் காரணிகள் உங்கள் பார்வையில் எவை?

-ஜே.பிரபாகரன், கண்ணகிபுரம் - 3.

சமாதான விரோத சக்திகள்தான் என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லாவிட்டால் நாம் துரோகி என்றே பார்க்கப்படும் ஒரு சமூகச் சூழ்நிலையில் உண்மையை எப்படிப் பேச முடியும்? நீங்கள் மனதுக்குள்ளாவது யோசித்துப் பார்க்க ஒரு தகவல். தமிழ் மக்களைத் தனிநாடு கேட்டுப் போராடும் நிலைமைக்குத் தள்ளியது யார் என்று அறிவோம். இப்போது வடக்கு கிழக்கைப் பிரிக்க வேண்டும் என்று கிழக்கு முஸ்லிம்கள் கேட்கும் நிலைமைக்குக் கொண்டு வந்திருப்பது எந்த வீரப் பயணத்தின் இன்றைய கட்டம் என்று நாங்களாகவேதான் புரிந்துகொள்ள வேண்டும்.

❀■❀

★ சமீபத்தில் சிந்தியாவின் மனதைக் கவர்ந்த பேட்டி?

-முகமட் இர்.:.பான், ஏறாவூர் -3.

சின்னத்திரை நடிகைகள்தான் விபச்சாரம் செய்கிறார்கள் என்று விஜயகாந்த் சொல்லியிருந்ததற்கு விகடனில் புவனேஸ்வரி அளித்திருக்கும் பதில்.

❀■❀

★ உங்களுக்கு மேலே ஒருவர் இருப்பதை நீங்கள் நம்புகிறீர்களா?

-கே.எஸ்.பேரின்பன், கந்தளாய் - 02.

ஆமாம். திருமணமானதிலிருந்து

❀■❀

★ "சாம சாகச்சாவ" எப்படிப் போய்க் கொண்டிருக்கிறது?

-எஸ்.புவனேந்திரன், சப்ரகமுவ பல்கலைக்கழகம்.

அங்கங்கே சிலர் சாகச் சாகப் போய்க் கொண்டிருக்கிறது.

❀■❀

★ அரசு சொன்னபடி நடந்துகொள்ளவில்லை என்று புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து விலகி நிற்பதற்குக் காரணம் சொல்கிறார்கள். புலிகள் சொன்னபடி நடக்கிறார்களில்லை என்று அரசாங்கத்தினால் சொல்ல முடியவில்லை. சொல்லிவிட்டாலோ அல்லது இறங்கி வராவிட்டாலோ மீண்டும் சண்டை தொடங்கிவிடும். நிலைமை புரிகிறதா?

-க.கமால்தீன், ஏறாவூர் -3.

புரிகிறது, புரிகிறது. எனக்கு மிச்சமாக இருக்கும் கேள்வி. யார் அந்த சமாதான விரோத சக்தி?

❀■❀

★ சிந்தியா, பெண்களா ஆண்களா அதிக புத்திசாலிகள்?

-க.வேணு, பெரிய நீலாவணை 01.

ஆண்கள் அழகைப் பார்த்து மயங்கித் துணையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். பெண்கள் என்ன உத்தியோகத்திலிருக்கிறார்கள் என்று பார்த்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கிறார்கள். யார் கொலோ சதுரர்?

❀■❀

★ உமது அபிமானத்துக்குரிய அழகு நடிகை யார்?

-எம்.றிஸ்வான், கொழும்பு -12.

எனது அபிமான நடிகையைப் பெரிய அழகி என்று சொல்ல முடியாது. என் அழகுப் பெண், நடிகை அல்ல.

❀■❀



★ என் அபிமான நடிகை ஜோதிகாவின் முகவரியைத் தருவதில் ஏன் தாமதம்? உங்கள் வயது என்ன சிந்தியா?

-நிர்மல், பெரியமுல்லை.

ஜோதிகா, செனடால் சாலை, சென்னை 600 018. தாமதத்திற்கு மறதி காரணமில்லை நிர்மல். என் வயதோடு நீங்கள் அனுப்பியிருக்கும் தபாலட்டைகளின் எண்ணிக்கையையும் சேர்த்தால் தான் மறதி ஆரம்பிக்கும் வயதே வரும்!.

❀■❀

★ உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றும் போது, புலிகளின் இராணுவ செயற்பாட்டு நிலைகளையும் அகற்றுவதுதான் நியாயமாக இருக்கும் என்று நம்பியார் கூறியிருக்கிறாரே?

-ச.இரா.பாலகிருஷ்ணன், கொழும்பு

உந்த நியாயம் எல்லாம் இங்கே வேண்டாம். நோர்வே தவிர்ந்த மற்ற வெளிநாட்டு சக்திகள் எல்லாம் சமாதான விரோத சக்திகள்தான் என்று தெரியாதா நமக்கு? சிங்களப் பேரினவாத அரசு என்ன சொல்கிறது? அகற்ற முடியுமா முடியாதா? முடியாதென்றால்....வெறிகொள் மறத்தமிழ் மானப்படை பலிகொள்ளப் புறப்படும். அவ்வளவுதான்!

❀■❀

★ பேராசைக் கவலை என்றால் என்ன சிந்தியா?

-பி.ராதாகிருஷ்ணன், கொட்டாஞ்சேனை.

பிறர் பொக்கெற்றினுள் தங்கியிருக்கும் பணம் எல்லாம் நமது நட்டக் கணக்கில் பதியப்பட வேண்டியது என்று நினைத்து வருத்தப்பட்டுக்கொண்டிருப்பது.

❀■❀

★ சிந்தியா! தற்கொலை செய்வதற்கு மிகவும் துணிச்சல் வேண்டும் என்கிறார்கள். உண்மையா?

-க.கமலதாசன், வந்தாறுமூலை.

வாழ்வதற்கான தைரியத்தை இழந்த பின்னர்தானே தற்கொலை எண்ணமே வருகிறது!

❀■❀

★ "ஐ" அலைவரிசையில் விஜய், ராஜ்....அடுத்தது?

-சுதாஸ் எடம்ஸ், பூண்டுலோயா.

வணக்கம்.

❀■❀

★ "தம்" பார்த்துவிட்டீர்களா?

-மனோ கோபாலன், ஹப்புத்தளை.

தமிழ்ப் படங்கள் தரும் துயரமான அநுபவத்திற்கு ஆளாவது இதுதான் முதல்முறை என்றில்லை. ஆனால், நமது மக்களுக்கு ஹீரோக்களாக வருபவர்கள் எப்படியெப்படியெல்லாம் வீரதீரங்களில் தூள்பரத்த வேண்டும் என்கிற தகுதி வரவர உச்சமடைந்து கொண்டே வருவது திகிலேற்படுத்துவதாக இருக்கிறது. ஹீரோ விண்ணாதி விண்ணனாக இருக்க வேண்டும் என்பதோடு கூட நிறுத்திக் கொண்டால் போதாதா? வாடீ, நில்லுடீ, இருடீ, நான் ஆம்பிளைடீ..... என்று தலை யைச் சிலுப்பி உறுமித் துள்ளி மிதித்தால் தான் நம்மவர்களுக்குத் திருப்தி ஏற்படுமா? நாளைய சுப்பர் ஸ்டாராகவே தன்னைப் பாவித்துக் கொள்ளும் சிலம்பரசன் ஆரம் பத்திலிருந்தே ஏன் இப்படி வளர்கிறார்? புரிந்து கொள்ள முடியவில்லை!

❀■❀

★ சிந்தியா அவர்களே, சதாம் ஹுசைன் இருக்கிறாரா இல்லையா? ஒரே குழப்பமாக தலை வெடித்துவிடும் போல உள்ளது. உடன் பதில் சொல்வீர்களா?

- க. அருள், நீர்கொழும்பு.

மருந்து தெரியாது. இந்த நோயின் பெயர் மட்டும் தெரியும். "புனீஸியா".

"நாளைக்கி சுதந்திர தின மாம் உம்மா, எங்குட பள்ளிக் கூடத்துல கொடி ஏத்துறாங்களாம். கல்வி மந்திரி வாறாராம். எங்களெல்லோ ரையும் புது உடுப்பு போட்டுக் கொண்டு வரச் சொன்னார் அதா வுல்லா ஸோ."

# சு...தந்திர தினம்

"அதுக்கென்னடி...! வருசா வரு சம்தான் நடக்குது தினம் மட்டும் தானே வருகுது போகுது. சுதந் திரத்தை இன்னமும் காணல்லை யடி. அதுகுள்ள என்னடி உனக்கு கொடி ஏத்தமும் கொண்டாட்டமும் வேண்டி கிடக்கு. நாளைக்கி வெள்ள யூனிபோமும் சப்பாத்தும் போட்டுக்கு வரட்டாம்மா. நாளைக்கி நான்தான் அசம்பிளி யில் நீராருங் கடலுடுத்த... பாட்டுப் பாடணுமாம், எனக்கிட்ட ஒரு வெள் ளச் சட்டதான் இருக்கி, அதுவும் ஊத்தயாகிக்கிடக்குதும்மா" என் றாள் அந்த சின்ன அரும்பு சியானா.


"என்னடி! என்னென்னவெல் லாமோ சொல்றாய். நாம இல்லாத வங்க, ஒங்க வாப்பா கூலி வெள் ளாம செய்றவரு. இப்ப ஒனக்குப் புதுச்சட்டைக்கு நான் எங்கடி போவேன்? நீ போய் பொழுது சாய்றதுக்குள்ள இருக்கிற சட்டை யையாவது கழுவிப் போடு. இந்தா சவுக்காரம்" என்று செய்னபு ஒரு சின்னத் துண்டுச் சவுக்காரத்தைக் கொடுத்தாள். "செரி இப்ப கழுவிக் கொண்டாறன" என்று கிணற்ற டிக்கு ஓடினாள் சியானா.

"அந்த சின்னக்குட்டி நல்லாப் பாடுறாளாம், கல்வி மந்திரி பேசுற கூட்டத்திலும் அவள்தான் பாடப் போறாளாம். ஆனால் அந்தப் பிள்ளை போட்டுக்கு வாற சட்டை யையும் பாவாடையையும் பார்த்தா எனக்கென்டா அருவருப்புதான் வருகுது"

"அந்தப் பிள்ளைக்கு என்ன தெரியும்? பள்ளிக்கூடத்துக்கு அனுப் பக்க அதுர உம்மாதானே அழகா உடுப்புப் போட்டனுப்பணும்."

"என்னென்றாலும் அவள் நல் லாத்தான் பாடுறாள், அவள் மாதிரி நம்மாலயெல்லாம் அப்பிடிப் பாட ஏலாதுடி" இது பாதையில் போய்க் கொண்டிருந்த மற்ற மாணவிகளின் பேச்சு. இந்தப் பேச்சு வேலிக்குள் நின்ற சியானாவுடைய தாயின் காதில் விழுந்தது. "என்ன செய் றது. ஏழையென்டா எல்லோருக் கும் எளக்காரம்தான். இந்த சின் னப் பிள்ளைகள் கூட பேசுற கால மாப் போச்சி" என முணுமுணுத் துக்கொண்டாள் செய்னபு.

மறுநாள்-காலை வேளை பாட சாலை ஆரம்பிக்கும் நேரம். கிழிந்த பழைய சட்டையைத் தைத்துக் கொண்டு சியானா தன் தாய்க்கு முன் வந்து நின்று "நான் பள்ளிக் கூடத்துக்குப் போய்ட்டு வாற




னும்மா" என்று சொல்லிவிட்டுப் புறப் பட்டவள் முட்கம்பி வேலியைக் கடந்து போகப் புகுந்தாள்.

"நீராருங் கடலுடுத்த நில மடந்தை...க்...கெ!" சர்ர்ர்ர்க்...எனக் கிழிந்து முட்கம்பியில் கொழுவியது அவளது சட்டை. ஒரேயொரு சட் டையும் கிழிந்து போனதால் "ஊம்...ஊம்...ஊம்...ஊம்..." என்று கேவிக் கேவி அழத் தொடங்கி னாள். கிழிந்த சட்டையுடன் அவ ளால் எப்படி போக முடியும்? அவ ளுக்கு வேறெந்த மாற்றுச் சட் டையும் இல்லையே. பள்ளிக் குழந்தைகளெல்லாம் கேலி செய் வார்களே!பள்ளிக்கூடத்துக்குப் பக் கத்தில் எல்லா மாணவர்களும் கூடி சத்தமிட்டுக்கொண்டிருந்தார் கள்.

அவ்வேளை சியானாவின் தோழி பரினா ஓடி வந்தாள். "என் னடி? நீ அழுகுற... ஐயோ! உன்னு டைய சட்டை கிழிஞ்சு போச்சா? பாவம்!" என்று பரிதாபத்தோடு சொல்லிட்டு ஓடிவிட்டாள்.

அப்போது வீதியில் கார்கள் வரும் சத்தம் கேட்டது. ஏனைய சத்தங்கள் அடங்கிவிட்டன. பாட சாலை விளையாட்டு மைதானத் தில் மாணவர்கள் எல்லோரும் வரி சையாக அணிவகுத்து நின் றார்கள். அமைச்சர் தேசியக் கொடியை ஏற்றுகிறார். அதைத் தொடர்ந்து மாணவர்களின் கை தட்டல் சத்தமும், பின் தேசிய கீதமும் ஒலிக்கின்றது. காற்றிலோ தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கிறது.

"நீராருங் கடலுடுத்த நல மடந்தைக் கெழிலொழுகும்..." பாடலை இரண்டு மாணவிகள் பாடினர். பின் அமைச்சர் கூட்டத் தில் பேசினார்.. "கொடி என்பது துணி அல்ல, வெறும் நூல்களால் நெய்யப்பட்டதுமல்ல. அது நம் தேசத்தின் மானம் காக்கப் பாடு பட்ட தியாகிகளின் நரம்புகளால் பின்னப்பட்டது. கொடி என்பது மானம், கொடி என்பது வீரம், கொடி என்பது கொற்றம். அப்படிப்

**ரியாத்திலிருந்து இனியவன் இசார்தீன்**

பட்ட கொடியைத்தான் நாம் இன்று கொண்டாடுகிறோம்" என்று பேசு வது அவளது காதில் கேட்டுக் கொண்டிருந்தது.

ஆனாலும் வறுமைக் கோட்டிற் குக் கீழேயே வாழ்கிற வாழ்க் கையை உணர்ந்துகொள்ள முடி யாத அந்தச் சின்னஞ் சிறிசு தேசி யக் கொடியையும் தன் கிழிந்த சட்டையையும் மாறி மாறிப் பார்த் துக்கொண்டு அங்கே நிற்க முடி யாதவளாய் அழுத முகத்தோடு தன் வீட்டுக்கு நடந்தாள். ○

---

"எனக்கு இப்போ கல்யாணம் வேணாம்" என்று இவன் எத்தனை தடவைகள் சொன்னாலும் பெற்றோர் ஏற்பதா யில்லை. குடும்பத்தில் இவன் மட்டுந்தான் ஆண்பிள்ளை. இரண்டு ராத்தாமாருக்கும் திருமணம் முடிந்துவிட்டது. இரண்டு தங்கை கள் இன்னும் குமராக. இவனுக் கும் வயது முப்பதைத் தாண்டிக் கொண்டிருக்கிறது. வாப்பாவுக்கு கண்ணை மூடுவதற்குள் மகனின் திருமணத்தைப் பார்க்க வேண்டு மென்ற ஆசை. தாயும் அதனை ஆதரித்து தலையாட்டிக்கொண்டி ருந்தாள். தங்கைகள் நிலைதான் கவலைக்கிடமானது. தங்கள் உள் ளக் குமுறலைச் சொல்ல முடியாம லும், மெல்ல முடியாமலும் தவித் துக்கொண்டிருந்தார்கள். அவர் களுக்கும் நானவன் திருமணத் தைப் பார்ப்பதில் ஆசைதான். இருந்தாலும் தங்கள் வாழ்வை நினைக்க வயிறு பற்றியது.

இவனால் திருமணத்தை ஏற்க முடியவில்லை. இருபத்தியெட்டும், இருபத்தைந்துமாய் இரண்டு தங் கைகள் இருக்க, தான் எவ்வாறு திருமணத்தைப் பற்றி நினைக்க முடியும் என்ற ஏக்கம் இவனில் மிகைத்திருந்தது.

மீண்டும் அதே பேச்சு. உம்மா ஆரம்பித்தாள். "மகன்! நல்ல ஒரு இடத்திலிருந்து சம்மதம் வந்தி ருக்கு. உனக்கு வயசு கூடிக் கிட்டே போகுது. அவரு கண்ண மூடறதுக்குள்ளால உன்ர கல்யா ணத்த பார்க்கணுமெண்டு ஆசைப் படுறார். அதுக்குள்ள தங்கச்சிமாற்ற உண்மைக்கு தப்பில்லையே. இதையும் தட்டிக் கழிக்காம ஒத்துக்கப்பா."

இம்முறை இவனால் முடியா தென்று சொல்ல முடியவில்லை. எத்தனை தடவைகள்தான் தட்டிக் கழிப்பது. அரைகுறை சம்மதத் துடன் தலையசைக்கிறான். தாய்க்கு சந்தோச வெள்ளம் கரை புரண்டோடுகிறது.

இவனை தூக்கம் அரவ ணைக்க மறுக்கிறது. நாளை பெண் பார்க்கப் போகிறோம் என்ற பதற்றத்தினால் அல்ல. திருமண வயதைத் தாண்டிய இரு குமர்கள் இருக்க தான் திருமணத்திற்குச் சம்மதித்ததை நினைக்கவே உள் ளம் நெருப்பாய் எரிந்து கொண் டிருந்தது. இரவெல்லாம் விழித் திருந்ததில் காலை விடிந்தது கூடத் தெரியாமல் உறங்கிக்

# தியாகக் கயிறு



கொண்டிருக்கிறான். தாய்தான் தட்டியெழுப்புகிறாள். பெண் பார்க் கப் போக இவனுக்கு மனமில்லை. தாயின் வற்புறுத்தலினால் தாயுடன் பெண் வீட்டுக்குப் போகி றான்.

பெண்ணுடன் தான் தனியாகப் பேச வேண்டுமென்ற இவனது கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது.

கட்டிலில் பதுமையாய் அமர்ந் திருக்கின்றாள் நசீதா. இவனைக் கண்டவுடன் தலையைத் தொங்கப் போடுகிறாள். எதிரேயிருந்த கதி ரையில் இவன் அமர்ந்துகொள்கி றான். அமைதி குலைத்துப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று இவனுள் ஒரே பதற்றம், பரிதவிப்பு. தயக்கத்துடன் பேச்சை ஆரம்பிக் கிறான்.

"என் பேரு நிசார். ஆசிரியரா வேலை பார்க்கிறன். எனக்கு இந்த கல்யாணத்தில இஸ்டமில்ல ஆனால்".........அவள் அதிர்ச்சி கலந்த ஏக்கத்துடன் இவனை நோக்குகிறாள். அந்த "ஆனால்" என்ற வார்த்தை இவளில் பாலை வார்க்கிறது. "உம்மா, வாப்பாவின்ர வற்புறுத்தலுக்காகத்தான் நான் கல்யாணத்திற்கு சம்மதிச்சன். ஏன்னா எனக்கு திருமண வயதை யும் தாண்டிய ரெண்டு தங்கச்சி மாரு இருக்காங்க. அவங்களுக்கு எந்த வசதியுமில்லாம இருக்கை யில நான் எப்படி கல்யாணம் கட் டுறதெண்ட கவலைதான் எனக்கு" சொல்லிவிட்டு நசீதாவை ஏறிடுகி றான். இவள் ஏதோ சொல்ல வாயெடுப்பதும் பின்னர் விழுங்கி விடுவதுமாக அவதிப்பட்டுக்கொண் டிருக்கிறாள்.

"நீங்க ஏதோ சொல்ல வர்றீங்க, பயப்படாம சொல்லுங்க" இவன் ஊட்டிய தைரியத்தில் சொல்லு கிறாள். "நானும் கல்யாணம் கட்ற தில்ல எண்ட உறுதியில்தான் இருந்தன். ஆனா பெற்றோர்ர வற்புறுத்தலினால்தான் இந்த கல் யாணத்திற்கு சம்மதிச்சன்"

இவனும் அதிர்ச்சியுடன் "ஏன்" என்ற கேள்வியுடன் அவளை ஏறிடு கிறான். அவள் தன்னுள் புதைந்து கிடக்கும் உண்மையை இவனுக்கு வெளிப்படுத்துகிறாள்.

"அண்மையில் நடந்த விபத் தில என் கருப்பை பாதிக்கப் பட்டு அத முழுமையா எடுத்திட் டாங்க. என்னால ஒரு குழந் தைக்கு தாயாக முடியாது."

இவனுள் இடி முழங்கிற்று. மின்னல் வெடித்திற்று. அதிர்ச்சி யுடன் எழுந்து கொள்கிறான். என்றோ ஒரு நாள் தனக்குத் திரு மணம் நடந்து, அதன் மூலமாக இரண்டு மூன்று குழந்தைகள் பெற்று சந்தோசமாக வாழ வேண் டுமென்ற இவனது அடிமனத்து ஆசை மேல் நோக்கி வருகிறது. குழந்தையில்லாமல் எதற்கு இந் தத் திருமணம்? நினைக்கையில் நெஞ்சு உருகிற்று. சிவந்த கண் களுடன் அவளை ஏறிடுகிறான். அவள் அழுத கண்களுடன் அவனை நோக்குகிறாள்.

"இதற்காகத்தான் நான் திரு மணமே வேண்டாமென்று சொன் னன். எனக்கு இருக்கிற இந்த பெரிய குறையினால எவனுமே என்ன ஏத்துக்க மாட்டான். வாப் பாதான், உங்கட தங்கச்சிமாற்ற கல்யாணத்த தான் பொறுப்பேற்றா நீங்க இந்த கல்யாணத்திற்கு சம்மதிப்பீங்கன்னு சொல்லி என்ன சம்மதிக்க வெச்சாரு."

இப்போது ஏக்கத்தின் உச்சி யில் இருந்த இவனது மனம் குழப் பக் கடலில் மூழ்கிற்று. "இந்த குறையுள்ள குமரைத் திருமணம் செய்வதற்காக தான் சீதனம் வாங் குவதா? எத்தனை நண்பர்களை சீதனம் வாங்கியதற்காய் திட்டி யிருக்கிறேன், வெறுத்திருக்கிறேன். சீதனத்திற்கெதிராய் போர்க்கொடி தூக்கிய நானே சீதனம் வாங்கி னால்?" இவனால் மனதை அமை திப்படுத்த முடியவில்லை. தங்கை களின் வாழ்வுக்காக தான் குழந் தைப் பாக்கியம் இல்லாத இவளை மணமுடிப்பதா? இவளை மணப்பதற்காக தங்கைகளின் வாழ்க்கையை சீதனமாக பெறு வதா? இவனால் முடியவில்லை.

**காத்த நகர் முகைதீன் சாலி திருமலை**

உள்ளம் படபடக்கிறது. தன் வாழ்க்கை ஒருபுறம், தங்கைகள் வாழ்க்கை மறுபுறம். சீதனம் என்ற கொடுமை மறுபுறமாக இவனைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. ஆனால் ஏதோ ஒரு வகையில் மூன்று குமர்களும் வாழப் போகிறது என்ற உண்மை இவன் உள்ளத்தைக் குத்துகிறது.


இப்போது குழம்பிய இவன் மனக்குட்டை தெளியத் தொடங் கிற்று. இவனுக்கு மாற்று வழி தெரியவில்லை. தீர்க்கமான முடிவுடன் அவளை நோக்கு கிறான். "உங்கள கல்யாணம் பண் ணிக்க எனக்கு பூரண சம்மதம்" அவளின் உள்ளம் துள்ளிக் குதிக்கிறது.

இவனுள் விளையாடிக்கொண் டிருந்த ஆசைக் குழந்தைகள் தியாகக் கயிற்றுள் சிக்குண்டு இறந்து போயிற்று. ●

# சமாதானத்திற்காக நிதி உதவியா?

# நிதி உதவிக்காக சமாதானமா?

**இந்த இரண்டு பிரிவினரதும் சமாதானம் தொடர்பான பொருளாதார நோக்கத்தைச் சரியாகக் கணிப்பிட்டு வைத்திருக்கும் நோர்வேக்காரர்கள் கழுதைக்கு கரட் காட்டுவது போல நிதியுதவி மாநாடுகளைக் காட்டியே சமாதானத்தை இழுத்துச் செல்ல வேண்டியுள்ளது.**



சமாதானப் பேச்சுக்களில் இருந்து தற்காலிகமாக புலிகள் விலகுவதென அறிவித்ததும் நோர்வே கண்காணிப்பாளர்களுடன் முதலில் வன்னி சென்று புலிகளைச் சந்தித்தது சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள்தான்.

"சமாதானம்" இது முழுவதுமாக நிதியைச் சுற்றி மட்டுமே சுழலும் ஒரு விடயமாக மாறிப்போனது. சமாதானப் பேச்சு தடைப்பட்டது குறித்துக் கருத்து வெளியிடும் சகலரும் ஒரே குரலில் சொல்லுவது "ஐயோ....! நிதி உதவி கிடைக்காமல் போய்விடுமோ" என்பதுதான்.

புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகியதனால் ஏற்படும் கவலைக்குரிய உடனடி விளைவு என்ன என்று அரச தரப்பில் யாரைக் கேட்டாலும் ஒரே பதில் "நிதியுதவி குறையலாம்" என்பதுதான்.

புலிகளைச் சமாதானப்படுத்த அரசு சொல்லும் ஆசை வார்த்தைகள் எல்லாம் பெரும்பாலும் பணத்துடன் சம்பந்தப்பட்டதுதான். "ஜப்பான் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் விடுவதால் எத்தனை கோடி டொலர்களை இழக்கப் போகிறீர்கள்" என்று கணக்கு வழக்குகளுடன் போதிக்கப்படுகிறது.

பிரதமர் முதல், சாதாரண எம்.பி.வரை நிதியுதவி தடைப்பட்டு விடும் என்றுதான் கவலை கொண்டிருக்கிறார்கள். புலிகள் பேச்சுக்களில் இருந்து விலகுவதற்குச் சொன்ன பிரதான காரணமும் கூட நிதி உதவியோடு தொடர்புபட்டதுதான்.

இலங்கைக்குக் கிடைக்கும் நிதியுடன் தொடர்புடைய வாஷிங்டன் மாநாட்டுக்குத் தங்களை அழைக்கவில்லை என்பது புலிகள் கூறிய முதல் காரணம். உலக நாடுகளிடமிருந்து கிடைக்கும் பணத்தை அப்படியே தங்கள் கையில் தராமல் தென்னிலங்கையிலும் அதனைச் செலவிட அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது புலிகள் தரப்பின் மற்றொரு குற்றச்சாட்டு.

இந்த இரண்டு பிரிவினரதும் சமாதானம் தொடர்பான பொருளாதார நோக்கத்தைச் சரியாகக் கணிப்பிட்டு வைத்திருக்கும் நோர்வேக்காரர்கள் கழுதைக்கு கரட் காட்டுவது போல நிதியுதவி மாநாடுகளைக் காட்டியே சமாதானத்தை இழுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

சமாதான முயற்சிகளின் ஆரம்ப கட்டம் வெறுமனே உலக நாடுகளிடம் உதவி பெறுவதும் அதனைப் பகிர்ந்துகொள்வதும் என்ற குறுகிய வட்டம் ஒன்றுக்குள் அகப்பட்டு அதனால் எழுந்த பிரச்சினைகளாலேயே தடைப்பட்டுக் கிடப்பது மிகவும் கவலைக்குரியது.

பணத்தைக் காட்டிச் சமாதானத்துக்கு விலைபேசும் போக்கு இறுதியானதும் நம்பிக்கையுடன் கூடியதுமான ஒரு தீர்வினை எட்ட வழி வகுக்குமோ என்பது சந்தேகமே. இரண்டு தரப்பினரதும் நோக்கம் குறிப்பிட்ட ஒரு கால எல்லைக்குள் குறித்த தொகை நிதியைச் சேகரித்து விடுவதுதான் என்றிருக்கும் போது பிரச்சினையின் மூலவேர் ஆராயப்படாமலே போகும் வாய்ப்பிருக்கிறது.

போர் காரணமாக நாடு சின்னாபின்னப்பட்டுள்ளதைத் தென்னிலங்கை அரசியல் தலைமைகளும், போர் காரணமாகத் தமிழ் மக்கள் அநுபவித்துவிட்ட துன்பங்களை புலிகளும் உணர்ந்து இனிமேல், அமைதி வேண்டும் என்ற உணர்வுபூர்வமான நோக்குடன் சமாதான வழியில் குதிக்காமல், பணத்தையோ பயிற்சியையோ தயார்ப்படுத்தல்களையோ அல்லது சர்வதேச சமூகத்தை ஏமாற்றுவதையோ நோக்கமாகக் கொண்டு ஈடுபடும் எந்தவொரு சமாதான முயற்சியினாலும் மக்கள் எதிர்பார்க்கும் இறுதி வடிவத்தை அடைய முடியாது. சமாதானத்தை ஊக்குவித்து உலக நாடுகள் நிதி வழங்குவதை வரவேற்கலாம். இங்கே இது நேர் எதிராக நிற்கிறது. உலக நாடுகள் நிதி வழங்குவதை ஊக்குவிக்கும் முகமாக அரசும், புலிகளும் "சமாதானம்" பேசுகின்றன.

---

# "லண்டனில் இருந்து வந்த பணத்தை நான் மோசடி செய்யவில்லை" - விநாயகமூர்த்தி

உதயன். **SPECIAL REPORT**

## ஈழபதீஸ்வரர் ஆலயத்தில்

## £100,000க்கு கணக்கு வழக்கில்லை

## ஆலய நிவாகத்தினுள் மோதல்...

## கோவில் பணம் கொள்ளை?

மே மாதம் 10ம் திகதி ஈழபதீஸ்வரர் ஆலயத்தில் கூட்டப்பட்ட கூட்டம் ஆரம்பமாகிய சில நிமிடங்களிலேயே குழப்பத்துக்கு உள்ளாகி கலவரமானது. ஆலய நிர்வாகதவர்களுக்குள் நீண்டகாலமாக இருந்த பகமை மே மாதம் 10ம் திகதி இரவு 10 மணியளவில் வெடித்தது.

**இந் நிலையில் லண்டனில் இருந்து தினமுரசு அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட சிலர் சாந்தகுணவடிவேல் என்பவரும் அவரது உறவினர் ஒருவரும், லண்டன் ஈழ பதீஸ்வரர் ஆலயத்திலிருந்து பெருந் தொகைப் பணத்தை மோசடி செய்து விட்டதாகவும், இப்போது அந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்கப்படும் போது கைதிகளுக்கு அனுப்பியதாகக் கூறி வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.**

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளுக்கு வழங்கும்படி லண்டனிலிருந்து அனுப்பப்பட்ட பணம் உள்ளூர் அரசியல்வாதிகளாலும் சட்டத்தரணிகளாலும் மோசடி செய்யப்பட்ட தகவல் வெளியானதோடு, இந்தப் பண மோசடியுடன் தொடர்புபட்ட மேலும் பல விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன.

சாந்தகுணவடிவேல் என்பவர் லண்டன் கோயில் ஒன்றில் சேகரித்த பணத்தையே களுத்துறைக் கைதிகளுக்காக அனுப்பினார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் லண்டனில் இருந்து தினமுரசு அலுவலகத்துடன் தொடர்பு கொண்ட சிலர் சாந்தகுணவடிவேல் என்பவரும் அவரது உறவினர் ஒருவரும் லண்டன் ஈழபதீஸ்வரர் ஆலயத்திலிருந்து பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்துவிட்டதாகவும், இப்போது அந்தப் பணத்திற்குக் கணக்குக் கேட்கப்படும் போது கைதிகளுக்கு அனுப்பியதாகக் கூறி வருகின்றனர் என்றும் தெரிவித்தனர்.

கோயில் நிர்வாகத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் இப்போது இரண்டு பிரிவாகப் பிரிந்து நின்று லண்டனில் மோதி வருகின்றனர். இந்த மோதல் கடந்த ஒரு வருட காலமாக நடக்கிறது. "உதயன்", "விடுதலை" என்ற பெயர்களில் தத்தம் பத்திரிகைகள் மூலமாக இந்த ஈழத்துக் கனவான்கள் பரஸ்பரம் சேற்றை வாரி இறைத்து வருகின்றனர்.

லண்டனில் கோயில் நடத்திப் பெருந்தொகைப் பணத்தை விழுங்கிய கொடையாளிகள் சிறு தொகையை இங்கே அனுப்பியிருக்கிறார்கள். நமது நாட்டில் உள்ள புண்ணியவான்கள் சிலர் அந்தச் சிறு தொகையிலும் கைவைத்துள்ளதாகத் தெரிகிறது.

எவ்வாறெனினும் தங்களுக்கு வந்த பணத்தைக் கையாடியதாக விநாயகமூர்த்தி மீது களுத்துறைக் கைதிகள் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களை அவர் மறுத்திருக்கிறார்.


இது தொடர்பாக அப்பாத்துரை விநாயகமூர்த்தி எம்.பி.முரசுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் தனக்கு லண்டனில் இருந்து கிடைத்த பணத்தைத் தான் ஒரு போதும் மோசடி செய்ததில்லை எனக் கூறியுள்ளார்.

விநாயகமூர்த்தி தனது கடிதத்தில், 2000ம் ஆண்டு 1ம் மாத காலப் பகுதியில் லண்டனில் வசிக்கும் சிவராசா என்பவர், சிறைக் கைதிகள் தொடர்பான லண்டனில் உள்ள, ஆர்வலர்கள் சார்பில் 450 பவுண்ஸ் பெறுமதியான பணத் தொகையை எனக்கு அனுப்பியிருந்தார். அதை அப்போது முக்கியமாக நடைபெற்ற நாகமணி தெய்வேந்திரம் என்பவரது மேன்முறையீட்டு வழக்கில் என்னுடன் ஆஜராகிய சட்டத்தரணி கலாநிதி ரஞ்சித் பெர்ணான்டோ அவர்களிற்கு முழுவதையும் கொடுத்திருந்தேன்.

இதற்கு முன் 1999ம் ஆண்டில் லண்டனில் இருந்து டாக்டர் சோமசுந்தரராஜா என்பவர் ரூபா 80,000 பணம் அனுப்பி, அப்போது சிறையில் இருந்த 14 கைதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்களின் வழக்கிற்காக அப் பணத்தைப் பயன்படுத்தி அவர்களை விடுதலை பெறச் செய்ய உதவுமாறு கோரியிருந்தார். அந்த வழக்குகளில் 3 பேர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் அவர்களிற்கு ரூபா 20,000 கொடுத்ததோடு மீதியை 11 பேரின் வழக்குச் செலவிற்காக உபயோகித்திருக்கின்றேன். அந்தப் பணம் குறிப்பிட்ட 14 பேரின் வழக்குச் செலவுகளிற்காக அனுப்பப்பட்டதே தவிர கைதிகளிடம் கொடுக்குமாறு அவர்களிற்கென அனுப்பப்படவில்லை. அவர்கள் 14 பேரும் அதன் பின் விடுதலை செய்யப்பட்டும் விட்டனர். வழக்குகள் முடிக்கப்பட்டன. ஆக இதுதான் நடந்ததே தவிர என் வாழ்நாளில் இன்னொருவரின் பணத்தை நான் எடுத்ததுமில்லை எடுக்க நினைத்ததுமில்லை, எனத் தெரிவித்துள்ளார். ●

இரகசியம் காத்தல் அவசியம் என்பதால் பெயர்கள், இடங்கள் யாவும் கற்பனையில்...

# நெஞ்சினில் என்ன காயமோ...?



## உள மருத்துவம்

**உடல் நோய்களால் பாதிக்கப்பட்டவர்களை விட உள நோயினால் பாதிக்கப்பட்டவர்களே அதிகமாகக் காணப்படும் இன்றைய கால கட்டத்தில், உள நலம், உளப் பாதிப்புகள், உள நோய்கள் பற்றி அறிந்துகொள்வதும் இவற்றிற்கான வைத்திய முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகிறது. எனவே மேற்படி உள மருத்துவத் துறையில் அநுபவம் பெற்றவர்களும், நிபுணர்களுமான வைத்திய கலாநிதி திரு. த.கடம்பநாதன் (எம்.பி.பி.எஸ். எம்.டி. உள மருத்துவம்) அவர்களும் உளவியலாளர் திரு.தி.சுவீந்திரன் (எம்.ஏ.எம்,ஏ., எம்.பில்., உள மருத்துவம்) அவர்களும் இணைந்து தமது அநுபவங்களைப் பகிர்வதுடன் உளவியல் சம்பந்தமான வாசகர்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்க முன் வந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.**

### நாளாந்தப் பாதிப்புகட்கு முகங்கொடுப்பது எப்படி?

ஒவ்வொரு நாளும் மகழ்ச்சியுடன் வாழ்வதென்பது இன்பகரமானது எனினும் உண்மை வாழ்க்கையில் எங்களை இடற வைக்கக் கூடிய பிரச்சினைகளும் சம்பவங்களும் ஒன்றன் பின் ஒன்றாகத் தொடருகின்றன. ஏதிர்பார்க்கப்படாத இந்த மாற்றங்களைச் சகித்துக்கொண்டு வாழ்வதென்பது மன உளைச்சலைத் தரக் கூடியது.

உங்களின் பிள்ளைகள் நோய்வாய்ப்படலாம். உங்களின் வேலையில் பிரச்சினைகள் எழலாம். உங்கள் பெற்றோர் சடுதியான சுகவீனத்துக்கு உள்ளாகலாம். இந்தப் பட்டியலை இப்படியாக நீட்டிக் கொண்டே போகலாம். இவற்றுக்கு ஈடுகொடுக்க வாழ்வில் ஒருவர் கற்றுக்கொண்டால் அவர் வாழ்வில் முன்னேறுகின்றார்.

உங்களுக்கு இந்தப் பிரச்சினை இருக்கின்றது என நீங்கள் கருதினால் பின்வரும் வழிமுறைக்ள் உங்களுக்குப் பயனளிக்கக் கூடியன.

1) உங்கள் பாதிப்புகள் தொடர்பாக உங்களுக்கு உதவக்கூடியவர்களை அடையாளம் காணுங்கள்.

2) அவர்களில் உங்களுக்கு மிகவும் நம்பிக்கையான ஒருவருடன் உங்கள் பிரச்சினை குறித்துக் கதையுங்கள். உங்களுக்குள்ளேயே நெருக்கீடுகள் குறித்துக் கவலைப்படுவதை விடுத்து இவற்றைப் பகிர்கின்றபோது உங்களாலேயே இந்தப் பாதிப்புகளுக்குத் தீர்வைக் காண்பதென்பது இலகுவாகும்.

### தேவைகளை முதன்மைப்படுத்துவது எப்படி?

ஒவ்வொரு மனிதனும் தனது நாளாந்த தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் மனநிறைவையும் வாழ்வில் முன்னேற்றத்தையும் அடைகின்றான். எல்லா மனிதருக்கும் அடிப்படைத் தேவைகள் இருக்கின்ற போதும், மற்றைய தேவைகள் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தனித்துவமான தேவைகளாகவும் அமையலாம். ஒவ்வொரு மனிதனதும் செயற்திறமையைப் பொறுத்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் தன்மை வேறுபடுகின்றது. எல்லாத் தேவைகளையும் ஒரே தடவையில் பூர்த்தி செய்ய ஒருவர் நினைக்கும்போது அவரால் ஒரு தேவையைத்தானும் சரிவரப் பூர்த்தி செய்ய முடியாது போகின்றது. இதனால் அவரது தன்னம்பிக்கை நலிவடைகின்றது. எனவே தெவைகளை முதன்மைப்படுத்துவது மனித வாழ்க்கைக்கு அத்தியாவசியமாவதுடன் மன மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

நீங்கள் எந்தளவு தூரம் தேவைகளை அடையாளம் காண்பதிலும் முதன்மைப்படுத்துவதிலும் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றீர்கள்? பின்வரும் வழிமுறைகள் உங்களுக்கு உதவ வல்லன.

1) உங்கள் தேவைகளையும் விருப்பங்களையும் பிறிதாக நிரைப்படுத்துங்கள்

2) ஒவ்வொரு தேவைகளையும் நிறைவேற்றும்போது உங்களுக்கு ஏற்படக்கூடிய நன்மை, தீமைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்.

3) இவற்றின் அடிப்படையிலும் அந்தத் தேவைகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலும் தேவைகளை முதன்மைப்படுத்துங்கள்.

இன்றைய உலகத்தில் எங்கும் விளம்பரம் எதிலும் விளம்பரங்கள். உண்மைத் தேவைகளையும் விருப்பங்களையும் பகுத்தறிவதென்பது பாரிய சவாலாக உள்ளது. இதனைச் சரியாக அணுகாதபோது செலவுகள் அதிகமாகி நிதிப் பிரச்சினையும் மன உளைச்சலும் ஏற்படுகின்றது.

### பயனுள்ள நட்பை விருத்தி செய்வது எவ்வாறு?

நல்ல நண்பர்கள், ஒருவரது மகிழ்ச்சியில் மட்டுமல்ல துன்பத்திலும் பங்குபற்றி அவரின் உணர்வுகட்கு மதிப்பளித்து அவர்கள் முன்னேற உதவுவார்கள். இப்படியான நண்பர்கள் இருக்கும்போது தனிமை என்ற உணர்வே ஏற்படாது. பலருக்கு நட்பை உருவாக்குவதென்பதும் அது பயனுள்ளதா என அடையாளங் காண்பதும் பிரச்சினையாக அமைகின்றது. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க முயலுக.

1) உங்கள் நண்பர்கள் மேல் உங்களுக்கு நம்பிக்கையுள்ளதா?

2) நீங்கள் மற்றவர்களின் நம்பிக்கைக்குரிய நண்பர்களாக இருக்கின்றீர்களா?

3) நீங்கள் உங்களது குறைபாடுகளை, பிரச்சினைகளை நண்பர்களுடன் பகிர்ந்துகொள்வதுண்டா?

4) உங்களது நண்பர்கள் தங்கள் பிரச்சினைகள் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொண்டது உண்டா?

5) உங்களது நண்பர்களின் விமர்சனத்தை ஏற்றுக்கொள்ள முடியுமா?

இவற்றுக்கு ஆம் என விடையளிக்க முடியாது போயின் பின்வரும் வழிமுறைகள் உங்களுக்கு உதவும்.

1) நண்பர்களுடன் நெருங்கிய உறவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்த முனையுங்கள்.

2) நண்பர்களுடனான தொடர்பைத் தொடர்ந்து பேணுங்கள் .

3) நண்பர்களை வீட்டுக்கு உணவருந்த அழையுங்கள்.

### நெருக்கீடுகளைத் திறமையாகச் சமாளிப்பது எப்படி?

நாளாந்த வாழ்க்கையில் நெருக்கீடு ஒரு பிரிக்க முடியாத அம்சமாகும். இதனை எவ்வாறு அணுகுவது என்பது உங்களது மனோபலத்திலேயே தங்கியுள்ளது. மற்றவர்கள் இலகுவாகச் சமாளிக்கும் விடயங்கள் உங்களுக்குப் பெரியதாகத் தெரியலாம். உங்கள் வாழ்க்கையில் உங்கள் குடும்பப் பொறுப்பு, அலுவலகப் பொறுப்பு தொடர்பான சமநிலையைப் பேணுவது சில வேளைகளில் பிரச்சினையாகலாம். இரு முக்கிய அம்சங்களை நீங்கள் கருத்தில் கொள்ளும்போது வாழ்க்கை இலகுவாகின்றது.

1) உங்கள் நேரத்தைத் திறமையாகப் பயன்படுத்தல்.

2) நாளாந்தம் குறைந்தது 5 நிமிடங்களையாவது உங்கள் மன அமைதிக்காக ஒதுக்குதல்.

### விமர்சனங்களை அல்லது வாழ்த்துக்களை ஏற்றுக் கொள்வது எப்படி? கொடுப்பது எப்படி?

எங்களில் பலருக்கு மற்றவர்கள் எங்களைப் பாராட்டும் சந்தர்ப்பத்தில் அதனை ஏற்றுக்கொள்வது பிரச்சினையாகின்றது. எங்களின் சமூக, சமய அமைப்புகளும், சித்தாந்தங்களும் இதற்கு ஒரு காரணமாக அமையலாம். உதாரணமாக பரீட்சையில் ஒரு மாணவன் சிறந்த பெறுபேற்றைப் பெறுகின்றான் எனவும் அவரை இன்னொருவா பாராட்டுகின்றார் எனவும் வைத்துக்கொள்வோம். அந்த உரையாடல் பின்வருமாறு அமைந்து விடுகின்றது.

பெரியவர் : தம்பி! நல்ல ரிசல்ட் எடுத்திருக்கிறீங்கள். கேட்டிக்காரன்தான்.

மாணவன் : பெரிசா ஒண்ணுமில்லை. இந்த முறை சோதனை சுகம் ஐயா.

பரீட்சை இலகுவானதாக இருந்திருக்கலாம். ஆனால் சிறந்த பெறுபேற்றுக்கு மாணவனின் கல்வித் தகைமையே காரணம்.

நீங்கள் எப்பொழுதாவது உங்களை மற்றவர்கள் பாராட்டிய சந்தர்ப்பத்தில் அதனை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்டியதுண்டா? அப்படி எனில் பின்வரும் வழிமுறைகள் உங்களுக்கு உதவும்.

1) உங்களை ஒருவர் பாராட்டும்பொழுது "நன்றி, நீங்கள் அப்படிக் கூறியதால் மகிழ்ச்சி அடைந்தேன்" என்று கூற முயலவும்.

2) முன்னர் உங்களுக்குக் கிடைக்கப் பெற்ற பாராட்டுக்களை நினைவு கூர்ந்து அவை உங்களை எவ்வளவு தூரம் மகிழ்வுற வைத்தன எனவும் நினைவு கூருங்கள்.

(தொடர்ந்து வரும்)

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்கு கொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 18க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

எம். ஹேமப்பிரியா, 86, விக்ரமசிங்கபுர, மாவத்தகம.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. க.கீர்த்திகா, வங்களாவடி வீதி, வேலணை வடக்கு, வேலணை.
2. திருமதி ஜே.எஸ். லெட்சுமி, பிபிலை எஸ்டேட், பிபிலை.
3. அன்ரன் மேசி, கர்த்தர் கோயிலடி, கீரி, மன்னார்.
4. எம்.ஐ.எம். பாரூக், நுரைச்சோலை, புத்தளம்.
5. செல்வி த. சங்கீதா, மத்திய வீதி, திருகோணமலை.
6. திருமதி யோ. யோகேந்திரன், யோகவாசா, திருக்கோவில்.
7. ஆர். வசந்தி, முஸ்லிம் வித்தியாலயம், பசறை.
8. திருமதி ஞா சுகிலா, மன்/முள்ளிக்குளம், பாலம்பிட்டி.
9. வி. செல்வநாயகம், சிவன்கோவில் வீதி, புத்தூர்.
10. சீ. தங்கவடிவேல், அரசினர் வைத்தியசாலை, மட்டக்களப்பு.

## குறுக்கெழத்துப் போட்டி 18

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | ■ | 7 | 8 | 9 |
| 10 | ■ | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | ■ | ■ |
| 17 | ■ | ■ | 18 | 19 |
| 20 | ■ | 21 | 22 | 23 |

### இடமிருந்து வலம்

(1). பழைமையானது.
(7). தண்ணீர் எடுக்கப் பயன்படுவது. (குழம்பியுள்ளது)
(11). மேடை என்று பொருள்படும். (குழம்பியுள்ளது)
(14). அச்சம். (குழம்பி
(18). அம்பு. உள்ளது)
(21). புலம் பெயர்ந்த இலங்கைத் தமிழருக்குக் கிடைந்த அந்தஸ்து. (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

(1). சத்தியசாயிபாபாவின் ஆச்சிரமம் உள்ள இடம்.
(3). களவு போய் திருப்பி கிடைப்பது. (குழம்பியுள்ளது)
(4). செல்வம். (குழம்பியுள்ளது)
(5). தடாகம். (குழம்பியுள்ளது)
(18). விதி.
(19). கரை (தலைகீழாக உள்ளது)

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 21.05.2003க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி;

**குறுக்கெழுத்துப் போட்டி இல-18**
**தினமுரசு வாரமலர், த.பெ. இல. - 1772, கொழும்பு.**

உங்கள் சரியான முகவரியையும், காசுக்கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250/= ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் தினமுரசில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப் போட்டி 16 விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| மே 1 | தா 2 | ட் 3 | டி 4 | ■ |
| தா 5 | ர 6 | ம் 7 | ■ | க 8 |
| ர் 9 | ணி 10 | ப 11 | அ 12 | ப் 13 |
| ■ | ■ | ட 14 | ■ | ப 15 |
| ணி 16 | ப 17 | ■ | இ 18 | ம் 19 |
| ■ | சு 20 | ட 21 | லை 22 | ■ |

# பறக்கும் விமானத்தின் கதவு திறந்தது

## ஆசனங்களுடன் ஆகாயத்தில் மிதந்த பயணிகள்

# கொங்கோ நாட்டில் கொடுமை!

"டை எனத டே" என்ற ஒரு ஜேம்ஸ் பொண்ட் படம் இப்பொழுது திரையரங்குகளில் காண்பிக்கப்படுகிறது.

இந்தப் படத்தின் இறுதிக் கட்ட காட்சியில் விமானத்தின் ஜன்னல் திறந்துகொண்டதால் வில்லன் அதிவேக காற்றின் விசையில் வெளியில் தூக்கி எறியப்பட்டுச் சிதைந்து போகும் ஒரு காட்சி இடம் பெற்றிருக்கிறது. இது கற்பனை ஜேம்ஸ் பொண்ட் சாகசம். ஆனால் இதே மாதிரி ஒரு பரிதாபம் உண்மையில் நிகழ்ந்திருக்கிறது. ஓரிருவர் அல்ல 180 பேர் ஆசனங்களுடன் தூக்கி வீசப்பட்டு ஒவ்வொருவரும் பல மைல் தூரத்துக்கு வீசி எறியப்பட்டு மாண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடுமை மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோவில் நடந்துள்ளது.

200 பயணிகளுடன் பறந்து கொண்டிருந்தது இலூசின் 7 ரக சரக்கு விமானம். திடீரென விமானத்தின் பின் கதவு திறந்துகொண்டதில் பயணிகள் ஆசனங்களுடன் வான் வெளியில் தூக்கி எறியப்பட்டனர்.

பழைய சோவியத் தயாரிப்பான இந்த விமானத்தின் பின் கதவு திறந்துகொண்டதும் பேரோசையுடன் காற்று உள்ளே புகுந்து விமானத்தைத் தள்ளாட வைத்தது. 20 பேருக்கு உயிர் தப்பும் அதிர்ஷ்டமும் இருந்துள்ளது.

விமான விபத்துக்களில் இது புதுவகையான விபத்து.

இந்த விமானத்தை மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் தரையிறக்கியிருக்கிறார்கள். இப்போது இறந்தவர்களைத் தேடும் பணி நடைபெற்று வருகிறது. கின்ஸாஸ் நகரில் இருந்து லுபும்பரி என்ற நகருக்கு இந்த விமானம் பறந்தது.

பின்புறக் கதவு திறந்ததால் சுவீடன் நாட்டுப் பயணிகள் கப்பல் ஒன்று கடலில் மூழ்கியதால் 800 பேர்வரை இறந்த சம்பவம் சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்றது. இப்போது அதே தவறு வான்வெளியில் நடைபெற்றுள்ளது. மேற்படி விமானம் 1971ம் ஆண்டு முதலில் பறக்கவிடப் பட்டது. 40,000 கிலோ எடை கொண்ட விமானம் 46 மீட்டர் நீளமும் 50 மீட்டர் அகலமும் கொண்ட சரக்கு விமானமாகும். ஆபிரிக்க வட்டகையில் விமானப் பிரயாணம் தொடர்ந்து பாதுகாப்பின்றி இருந்துவருவது குறிப்பிடத் தக்கது. மேற்படி சம்பவம் வியாழன் நடைபெற்றது.

பயணித்தோர் விபரம், மரணித்தோர் பட்டியல் போன்றவை இது வரை தெளிவாக வெளிவரவில்லை.




# ஒற்றுமை



"த மேட்ரிக் ரீலோடட்" என்றொரு திரைப்படம் ஹொலிவூட்டில் இந்த வாரம் பரபரப்பாகத் திரைக்கு வருகிறது. பல முன்னணி நட்சத்திரங்களின் பங்களிப்புடன் வான பிரதர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ள இத் திரைப்படத்தின் துவக்க விழாவின்போது லொஸ் ஏன்ஜல்ஸில் அன்பாகத் தழுவிக்கொள்பவர்கள் இத்தாலிய நடிகை மோனிகா பெலோஸி மற்றும் சக நடிகை கேரி அன்னிமாஸ். இவர்கள் இருவருக்குமுள்ள ஒற்றுமை தாங்கள் லெஸ்பியன்கள் என்று பகிரங்கமாக ஏற்றுக்கொள்வதுதான்.

# காதலிக்குத் துரோகம்




எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பது என்று கேட்கிறார்கள் வியட்நாம் பெண்ணுரிமை அமைப்புகளைச் சேர்ந்தவர்கள்.

இருந்தாலும் இது "ரூ மச்" என்று கோபம் கொப்பளிக்கக் கூறுகிறார்கள் ஆண்கள். வியட்நாம் நாட்டில் தனக்குத் துரோகம் செய்த காதலனின் ஆணுறுப்பை வெட்டி வீசி விட்டுத் தப்பியோடி இருக்கிறார் ஒரு காதலி. வேறு நாடுகளில் இப்படியான சம்பவங்கள் முன்னரும் நடைபெற்றிருந்தாலும் வியட்நாம் காதலர்களுக்கு இது புதிய அநுபவம்! இழக்கக் கூடாததை இழந்து தவிக்கும் அந்தக் காதலன் ஒரு டாக்டர்!

வியட்நாம் நாட்டில் உள்ள தலாத் நகரில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தலாத் நகரில் லாம் தாங் மருத்துவமனையில் பணிபுரிபவர் டாக்டர் லுவோங் குவாங்க்.

திருமணமான அவர் தனது மனைவியை விட்டுப் பிரிந்து தனியாக வாழ்ந்து வருகிறார். இருவரும் கடந்த ஒரு ஆண்டு காலமாகப் பழகி வருகின்றனர். இந் நிலையில் டாக்டருக்கு மற்றொரு பெண்ணுடன் தகாத உறவு இருப்பது காதலிக்குத் தெரிய வந்தது.

இதையடுத்து, ஆத்திரம் அடைந்த அப் பெண், கடந்த வியாழக்கிழமை உணவு சமைத்து டாக்டருக்குப் பரிமாறிவிட்டு நிறைய மதுவகைகளையும் கொடுத்து மயக்க முறச் செய்தார். பின்னர், அவரது ஆண்குறியைத் துண்டித்துவிட்டுத் தப்பிவிட்டார்.

லாம் தாங் மருத்துவமனையில் சிகிச்சைக்காக டாக்டர் சேர்க்கப்பட்டுள்ளார்.




# ஆறுமனமே ஆறு!

## அகதிகள் முகாம்களில் மணப்பெண் தேடும் வெளிநாட்டு மாப்பிள்ளைகள்

வேரோடு பிடுங்கி எறியப்பட்ட எமது தமிழ் சமூகம் புலம் பெயர்ந்து உள்நாட்டிலும், இந்தியாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் அகதிகளாக நீண்ட காலம் வாழ்ந்து வருவதில் பலதரப்பட்ட சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவது அறிந்ததே. இருப்பினும் உள்ளூரில் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்பவர்களும், அண்டை நாடான இந்தியாவில் அகதிகளாக வாழ்பவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விட வித்தியாசமான பிரச்சினைகளை ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் எதிர்நோக்குகிறார்கள் என்று கருதப்படுகிறது.

உள்ளூரில் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்பவர்கள் தம் சொந்த நாட்டிலேயே வாழ்வதால் ஓரளவு சமூக விழுமியங்கள் பாதுகாக்கப்படுகின்றன. இதே போல தென்னிந்தியாவிற்குச் சென்று தமிழ்நாட்டிலுள்ள அகதி முகாம்களில் வாழ்பவர்கள் மத்தியிலும் சமூக விழுமியங்கள் ஓரளவு பாதுகாக்கப்படுகிறது.

ஆனால் ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்தவர்கள் முற்றிலும் மாறுபட்ட இன, மொழி, கலாசாரம், பண்பாடு, சடங்கு, சம்பிரதாயங்கள் மட்டுமல்ல காலநிலை மாற்றத்திற்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர்.

தமிழ்நாட்டிலும், உள்ளூரிலும் இடம் பெயர்ந்த எமது மக்கள் பண்பாட்டையும், சடங்கு சம்பிரதாயங்களையும் பேணுவதுடன் கல்வியில் எவ்வித பாதிப்புகளுமின்றி முன்னேற்றம் கண்டுள்ளனர். உதாரணமாக தமிழ்நாட்டில் மட்டும் 500க்கு மேற்பட்ட அகதி மாணவர்கள் பல தரப்பட்ட துறைகளில் பட்டதாரிகளாக உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் ஐரோப்பிய நாடுகளில் சுத்தமாக கல்வியில் உயர்ச்சி காண முடியவில்லை.

அடுத்து நீண்ட காலமாக ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்துவிட்ட எமது ஆண்கள் மணப் பெண் தேடுவதற்காக இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழர் அகதிகள் முகாம்களுக்கு படையெடுப்பதையும், இத் தேடல்களின் போது தரகர்களின் விளையாட்டுக்களையும் வயதோ, சாதியோ, சமயமோ, அறிமுகமோ, பேச்சு வார்த்தையோ, காதலோ இல்லாத அவசர திருமணங்களையும், இவற்றால் பல தரப்பட்டவர்களுக்கும் ஏற்படும் உளரீதியான பாதிப்புக்களையும் பிரச்சினைகளையும் இத் தொடர் வெளிக் கொண்டு வருகிறது.

<u>அகதிகள் முகாம்களில் மணப்பெண் தேடும் வெளிநாட்டு மாப்பிள்ளைகள்</u>

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி அகதிகள் முகாமிலிருந்து கெனடி என்பவரும் அவர் மனைவி நல்லமாவும் வந்திருந்தனர். இருவரையும் வரவேற்று ஆற்றுப்படுத்தல் மையத்திற்குள் அமரும்படி கேட்டுக்கொண்டேன்.

கெனடியை நான் முன்பு எங்கேயோ பார்த்த ஞாபகம் இருந்ததால் என் சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ள கெனடியுடன் அளவளாவினேன். இவர் மன்னார் மாவட்டத்தில் பொன்தீவு கண்டல் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். ஒரு நாள் எனது நண்பர் ஒருவருடன் இவர் வீட்டிற்குப் பக்கத்து வீட்டிற்கு வீருந்து ஒன்றுக்குச் சென்றிருந்தேன். பக்கத்துவீட்டு கெனடி தன் வீட்டில் பொரித்த பனையேறி மீனை ஒரு கோப்பையில் வைத்து எமக்குத் தந்தார் என்பது ஞாபகம் வந்தது. கெனடியும் அடையாளம் கண்டு கொண்டார்.

கெனடியிடமும் மனைவி நல்லம்மாவிடமும் அவர்களின் பிரச்சினையை அறிய முற்பட்டேன்.

"சொல்லுங்கள் கெனடி! நானும் உங்கள் பக்கத்து ஊர்தானே. என்ன விடயமாக என்னிடம் வந்தீர்கள்."

**எஸ்.பி.லெம்பட்**
**வங்காலை**

கெனடி ஏதோ சொல்ல எத்தனிக்கும் போதே நல்லம்மா "ஓ"வென அழுதாள்.

"அடி சும்மா இரு" என்று கெனடி நல்லம்மாவை அதட்டினான்.

"உம்மாலேதானே எல்லாம் வந்தது" என்று சொல்லி நல்லம்மா தொடர்ந்து அழ கெனடி கோபமடைந்தார். நான் கெனடியையும் நல்லம்மாவையும் அமைதிப்படுத்த மிகச் சிரமப் பட்டேன். (தொடரும்)

# காதிலை பூ கந்தசாமி

## நோட்டீஸ் பலகை



நான் சொல்வ தெல்லாம் பொய்.
பொய்யைத் தவிர
வேறொன்றுமில்லை
*-காதில பூ கந்தசாமி-*

திருகோணமலைப் பக்கம் போயிருந்தேனுங்கோ போன வாரம். காதில கேட்ட பாட்டு, தன்னால என்னை இழுத்துக் கொண்டுபோய் ஒரு கூட்டத்துக்கு முன்னால நிப்பாட்டிப் போட்டுது. அண்ணாந்து பாத்தால் அது யாற்றையோ, நினைவு தினக் கூட்டமாம். ஆற்றயடாப்பாவெண்டு ஆவலாக் கேட்டால், அண்ணை சிறீசபாரத்தினத்தின்ர நினைவு தினமாம். கீழ ஒருக்கா காலால உதைஞ்சு பாத்தன். நிச்சயமா அது நிலந்தான்! அதுவும் திருகோணமலைச் சுடு மண். என்னடாயிது, அதிசயத்தை வெண்ட அதிசயம்! இத்தனை வருஷத்துக்குப் பிறகு சிறீயண்ணைக்கு இப்பிடியொரு நினைவு தினைத்த நம்ம பூமியில நம்மாக்களே கொண்டாடுறாங்கள். யாற்ரா அந்த வீரவான்களெண்டு உள்ளுக்கு எட்டிப் பாத்தன். சாட்சாத் ரெலோயிஸ்டுகளேதான் கொண்டாடிக்கொண்டிருந்தாங்கள்.

என்னால, கண்ணையும் நம்பேலல்ல, என்னையும் நம்பேலல்லை. இதில நிண்டு மினக்கெட்டு, ஏதேனும் ஏடாகூடமாப் போய் யாரேனும் மாடா கூடமா அதிரடியில குதிச்சிட்டால்.., ஏனப்பா எனக்கு வம்பு எண்டிட்டு நைசா மாற வெளிக்கிட்டன். அப்பதான் கணீரெண்டு ஒரு குரல் மைக்கக் கிழிச்சுக் கொண்டு கேட்டுது. யாற்ராப்பா உச்சஸ்தானியில உரு வந்தது போலக் கத்திறதெண்டு உருவத்தைப் பாத்தால் அது எங்கட சீறிற காந்தர். ஆளின்ர குரலைக் கேட்டவுடன அச்சம் கிச்சமெல்லாம் காத்தோட பறக்க, நிண்டொருக்கா என்ன பேசிறாரெண்டு கேட்டன். கேக்கக் கேக்க, என்ர கடவுளே, என்ன பேச்சப்பா! நீங்கள் கேட்டிருக்க மாட்டியள். நான் கேட்டதச் சொல்லுறன், கேளுங்கோ.

"எனதன்புத் தம்பி சிறீ, இன்று எம் மத்தியில் இல்லை. அவர் மட்டும் உயிரோடிருந்திருந்தால், அண்ணே! காந்தண்ணே! நீங்கள்தான் எனக்கு அட்வைஸ் பண்ண வேணுமெண்டு அடிக்கொருதரம் கேட்டுக் கேட்டு எனக்கு போனெடுத்தே கிறங்கடிச்சிருப்பார். நானும் தம்பி சிறீயும் எத்தனை மணத்தியாலங்கள் அரசியலைப் பற்றிக் கதைச்சிருப்பம் தெரியுமா?

சென்னை மெரினா பீச்சில சுண்டல் கொறிச்சுக் கொண்டிருந்த என்ர கையத் திடீரெண்டு பற்றிப் பிடிச்சுக் கொண்டு என்னப் பாத்து சொன்னார், "அண்ணை நீங்கள் கைவிடமாட்டீங்கள் தானே!" யெண்டு. நானும், "இல்லையில்லை, கைவிட்டால் சுண்டல் மணலுக்குள்ளதான் கொட்டும், திண்டு தீர்க்கும் வரை விடமாட்டன்" எண்டன். அவரோ, "நான் அதைச் சொல்லேல்லை. நான் ஒருவேளை இந்தப் போராட்டத்தில வீர மரணமடைய நேர்ந்தால் நீங்கள்தான் இயக்கத்தைக் காப்பாற்ற வேணும்" எண்டு கண்ணீர் மல்கச் சொன்னார். அதாலதான் நான் இன்னும் இங்கயிருந்து கொண்டிருக்கிறேன் என்பதை எனது உடன் பிறப்புகளுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறேன்.

அதோட ஒரு நாள் மழைநேரம். நானும் சிறீயும் கலைஞர் கருணாநிதி வீட்டிலயிருந்து திரும்பும்போது, என்ர செருப்புக் காணாமல் போயிட்டுதெண்டு தம்பி சிறீ தன்ர செருப்பில ஒண்டத் தந்து, தான் ஒற்றைக் கால் செருப்போட நடந்து வந்ததை நான் இன்டைக்கும் மறக்க மாட்டன். அந்தளவு குளோசாப் பழகினனாங்கள். நேற்றிரவு கனவிலகூட தம்பி சிறீ வந்து, ஏனண்ணை எனக்கொரு விழாவக் கொண்டாடிப் பொல்லாப்பத் தேடுறியள், உங்களுக்கு ஏதும் கீறல் பட்டால் என்னாகிற தெண்டு கவலையாகக் கேட்டவர்.

நான்தான் இல்லை, தம்பி, உம்மட நினைவு தினத்தின்ர பெயரில "அவையப்' புகழ்ந்து பேசினால் உமக்கும் கொண்டாடி அவைக்கும் மன்றாடி ஒரே கல்லில ரெண்டு தேங்காய் விழுத்தி உரிச்சுப் பால் பிழிஞ்செடுத்திடுவனெல்லோ, எண்டு சொல்லத்தான் தம்பி சிறீ, அப்ப சரியெண்டுட்டுத் திரும்பிப் போனவர்."

இதுக்குமேல ஆளின்ர பேச்சைக் கேட்டால் அங்கொடைக்கும் அட்மிஷன் கிடைக்காதெண்டதால, கூட்டத்தை விட்டுத் திரும்பி வந்திட்டன். மீதிப் பேச்சை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கோ.

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# நினைத்து, நினைத்து சிரிக்க

### ஐயோ - என்னை யாராவது லவ் பண்ணுங்களேன்.

காதலனை உடல் நலம் சரியில்லாமல் ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தார்கள். அவனைப் பார்க்கக் காதலி வந்தாள்.

"டாக்டரைப் பார்த்து என்னுடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்து விட்டு வா" என்று காதலியை அனுப்பி வைத்தான் காதலன்.

டாக்டரிடம் அவளும் விசாரித்தாள்.

"அவன் எப்பொழுதும் உன் நினைவாகவே இருந்திருக்கிறான். அதனால் உடல் மெலிந்து மோசமான நிலைக்கு வந்துவிட்டான். அதனால் அவ்வப்போது நீ முத்தம் கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டும். அவ்வப்போது கட்டிப் பிடிக்க



வேண்டும். விருப்பப்பட்டால் செக்ஸ் கூட வைத்துக் கொள்ளலாம். இப்படியெல்லாம் இருந்தால்தான் அவன் உடல் நிலை தேறும். அல்லது வாய்ப்பே இல்லை." என்று டாக்டர் சொன்னார்.

டாக்டரிடம் விசாரித்துவிட்டு வந்த காதலியிடம்,

"என்ன சொன்னார் டாக்டர்" என்று ஆவலுடன் விசாரித்தான் காதலன்.

"நீ சாகப் போற, தேற வழியேயில்லே என டாக்டர் சொன்னார்" என்றபடி நடையைக் கட்டினாள்.

# இந்தவாரம் உங்கள் பலன்

18.05.2003 தொடங்கி 24.05.2003 வரை

**சோதிட மாமணி தில்லை**

### கிரக நிலை

மேடம்- சூரியன், இராகு, மிதுனம்- சனி, கர்க்கடகம்- வியாழன், விருட்சிகம்- கேது, மகரம்- செவ்வாய், மேடம்- புதன், வெள்ளி.

**சந்திரன் விருட்சிகம், தனு, மகரம், கும்பம் இராசிகளில் சஞ்சரிப்பார்.**

**மேடம்:**
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) மனக்குறை நீங்கும், வீருத்தி, காரியானுகூலம், இனசன நன்மை, வெளிநாட்டு வாழ்க்கை, உயர்ந்த நிலை, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சையில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்
அதிர்ஷ்ட இலக்கம்:- 07

**இடபம்:**
(கார்த்திகைபின் முக் கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை) இனசன விரோதம், பலவித பேறு, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், பணவரவு, உத்தியோகச் சிக்கல், மேலதிகாரிகள் தொல்லை. மாணவர் கல்வி மந்தம், பிரயாசமிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**மிதுனம்:**
(மிருகசீரிடத்துப்பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்) தொழில் வீருத்தி, பணவரவு, உறவினர் வருகை, வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி, உத்தியோக பிரயத்தனம், மாணவர் கல்வி குழப்பம், சோம்பல் மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கர்க்கடகம்:**
(புனர்பூசத்துநாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை, பெரியோர் நட்பு, உத்தியோக மேன்மை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி சிறப்பு, பரீட்சைகளில் வெற்றி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்டநாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 03

**சிங்கம்:**
(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்) தொழில் கஷ்டம், பிரயாண மிகுதி, பணவரவு தடை, வெளியிட வாசம், அன்னியர் நட்பு, உத்தியோக முயற்சி, புதிய பதவி கிடைத்தல், மாணவர் கல்வி உயர்ச்சி, பிரயாச மிகுதி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
அதிர்ஷ்டநாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**கன்னி :**
(உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை) மனமகிழ்ச்சி, காரியானுகூலம், உயர்ந்த நிலை, உறவினர் உதவி, தேகசுக நன்மை, உத்தியோகச் சிக்கல், பதவிகளில் மாற்றம், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபரிகள் கடின உழைப்பு
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 06

**துலாம்:**
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்) தொழில் வீருத்தி, பணவரவு, வீண் கவலை, திடீர்ப்பயணம், உத்தியோக நன்மை, கௌரவம். மாணவர் கல்வி குழப்பம், பிரயாசம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- புதன்
அதிர்ஷ்ட இலக்கம்:- 05

**விருட்சிகம்:**
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழில் நன்மை, முயற்சி பலிதம், திடீர்ப் பிரயாணம். செலவு மிகுதி, உறவினரால் கவலை, உத்தியோக உயர்வு, பதவி மாற்றம், மாணவர் கல்வி நன்மை விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்
அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**தனு:**
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) தொழில் சிறப்பு, முயற்சியில் தடை, வீண் கலக்கம், பெரியோர் உதவி, உத்தியோக முயற்சி, பதவிகளில் இடமாற்றம், மாணவர் கல்வி குழப்பம், வீண் துக்கம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- வியாழன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 01

**மகரம்:**
(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை) இனசன நன்மை, காரியானுகூலம், தொழில் மந்தம், அன்னியர் உதவி, உத்தியோகச் சிறப்பு, மாணவர் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்
அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி,
அதிர்ஷ்ட இலக்கம்:- 04

**கும்பம்:**
(அவிட்டத்துப்பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) தொழில் சிறப்பு, இனசன மகிழ்ச்சி, காரியானுகூலம், பணவரவு, திடீர்ப்பிரயாணம். உத்தியோகச் சிக்கல், வீண்குறை கேட்டல், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
அதிர்ஷ்ட நாள்:- திங்கள்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 02

**மீனம்:**
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி) முயற்சி பலிதம், பொருள் வரவு, காரியானுகூலம், உயர்ந்தோர் நட்பு, அன்னியர் உதவி, உத்தியோகக் கஷ்டம், வெளியிடப் பயணம், மாணவர் கல்வி குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
அதிர்ஷ்டநாள்:- புதன்,
அதிர்ஷ்ட இலக்கம்:- 05.



ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

2323657


# ஓடும் தளபாடம்

வீட்டு ஹோலில் போடப்பட்டிருக்கும் சொகுசு சோபா ஹைவே ஒன்றில் வேகமாகப் போகும் என்றால் பார்ப்பவர்களுக்கு எப்படியிருக்கும். ஆனால் அப்படி நடக்கத்தான் செய்கிறது.

வேறுமனே காரில் பயணித்து போரடித்ததால் எட்சைனா, டேவிட் டெவென்போட் என்ற பிரிட்டிஷ்காரர்கள் இருவரும் சேர்ந்து வீட்டு சோபா வடிவில் ஒரு வாகனத்தைத் தயாரிக்க முயற்சித்து வெற்றியும் கண்டிருக்கிறார்கள். 'தி கெசுவல் லோபா' என அழைக்கப்படும் இது மணிக்கு 140 கிலோ மீட்டர் வேகத்தில் செல்லக்கூடியது. 1300cc என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது. இதனை பிரித்தானியா வீதிகளில் ஓட்டிச் செல்ல அந்த நாட்டு அரசாங்கம் அனுமதி வழங்கியிருக்கிறது. சாரதியுடன் மேலும் இரண்டு பேர் பயணிக்கக் கூடிய இடவசதிதான் இதில் இருக்கிறது. ஆனாலும் சோபா மாதிரியே ரொம்பவும் சொஃப்ட்டாக இருக்கும் என்று சொல்கிறார்கள் பயணித்தவர்கள். இது அறிமுகம் செய்யப்பட்டது முதல் சுமார் 10 ஆயிரம் கிலோ மீட்டர் பயணித்துவிட்டது.




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்காது வாசா நகைகள் மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11

செட்டியார் தெரு, கொழும்பு

436331






# கோடி... கோடியாம்

இதென்ன? காலணியைத் தோளில் சுமந்துகொண்டு... இதுவும் ஒரு வகை ஃபேஷன்தான். எத்தனை காலத்துக்குத்தான் காலணிகளை வெறுமனே காலில் மட்டுமே அணிந்து திரிவது? எதெல்லாமோ மேலே... மேலே... ஏறிச் சென்று... ஆபத்தான சமிக்ஞைகளை விடுத்துக்கொண்டிருக்கும் யுகத்தில் இந்த யுவதி தோளில் சுமந்து செல்லும் பாதணி அப்படி ஒன்றும் ரப்பர் செருப்பல்ல. அது பல கோடி டொலர் பெறுமதியானது. உலகில் இதுவரை விலை மிக உயர்ந்த பாதணிகளைத் தயாரித்த பெருமையைப் பெற்றுக்கொண்டுள்ள ஒரு சுவிஸ் நிறுவனம், இதனை முழுவதுமாக வைரக் கற்களைக் கொண்டு வடிவமைத்திருக்கிறது. சுத்தமான வைரத்தை சுற்றிலும் பதித்து, பளபளக்கும் ஒளிக்கீற்றுக்கள் பட்டுத் தெறிக்கும் விதத்தில் மாடல் அழகி ஒருவரின் தோளில் ஏற்றிவிட்டிருக்கிறது.

## 1ஆவது பிறந்தநாள் வாழ்த்து 15.05.2003



### செல்வி கவிநயா (அபி)

வண்டனில் வசிக்கும் அமலன் சாந்தா தம்பதிகளின் செல்வப் புதல்வி கவிநயா (அபி) தனது முதலாவது பிறந்த நாளை 15.05.2003 அன்று Wembleyல் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, வவுனியா பூட்டி இராசலட்சுமி, நெடுந்தீவு அப்பப்பா முத்தையா, அப்பம்மா பொன்னம்மா, செட்டிகுளத்திலுள்ள அம்மப்பா லோகநாதன், அம்மம்மா தேவரத்தினம் மற்றும் பெரியப்பா, பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் அபி குட்டியை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சகல வளமும் பெற்று விநாயகர் துணை கொண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: திரு திருமதி லோகநாதன், செட்டிகுளம், வவுனியா.

# விரலில் வெட்டு



சச்சினின் கையில் ஏன் இந்தப் பெரிய கட்டு? அண்மையில் அவர் காயப்பட்டதாகக் கூடத் தகவல் இல்லையே என்று இரசிகர்கள் யோசிக்கக் கூடும். அப்படிப் பெரிய காயம் ஒன்றும் இல்லைத்தான். ஆனால் அவரது பெருவிரலில் சிலகாலமாகவே இலேசான ஒருவகை வலி இருந்து வந்தது. க்ளவ்ஸ் அணிந்து கொண்டு 'பெட்'டை பிடிக்கும்போது சில அசௌகரியங்கள் இருந்து வந்தன. இப்போது பெருவிரலில் சத்திரசிகிச்சை செய்து அதனைக் குணப்படுத்திக்கொண்டிருக்கிறார் சச்சின். இந்தப் பெறுமதியான பெருவிரலுக்கு மருத்துவம் பார்க்கும் வசதி இந்தியாவில் இல்லையோ என்னமோ? சத்திரசிகிச்சை அமெரிக்காவில் நடந்திருக்கிறது. சமீபத்தில் நியூயோர்க் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டார் சச்சின். மனைவி அஞ்சலியும் ஒரு டாக்டர்தான். சச்சினை விட அஞ்சலிக்கு 6 வயது அதிகம் என்பது போனஸ் தகவல்!



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 18A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் மே 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.